# இருவரல்ல ஒருவர் என்று தெரியுமா!



ரமணிசந்திரன்

# இருவரல்ல ஒருவர் என்று தெரியுமா!



## 1

''அதோ வருகிறானே! அவன் பைக் மாதிரி கேட்கிறதே என்று பார்த்தேன். வா, வா, வா நந்தா. என்னாயிற்று, மச்சி? கொஞ்ச முன்னாலேயே வண்டிச் சத்தம் கேட்டதே!'' என்று நந்தகுமாரனை ஆவலாக வரவேற்றவாறே, அவனுடைய நண்பர்களில் ஒருவனான பசுபதி விவரமும் கேட்டான்.

''நீ உடனே வந்து விடுவாய் என்று, ஆளுக்கு ஒரு கைமா ரோலுக்கு ஆர்டர் வேறு பண்ணி விட்டோம்... இனிமேல்தான் வரப் போகிறது. ஆனால், இவ்வளவு நேரம் காணாததால், என்னவோ என்று கொஞ்சம்

கவலையாகி விட்டதும்மா!'' என்றான் அடுத்தவன், சுந்தர்.

''எங்கே இடம்? அதை முதலில் சொல்லுங்கள்'' என்று நந்தகுமார் கேட்க, மூவருமாகச் சென்று கையைக் கழுவிக் கொண்டு, அவர்களுக்கான இடத்தில் அமர்ந் தனர்.

''பெரிதாக ஒன்றும் இல்லை, மச்சிங்களா, ஒரு கிழவனார், அவரிடம் பர்சை அடித்துக் கொண்டு ஒரு சின்னப் பெண் ஓடி வந்தாள். பிடித்து நிறுத்தினால், நகத்தால் கீறிவிட்டு ஓடப் பார்த்தாள். அவளைப் பிடித்து செக்யூரிட்டியிடம் ஒப்படைத்துவிட்டு, பெரியவரிடம் பையைக் கொடுத்துவிட்டு வந்ததில், கொஞ்சம் தாமதம்! அவ்வளவுதான்'' என்றான் நந்தகுமார் சற்று அலட்சியக் குரலில்.

''என்னது? நகத்தால் கீறினாளா? அதுதான், சோப்பெல் லாம் போட்டு, அவ்வளவு கழுவினாயா? வலிக்கிறதா? காட்டு? முகமே சரியா இல்லையே!'' என்று இரு நண் பர்களுமே கவலை காட்ட, ''கீறல் ஒன்றும் பெரிதில்லை, மச்சி. மனசு எரிச்சல்தான், அதிகம் பார்த்தால், பத்து வயதுக்கு மேல் இராது. படித்த பெரிய இடத்துச் சிறுமி மாதிரி அழகான உடை, அலங்காரம்! இந்தப் பெண் நன்கு பழக்கப்பட்ட மாதிரி, அந்த ஆளைப் போக்குக் காட்டி திருடியிருக்கிறது என்றால், நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? பிடிபட்டால், கீறிவிட்டுத் தப்பு கிற அளவுக்குத் தொழிலைப் பழகி வைத்திருக்கிறது! என்னவோ, 'களவும் கற்று மற' என்று எழுதி வைத் தார்கள் என்று படித்தது போல, ஆனால் படித்ததை விடாமல், அதிலேயே சம்பாதிக்க வேறு செய்கிறது.

முதல் இல்லாத சம்பாத்தியம் என்று, குடும்பமே சேர்ந்து வந்து, விட்டு விடச் சொல்லிக் கெஞ்சுகிறார்கள். நல்ல வேளை, நிறுவனத்துக்குக் கெட்ட பெயராகிவிடும் என்று, நிர்வாகத்தில் போலீசைக் கூப்பிட்டு விட்டார்கள். கொஞ்ச நாளாகவே நடக்கிறதாமே! எல்லாம் சேர்ந்து களி தின்னட்டும். இந்த சர்வர் எங்கேப்பா? சும்மாவே எனக்கு மூடு சரியில்லை...'' என்று எரிச்சல் பட்டான் நந்தா.

அவன் சொல்லக் காத்திருந்தது போல, நண்பர்கள் ஆர்டர் செய்திருந்த உணவு வந்து சேர, மூவரும் உண்ணத் தொடங்கினர்.

இரண்டு வாய் உள்ளே சென்றதும் ''சும்மாவே மூடு சரியில்லை என்றாயே, என்னடா மச்சி, பிரச்சினை? தொழிற்சாலைக்கு ஒழுங்காகப் போகவில்லை என்று, அப்பா திட்டினாரா?'' என்று கேட்டான் பசுபதி.

''முதலில் பேசாமல் உள்ளே தள்ளுங்கப்பா! எல்லாக் கண்ணராவியையும் அப்புறமாகச் சேர்த்து பார்க்கலாம்'' என்று சாஸ் தடவி, கைமா ரோலைக் கபளீகரம் செய்வதில் முனைந்தான் நந்தகுமாரன்.

அவன் உண்ட வேகத்தைப் பார்த்துவிட்டு 'த்ரீ இன் ஒன்' என்று இன்னொரு ரோலுக்கும் ஆர்டர் பண்ணி னான் பசுபதி.

கூடவே அவரவருக்குப் பிடித்த விதமாக மில்க் ஷேக்கும்.

மூன்று பேரும் சின்ன வயதிலிருந்தே நண்பர்கள். பள்ளித் தோழர்கள்.

மூவரில் பணம் அதிகம் உள்ள குடும்பம், நந்தகுமார னுடையது. ஒரே மகன். வீட்டின் செல்லப்பிள்ளை. உல் லாசப் பறவை. பரீட்சைக்கு முன் தினம்கூட, போரடிப்பது போல இருந்தால், பொழுதுபோக்கு நாடிப் போய்விடு வான். கெட்டிக்காரன்தான். ஒவ்வோர் ஆண்டும் ப்ராகிரஸ் ரிப்போர்ட்டில் 'முயன்றால் மிகவும் நன்றாகச் செய்ய லாம்' என்று ஆசிரியரின் அபிப்பிராயம் எழுதப்பட் டிருக்கும்.

என் பையன் வகுப்பிலே முதல் என்று சொல்லும் ஆசை யாரை விட்டது? அதுவும், புத்தியும் இருக்கும் போது! தந்தை ஆதங்கத்தில் சொல்லிப் பார்த்தார்.

ஆனால் "ஒழுங்காக பாஸ் பண்ணுகிறேனே, அத்தோடு விடுங்கள்ப்பா" என்று முடித்து விடுவான், பிள்ளை! விளையாட்டுக்களில் ஈடுபாடு உண்டு. சில போட்டி களில் வெற்றியே பெற்றிருக்கிறான்!

யாருக்கும் பிரச்சினை என்றால், நல்லவர்கள் பக்கம் நிற்கத் தயங்க மாட்டான். ஆனால், அதிகம் அலட்டிக் கொள்ளவும் மாட்டான். எப்போதும் போலவே, இஞ்சினீ யரிங் முடித்துப் பட்டம் பெற்று விட்ட போதும், எந்த வேலையிலும் அமரவில்லை. உதவாக்கரை என்று தள்ளிவிட முடியாமல், அவ்வப்போது தந்தையின் தொழிற்சாலைக்குச் சென்று பிரமாதமாக எதையாவது செய்து வைப்பான்.

கால்கட்டுப் போட்டால் பொறுப்பு வந்துவிடும் என்ற நம்பிக்கை பெற்றோருக்கு.

அடுத்து, சுந்தர் படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். வகுப்பில் முதல் மாணவன். வரவுக்கும் செலவுக்கும் சற்றுத் தாராளமாகக் கட்டிவரும் நடுத்தரக் குடும்பம்.

திறமையாலேயே, பொறியியல் சென்னைக் கல்லூரியிலேயே, விரும்பிய பாடம் எடுக்க முடிந்தது. ஆனால், படிப்புச் செலவுக்குத் தந்தை வீட்டை அடமானம் வைக்க நேர்ந்தது. காம்பஸ் இன்டர்வியூவிலேயே பெரிய வேலை கிடைத்த போதும், வீட்டுக்கடன், தங்கை படிப்புச் செலவு, தாயார் மருத்துவச் செலவு என்று, கையில் அதிகம் மிஞ்சுவது இல்லை.

மூன்றாமவன் பசுபதி, தந்தை பலசரக்குக் கடை வைத்திருந்தார். பொறியியலுக்கு விண்ணப்பமே போடவில்லை. ''எப்படியும் கடையில்தான் உட்கார்ந்தாக வேண்டும். கணக்கு, சோஷியாலஜி இரண்டில் ஒன்று படிப்பேன்'' என்றவன், கணக்கு பி.எஸ்ஸி. ஆனால், மற்ற நண்பர்கள் படித்து முடிப்பதற்கு ஓர் ஆண்டு முன்னதாகவே, கடையில் உட்கார்ந்தும் விட்டான்.

கடையில் சில மாற்றங்களைக் கொண்டு வர, அவனுக்கும் ஆசை. ஆனால் தந்தை வழி விடுவதில்லை. ''அந்த கடை வருமானத்தை வைத்துதான், மூன்று பிள்ளைகளைப் படிக்க வைத்தேன், வீட்டைக் கட்டினேன், உன் தங்கைகள் இரண்டு பேருக்கும் ஒரு குறை இல்லாதபடி கலியாணத்தை நல்லபடியாகப் பண்ணினேன். நமக்கு இது போதும்ப்பா!'' என்பார் அவர்.

''சூப்பர் மார்க்கெட்டுகள் இப்படிப் பெருகும்போது, உன் கடை தாங்குமாடா?'' என்று நண்பர்கள் கவலைப் படுவார்கள்.

''எந்த சூப்பர் மார்க்கெட்டில் கணக்கெழுதி வைத்துக் கொண்டு, மாத முதலில் பணம் வாங்குகிறார்கள்? இந்த புத்தி இருக்கும் வரை, எங்கள் கடைக்கு நஷ்டமே வராது, மச்சி!'' என்பான் அவன்.

''தங்கை படிப்பு முடிந்து, அவளுக்கு ஒரு வேலை கிடைத்து விட்டால், அதன் பிறகு, உனக்கு இலகுவாகி விடும். இல்லையாடா? அவள் பாடத்துக்கு, மிசஸ் ரீடாவைப் பார்க்கச் சொல்லுடா. கெட்டிக்காரப் பெண்களுக்கு சும்மாவே உதவி செய்வார்களாம்'' என்று சுந்தருக்கு, விசாரித்து வந்து ஐடியா கொடுப்பார்கள்.

நந்தகுமார் குணமும், குடும்ப நிலையும் கூட, மற்ற இருவருக்கும் அத்துப்படி என்பதால், அவனது வருத் தத்தில் பங்கெடுத்து, இதமாக பேசுவார்கள்.

ஆளுக்கொரு விதமாக வாழ்வு அமைந்தாலும், மூவரின் நட்பு மட்டும் அப்படியே இருந்தது. சொல்லப் போனால், இன்னமும் பெருகி வளர்ந்தது எனலாம்! குறைந்த பட்சமாக, மாதத்தில் ஒரு நாளாவது மூவரும் சந்தித்து, மணிக்கணக்கில் அரட்டை அடித்தனர்.

பொதுவாக மாதத்தின் மூன்றாவது ஞாயிறு, அதற்கு உகந்த தினமாக இருந்தது! மளிகைக் கடைக்கு அன்று தான் முழு விடுமுறை. மற்ற ஞாயிறுகளில் அரை நாள் கடையிருக்கும்.

பெரும்பாலும் அந்த 'டிப்பார்ட்மென்டல் ஸ்டோரின்' மேல் மாடியில் அமைந்திருக்கும் திறந்தவெளி ஹோட் டலில்தான், மூவரும் சந்திப்பார்கள். அரட்டை அடித்த படியே மெல்ல உண்டு. அப்புறமும் வெகு நேரம் இருந்து விட்டு அவரவர் இல்லம் நாடிக் கிளம்பும்போது இரவே ஆகிவிடும்.

வழக்கம்போல, அன்றும் சந்தித்ததில், நந்தகுமாரின் வருகையே எரிச்சலில் தொடங்கியிருந்தது.

இதுவும் ஒன்றும் புதிதல்ல.

அவ்வப்போது தந்தையிடம், நந்தா வாங்கிக் கட்டுவதும், அதை இங்கே நண்பர்களிடம் அவன் கொட்டுவதும் புதிதல்ல.

அதேபோல, பசுபதியின் புதிய உத்திகளுக்குத் தந்தையின் முட்டுக்கட்டைகள், சுந்தரின் காதல் கஷ்டங்கள், எல்லாமே மூவருக்கும் பொதுதான். ஒளிவு மறைவு கிடையாது.

நிவர்த்திக்க முடியாதபோது, ஆறுதல் மொழிகளேனும் தேற்றும். கூடவே, கேலியும் கிண்டலும் பிரச்சினையை எளிதாக எண்ணவும் வைக்கும்.

அன்றைய பிரச்சினை, ரொம்பவும் வேறாக இருந்தது.

புருவம் சுளித்து யோசித்தவன் வாயிலாகவே வெளிவரட்டும் என்று எண்ணி, மற்ற இருவரும் காத்திருந்தபோது, தன் விஷயம் சொல்வதற்குப் பதிலாக, சுந்தரிடம் கேள்வி கேட்டான் நந்தா. ''சுந்தர், நீ உன் ஆளிடம் சொல்லி விட்டாயா, இல்லையா?'' என்று விசாரித்தான்.

''எங்கே மச்சி, சொல்வது? உனக்கே தெரியும், அவள் குடும்பமும் வசதியானது, என்று. எனக்கோ, வெறுமனே கட்டி வருகிற நிலைதான். இதில் எந்தத் தைரியத்தில், அவளிடம் வாய் திறந்து, இப்படி என்று பேசுவது?'' என்று வருத்தத்துடன் கூறினான் சுந்தர்.

''ஏய் என்னப்பா? இருவருக்கும் அப்படி ஆசை, காதல், என்று புலம்புகிறாய்... அவளிடம் ஒன்றுமே சொல்லாமல் எப்படி?''

சுந்தரின் முகம் புன்னகையில் பளபளத்தது. ''வார்த்தையால் இப்படித்தான் என்று சொல்ல வேண்டுமா,

மச்சான். சும்மா ஒரு பார்வை! கூட்டத்திலே கூட, நாம் மட்டும்தான் இருப்பது போல உணர்வு. காரணம் இல் லாமல், சும்மா ஏதாவது ஒரு பேச்சு! சும்மா... தனியே இருக்கும்போதும், அதே நினைவு!''

''ஏ. ஏ போதும் மச்சான்! ஆனால் இதே உணர்வு அந்த சைடும் இருக்கிறது என்று என்ன நிச்சயம்? நீ சும்மா... ஏதோ சொல்வார்களே... ஆங், ஒரு தலைக் காதல்! அப்படி ஏதும்... ஒருவேளை, எல்லாம் உன் கற்பனை யாகவே இருந்தால்? நீங்கள் இரண்டு பேரும், இது பற்றிப் பேசவே இல்லை என்றால், எனக்குக் கொஞ்சம் ஒரு மாதிரித் தோன்றுகிறது, சுந்தர் பையா. ஒருவருக் கொருவர் எல்லாம் பேசி, ஒருவருக்கொருவர் என்று அறிவித்தே இருப்பீர்கள் என்று எண்ணினேனே!'' என்றான் பசுபதி, ஏமாற்றத்துடன்.

சுந்தரின் முறுவல் மாறவே இல்லை. ''கவலையே படாதே, பதி. மனோகரியைப் பொறுத்தவரை, எனக்கு நூற்றுக்கு நூறு நிச்சயம். அன்றைக்கு கணக்கில் சந் தேகம் என்று என்னிடம் வந்து, ஒன்றும் ஒன்றும் எத் தனை என்று கேட்டு விட்டுப் போனாள்!''

''ஏ... மச்சி, என்னது, என்னது? ஒன்றும் ஒன்றும் எத்தனையாமா? இதைவிடத் தெளிவாக, ஒருத்தி என்ன சொல்லுவாள்? ஆமாம், அண்ணாத்தை என்ன பதில் சொன்னீர்கள்? வழவழா கொழகொழாவா?'' என்று நகைத்தான் பசுபதி.

வெட்கச் சிவப்புடன் ''ஒன்றுதான் என்று சொல்லி விட்டேன்பா. ஆனால் கூடவே, என் கையில் மிஞ்சுவதில், கல்யாணம், குடும்பம் நடத்துவது எதுவும் முடியாது. அதனால், இப்போதைக்கு விடை இரண்டாகவே

இருக்கட்டும் என்றும் சொல்லிவிட்டு வந்துவிட்டேன்'' என்றான் சுந்தர்.

''படிப்பில் கெட்டிக்காரன் என்றால், சும்மாவா? சரியான ஆள்ப்பா நீ!'' என்று பசுபதி கூற, இருவருமாகச் சேர்ந்து சிரிக்கும்போதுதான், நந்தகுமாரின் மௌனம் அவர்கள் கவனத்தில் பட்டு ''என்ன, நந்தா?'' என்று இருவரும் ஒரே குரலாகக் கேட்டனர்.

''என்ன மச்சி, வீட்டில் மண்டகப்படி ரொம்ப அதிகமா?'' என்று சுந்தரும், ''அங்கிள் ஒன்றும், அப்படி அறுக்க மாட்டாரே! என்ன விஷயம்?'' என்று பசுபதியும் அக் கறையோடு வினவினர்.

உச்சுக் கொட்டிவிட்டு ''அதெல்லாமில்லை! ஆனால்...'' என்று சுந்தரை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''உன் ஆளை எனக்குப் பேசுகிறார்கள். இன்றுதான் அப்பா சொன்னார்'' என்று குண்டைத் தூக்கிப் போட்டான்.

பேச்சை மீறிய அதிர்ச்சி சுந்தருக்கு.

அவன் அதிர்ந்து விழிக்கையில் ''என்னப்பா? என்ன சொல்லுகிறாய்? ம... மனோ.. கரியையா? உ... உனக்கா?'' என்று தடுமாறினான் பசுபதி.

''அப்படித்தானே சொன்னேன்!'' என்று எரிந்து விழுந் தான் நந்தகுமாரன்.

''ஆ... ஆமாம். அதைத்தானே சொன்னாய்... ஆனால்'' என்று அவன் இழுக்கவும், குறுக்கிட்டு, ''இப்போது கேட்கிற உனக்கே இப்படி இருந்தால், அப்பா சொல்லு கிறபோது, எனக்கு எப்படி இருந்திருக்கும்?'' என்று தன் அதிர்ச்சியை எடுத்துச் சொன்னான்.

''கஷ்டம்தான். அதுதான் வரும்போதே அப்படி இருந்தாய் போல'' என்று தரையிலிருந்து பார்வையை உயர்த்தாமலே நின்ற அடுத்த நண்பனை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''ஆனால், நீ உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டியதுதானே, மச்சான்? அந்தப் பேச்சே அடங்கிப் போயிருக்குமே!'' என்று பசுபதி வினவினான்.

''செய்திருக்கலாம். அப்படிச் செய்யத்தான் நினைத்தேன். ஆனால், திடீரென்று ஒரு சந்தேகம்! இப்போது சொன்னானே, இரண்டு, ஒன்று கதை! இவர்கள் இருவரும் மனதளவில் ஒருவரே, அவள் வீட்டுக்கும் தெரிந்து, இவன் நிலை உயர்வதற்காகக் காத்திருக்கிறார்கள் என்பதுபோல நினைத்திருந்தேன். அப்படியிருக்கையில், எப்படி மணம் பேசி, எங்கள் வீட்டுக்கு வந்தார்கள் என்று குழப்பம்! இவன் எப்போதும் கண்ணில் மயக்கத்தோடு அரை குறையாகப் பேசுவது, இருவரும் நடந்து கொள்வது பார்த்து நமக்கு ஒரு ஊகம்தானே? இவன் விஷயம் எந்த நிலை என்று தெரியாமல் நானாக எதையும் வெளியிட்டுச் சொல்ல முடியாதே. குடும்பத்துப் பெண் விஷயம்! எதையும் சொல்ல முடியாமல், இப்போது திருமணம் வேண்டாம் என்றேனா? அம்மா, அப்பா இருவரிடமும் சேர்த்து நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டேன். குலம் தழைக்க வேண்டுமாம். பேரனாவது வந்து தொழிலைப் பார்க்க வேணுமாம். பெண் நல்லவள், நல்ல குடும்பம், அது இது என்று, என்னைப் பிய்த்துப், பிடுங்கி விட்டார்கள்! யோசித்துச் சொல்கிறேன் என்கிற வரை, விடவில்லை! ஒருவாறு தப்பித்து இங்கே வந்தால், அந்தத் திருட்டுக் கும்பல், கடைசியாக, இவன் வேறு, இப்போதைக்கு இரண்டாகவே இருக்கட்டும் என்று சொல்லி விட்டு வந்தானாம்! உங்களைச் சந்திக்க வருவது

அப்பாவுக்குத் தெரியும். வீட்டுக்குப் போனதும் உன் சினேகிதர்களாவது, நல்ல புத்தி சொன்னார்களா என்று கேட்கப் போகிறார். எப்படிச் சமாளிக்கப் போகிறேனோ?'' என்று நீளமாகப் பொரிந்து கொட்டி முடித்தான் நந்தா.

மெல்ல நிமிர்ந்து, நண்பனைப் பார்த்தான் சுந்தர்.

ஒரு பெருமூச்சுடன் ''வாழ்த்துக்கள், நந்தா. ஆனால் இனி நாம் சந்திக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். என்னால் முடியாது'' என்றான் கரகரத்த குரலில்.

''வாழ்த்துக்களா? பெரிய தியாகி என்று நினைப்பா? இது போல இன்னும் ஒரு வார்த்தை சொன்னால், செருப்பாலேயே அடிப்பேன்! என்னடா, மடத்தனமாகப் பேசுகிறாய்? அவளை வைத்து, மனதில் என்னென்ன கற்பனை செய்திருப்பாய்? அவளைப் போய், நான் எப்படி மணப்பேன்? எப்போது பார்த்தாலும் 'ஞை ஞை' பண்ணாமல், என் பெற்றோர் ஒத்துக் கொள்ளும்படி இதை மறுப்பதற்கு ஒரு வழி தேட வேண்டும், அவ்வளவு தானே? யோசிப்போம். மூன்று மூளைகளில் ஒன்றுக் கேனும் உருப்படியான ஐடியா ஒன்று வராதா? இரவெல் லாம் யோசித்துப் பார்ப்போம்! ஏதாவது வழி நிச்சயம் பிறக்கும்!''

சலிப்புடன் உச்சுக் கொட்டினான் சுந்தர் ''நீ மறுத் தால், இன்னொரு பணக்காரன்! நான் இருக்கிற நிலை யில், அவள் வீட்டுக்குப் போய் பெண்ணைக் கொடு என்று வாயைத் திறக்கவே, இப்போதைக்கு முடியாது. வெறுமனே ஆசைப்பட்டு என்ன பயன்?'' என்றான் வருத்தமாக.

''அதுதான் இல்லை!'' என்றான் நந்தகுமாரன். ''டக் கென்று உன் மனோகரிக்கு அப்படி எதுவும் கூடிவிடா

துடா. உன் மாமியார், மாமனார், இப்படித்தான் என்று என் பெயரைச் சொல்லிக் கொஞ்சம் பரப்பி விட்டார்களாம். அப்பாவிடம் வேண்டாம் என்று சொன்னபோது கூட, இதைத்தான் சொன்னார். ஜாதகம் பொருந்தினால், பையனிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, ஏற்பாடு செய்து விடலாம் என்றாராம். ஜாதகப் பொருத்தமும் இருக்கவே, அப்பா பேச்சை நம்பி, இங்கேதான் சம்பந்தம் என்று சொல்லிச் சொல்லி, ஊரெல்லாம் பரப்பி விட்டார்கள். நாம் நிறுத்தினால், நமக்காகவே அந்தப் பெண்ணைக் கேட்டுவர நிறையப் பேர் தயங்கி விடுவார்கள். பெண் பாவம் பொல்லாது என்பதுதான், அப்பா, அம்மாவின் முக்கிய வாதம்! அதனால், சும்மா பண்ணிக் கொள். உனக்கும் ஆக வேண்டியதுதானே என்று நிலையாக நின்றார்கள். அதனால், உன் மாமனார் நினைக்கிற மாதிரி சம்பந்தம் வருவதற்குக் கொஞ்ச நாள் தள்ளும். அதற்குள், உன் நிலைமையை உயர்த்திக் கொண்டாய் என்றால், உன் மனம் போல எல்லாம் நடக்கும். இப்போதைக்கு, இந்தப் பேச்சை நிறுத்த, நல்ல வழி தேட வேண்டும். அதுதான் உடனடிப் பிரச்சினை!'' என்று மறுபடியும் நந்தா நீளமாகப் பேசி முடிக்க, சுந்தரின் முகம் ஒருவாறு தெளிந்தது.

''சரி, அதை இரவு தனித்தனியாக யோசிப்போம். இப்போது அந்த ஷோக்கு அவன்தான் அசோக் திருமணம். அதற்குப் பரிசு வாங்க வேண்டும் என்று பார்த்தோமே, போய்ப் பார்ப்போமா? மூன்றாவது தளம் முழுதும் பரிசு கொடுக்கத் தக்க பொருட்கள்தான்.''

பசுபதி சொன்னதை ஏற்று, மூவரும் சென்று ஆளுக்கு ஒரு பொருளை வாங்கிக்கொண்டு, பில் போட வரிசையில் நின்றார்கள்.

''கல்யாண சீசன் என்றதும், இதுபோலப் பொருள் வாங்கக்கூட, எவ்வளவு கூட்டம் பார்!'' என்று சுந்தர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ''மச்சி அந்த பில் போடுகிற பெண்ணைப் பார். அவள், நம் பள்ளியில் படித்தவளில்லை? தினம் ஒரு காரில், அவளுடைய அண்ணன்மார், அவளைக் கூட்டிப்போக வருவார்களே! இவள் கூட, நம்மையெல்லாம் மெப்பாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, ஸ்டைலாகக் காரில் ஏறி உட்காருவாளே! இவள் எப்படி இப்படி?'' என்று நந்தகுமாரன் வினவினான்.

மளிகைக்கடைக்கு நிறைய விஷயங்கள், தேவைப்பட்டது, படாதது எல்லாமே வந்து சேரும். இந்த விவரமும் பசுபதியே சொன்னான்.

''பாவம்டா, அவள். வந்தனா என்று பெயர். நமக்கு மூன்று வகுப்பு கீழே என்றாலும், நன்றாகப் படிக்கிறவள் என்று தெரியும்தானே? எம்பிஏ படித்துக் கொண்டிருந்தாள். போன வருஷம் வரை, எல்லாம் நன்றாகவே போய்க் கொண்டிருந்தது. இரண்டு மாதம் முன்பு, அப்பா திடீரென்று போய்விட, இவள் அண்ணன்மார் இருவரும், அவளை வீட்டை விட்டு விரட்டி விட்டார்கள். காசு இல்லாமல், பணம் கட்ட முடியாததால், இவள் படிக்கும் இடத்தில் எம்பிஏக்கு மூன்று லட்சம் கட்ட வேண்டுமாமே, அது இப்போது முடியாது என்பதால், மேலே படிப்பைத் தொடர முடியவில்லை. அத்தோடு வயிற்றுப் பாட்டுக்கே ஒன்றும் தர முடியாது என்று விட்டான்கள். வேறு வழியில்லாமல் இந்த வேலை பார்க்கிறாள். ஒரு வசதியும் இல்லாத ஒரு மோசமான விடுதிப்பா, அதில் மூன்று பேரோடு ஓர் அறையில் தங்கியிருக்கிறாள்'' என்று அவளது கதையைச் சொன்னான்.

பார்த்தால் கண்ணீர், சோகம் எதுவும் வெளியே தெரிய வில்லைதான். லேசான கர்வம் போலக் கூடத் தோன்றக் கூடும். ஆனால், உள்ள நிலைமை தெரிந்ததால், உள்ளே நொறுங்கி இருப்பதை மறைக்கும் முயற்சியாக, இறுக்க மாகவே நந்தாவுக்குத் தோன்றியது.

''என்னடா பைத்தியக்காரத்தனம்? சட்டப்படி அப்பா சொத்தில், பெண்களுக்கும் இப்போது உரிமை உண்டே, உரிமையோடு கேட்டு வாங்க வேண்டியதுதானே?'' என்று வரிசையோடு முன்னே நகர்ந்தபடி கேட்டான்.

''சட்டம் அதுதான். ஆனால், அதைக் கடைப்பிடிப்பது எத்தனை பேர்?''

''இவள் படித்தவள். அறியாமையைக் காரணம் சொல்ல முடியாதே!''

''கரெக்ட்! தன் உரிமை பற்றி அவள் சொன்னதுதான் பெரிய தப்பாகிப் போய்விட்டது. போ, போய்க் கேஸ் போட்டே வாங்கிக் கொள், என்று அடியோடு கட் பண்ணி விட்டார்கள்! தந்தையின் இழப்பில் வந்தனா நிலை குலைந்து கிடந்தபோது, எதெதிலோ கையெழுத்து வாங்கினார்கள் போல. விடுதலைப் பத்திரமாகவும் இருக்கலாம்! அப்பாவுடைய அன்பு மகளாக இருந்த போது, வந்து வந்து கொஞ்சிய உறவினர்கள் எல்லோரும், கல் விழுந்த காக்கைக் கூட்டமாகக் காணாமல் போய் விட, தனி ஆளாக இவளால் சமாளிக்க முடியவில்லை. கடைசியில், இந்த வேலையேனும் கிடைத்ததே என்று ஆகிவிட்டது'' என்றான் பசுபதி.

''ஓ!''

குனிந்த தலை நிமிராமல், பில் போட்ட விதம், அவர்களை அறிந்து, வந்தனா அவமானத்தில் குன்றிக்

குறுகுவதை உணர்ந்த, மூன்று நண்பர்களுமே விரைந்து பணம் கட்டிவிட்டு, அகன்று சென்று விட்டார்கள்.

தளத்தை விட்டு வெளியே செல்லும்போது, வாயில் அருகே சென்று திரும்பிப் பார்த்த நந்தகுமாரனுக்கு, அவள் பெருமூச்சு விடுவது, நன்றாகவே தெரிந்தது.

இரண்டே நாட்களில் ''பிரச்சினைக்கு விடிவு வந்து விட்டது'' என்று நண்பர்களுக்குச் செய்தி அனுப்பினான் நந்தகுமாரன்!



# 2

அன்று வேலை முடிந்து சோர்ந்து திரும்பும்போது, வந்தனாவின் மனம் மிகவும் சோர்ந்து போயிருந்தது. உடம்பு, மனம் எல்லாமே!

இதுதான் வாழ்க்கை என்று ஆகிவிடுமா?

இப்படியே, இந்த கவுண்டரில் நின்று பில் போட்டுப் பணத்தை எண்ணி வாங்கிக் கொண்டு... தலை நரைத்து, தோலில் சுருக்கம் விழுந்த கைகளால், நடுக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு பில் போடுவது போல ஒரு கற்பனை தோற்றம் தானாக மனதில் எழ, அவளது நெஞ்சுக்குள் சிலீரிட்டது.

அப்படித்தான் முடியப்போகிறதோ? ஏனெனில், இதி லிருந்து மீள்வதற்கு ஒரு வழியையும் காணவில்லையே!

அவள் ஒன்றும் எதுவும் தெரியாத முட்டாள் அல்ல. தந்தையின் சொத்துக்களில் அவளுக்குப் பங்கு உண்டு

என்று அவளுக்கும் தெரியும். ஆனால், அப்படி எதையும் அடைவதற்குத் தடையாக, அவளுடைய அன்பான தந்தையே பெரிதாக ஒரு முட்டுக் கட்டையையும் போட்டு வைத்திருந்தார்.

பெண் எப்படியும் திருமணமாகி அடுத்த வீடு செல்ல வேண்டியவள். தொழிலில் அவளுக்குப் பாகம் கொடுத்தால், அவளுடைய கணவன், அவன் வீட்டார் உரிமையோடு உள்ளே நுழைவார்கள். மாப்பிள்ளை மரியாதை என்று சங்கடமான சூழ்நிலை உருவாகிவிடும்.

ஏற்கனவே, அவருடைய நண்பர் ஒருவர், அவரது ஹோட்டலை மகன், மகள் இருவருக்கும் பொது என்று உயில் எழுத, அவர் இறந்ததும், மருமகன் வந்து கல்லாவில் உட்கார்ந்து கொண்டு, மகனை உள்ளே வரவிடாமல் விரட்டி விட்டான். தங்கைப் பாசத்திலும், வெளிப்படையாக வீட்டு மாப்பிள்ளையிடம் சண்டை போட மனமற்றும், பையன் விட்டுக் கொடுத்து விட்டு, வெளியூரில் ஏதோ ஒரு வேலையில் அமர்ந்து, ரொம்ப சாதாரணமாக வாழ்கிறான் என்று கேள்வி.

இந்த நிலை தன் பிள்ளைகளுக்கு வரக்கூடாது என்று நினைத்து, இரண்டு ஃபாக்டரிகளையும், ஆளுக்கு ஒன்றாக மகன்களுக்கே, அவளுடைய தந்தை எழுதி வைத்திருந்தார்.

அவரது எண்ணம், ஆசை என்றே கூறலாம். மகளுக்கு நல்ல இடத்தில் சிறப்பாகத் திருமணம் செய்து, அவள் கைக்குப் பெரிதாக வாடகை தருகிற மாதிரி பெரிய வீடு வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பது.

எல்லாம், தான் இருந்து செய்யப் போவதாகத்தான் எண்ணியிருந்தார்.

ஆனால், காலனின் கணக்கு வேறாக இருக்கும் என்று, குடும்பத்தில் யாருமே எதிர்பார்க்கவில்லை! எல்லாம் திடுமென, ஃபாக்டரியில் இருந்து கிளம்பியவர், வீடு வந்து சேரும்முன் முடிந்தே விட்டது.

வெறும் வாய்வுத் தொல்லை என்று அவர் அலட்சிய மாகக் கருதியது. இதய நோயாக இருந்திருக்கிறது. இதைப் பிறகு கண்டு பிடித்து என்ன செய்வது?

ஆனால், அவருக்கு பிறகு வீட்டில் நடந்ததுதான், அவள் சற்றும் நம்ப முடியாத, இன்னமும் முழுதாக மனதில் ஏற்றுக் கொள்ள முடியாத பயங்கரம்!

'கண்ணும்மா' என்று செல்லமாக அழைப்பார் அவ ளுடைய தந்தை. தளர் நடை வயதிலேயே தாயைப் பறி கொடுத்த மகள் மீது, அவ்வளவு பிரியம். அவளது விருப்பத்துக்கு மறுப்பே இராது.

ஆனால், அவளுக்கும் ஏடாகூடமான விருப்பங்கள் எதுவும் இருந்ததில்லை.

நன்றாகப் படிப்பாள். ஆசிரியர்கள் சிலாகித்துப் பேசும் போது, ரொம்பவும் சந்தோஷப்படுவாள்.

அதானாலேயே, திருமணம் செய்யலாமா என்று தந்தை கேட்டபோது, படிப்பு ஆர்வத்தில், எம்பிஏ படித்து முடித்தபிறகு என்றாள்!

தப்போ? அப்போ கேட்டபோது சரியென்று தலையாட்டி யிருந்தால், அது எப்படிப்பட்ட வாழ்க்கையாக இருந்திருந் தாலும், இப்போது அவளுக்கு என்று ஒரு தனி முகவரி இருந்திருக்கும்!

இன்று, அப்படி எதைச் சொல்வது? இதை விடக் கொஞ்சமேனும் அதிக ஊதியம் கிடைக்கக்கூடிய வேறு

வேலை தேடிக்கொண்டேதான் இருக்கிறாள். அப்படி ஒரு வேலை கிடைத்தால், இந்த விடுதியிலும் தொடர்ந்து இருக்க மாட்டாள்.

பின்னே, முகவரியாக எதை நினைப்பது?

ஆனால், அன்றைக்கு அப்பா கேட்டபோது, இது போன்ற சிறு உறுத்தல்கூட மனதில் தோன்றவில்லை!

ஆண்டுக்கு மூன்று லட்சம் கட்டி, மற்ற செலவு களையும் செய்து படிக்க வைக்கத் தயாராகத் தந்தை இருக்கும் பெருமை! அவளது படிப்புத் திறமையை ஆசிரியர்கள் எல்லோருமே பாராட்டினார்களே என்று அந்தத் தலைகனம் வேறு!

ஒரு முழு வருஷம் படித்து முடிக்கும்வரை, அதே உற்சாகம்தானே?

அடுத்த ஆண்டுதான் விதி அவளது காலை வாரி விட்டுவிட்டது.

அன்பான தந்தை இறந்தது ஒரு பெரும் துக்கம் என்றால், மேற்கொண்டு அவளது படிப்புக்குப் பணம் தர முடியாது என்று அண்ணன்மார் சொன்னது, மாபெரும் அதிர்ச்சி!

முதலில் அண்ணன்மார், ஒருவருக்கொருவர்தான் அடித்துக் கொண்டார்கள். ''உன் கல்யாணத்தில் இவ்வளவு செலவு செய்தார் அப்பா, என் பங்கில் அதைக் கூட்டித் தர வேண்டும்'' என்று சின்ன அண்ணன் வாதாடினான்.

''நானா செலவு பண்ணச் சொன்னேன்? செலவு செய்த வரைக் கேட்க வேண்டிய கேள்வி!'' என்றான் பெரிய அண்ணன் அலட்சியமாக.

"செத்துப் போனவரைக் கேட்பதா? என்ன திமிர் இருந்தால், என்னையும் சாகச் சொல்லுவாய்?" என்று சின்னவன், ஆத்திரமாகக் கத்தினான்.

"செலவைச் செய்தவர் அவர். அதைப் பற்றிக் கேட்பதானால், அவரிடம்தானே கேட்டாக வேண்டும்? அதை நீ, உயிரோடு இருந்து கேட்டாலும், அல்லது இறந்து போய்க் கேட்டாலும், எனக்கு ஒன்றுதானே!"

"பாவி! படுபாவி! என்னைச் சாகவா சொல்லுகிறாய்? ஒரு பைசா, உனக்கு விட்டுத் தருகிறேனா, பார்!"

என்ன இது? பணத்துக்காக அவளுடைய அன்பு அண்ணன்மார், இப்படி அலுத்துக் கொள்கிறார்களே என்று நினைப்பாள். ஆனால், இது அவர்களுக்கு இடையே உள்ள பிரச்சினை! இருவரும் ஒரே விஷயத்துக்காகச் சண்டையிடும்போது, அவள் எந்த அண்ணனுக்காகவும் பேச முடியாது!

இந்தச் சண்டையைக் கேட்டு சகிக்க முடியாமல் விலகிச் சென்றபோது, அண்ணி காதைப் பொத்திக் கொண்டு அமர்ந்திருப்பது தெரிந்தது.

பரவாயில்லை, அண்ணி நல்லவள்தான். கணவனுக்கு மூட்டிக் கொடுக்காமல், ஒதுங்கி வந்து உட்கார்ந்து விட்டாளே! அப்பா பார்த்த மருமகள்!

ஹாலில் மாட்டியிருந்த அப்பாவின் படத்தைப் பார்த்துக் கண் கலங்கியவாறே, வந்தனா அவளது அறைக்குச் சென்றாள்.

அண்ணன்மாரின் சண்டை ஓயட்டும், இந்த ஆண்டு கல்விக் கட்டணத்துக்குப் பணம் கேட்கலாம் என்று தள்ளிப் போட்டுக் கொண்டே வந்த வந்தனா கடைசியில் பொறுமை இழந்து, தன் தேவையைச் சொன்னாள்.

எப்படியும், அவள்தான் இருவருக்குமே செல்லத் தங்கை ஆயிற்றே, அவளுக்குத் தேவை என்றால், இரண்டு பேருமே பாங்க்கில் கொடுத்து விடுவார்கள்.

அவளது கணக்கிலும், தந்தை பணம் போடுவதுண்டு. ஆனால் அவ்வப்போது அதை எடுத்துத் தங்கக் காசாக மாற்றி, லாக்கரில் வைத்து விடுவார். அவளது திருமணத்தின் போது, அப்போதைய நாகரீகத்தின்படி, நகைகள் வாங்கிக் கொள்ளலாம் என்பது, அவரது ஐடியா.

அவர்களுக்குள் என்ன கணக்குப் பார்த்தாலும், ஆளுக்குப் பாதியாக இந்தப் பணத்தைக் கட்டுவதில் ஒரு பிரச்சனையும் இருக்காது!

ஆனால் ''மூன்று லட்சமா? மூன்று ஆயிரம் கூடத் தர முடியாது'' என்றனர் இருவருமே, அதில் மட்டும் ஒற்றுமையாக!

முதலில் வந்தனாவுக்கு, அவளது காதுகளையே நம்ப முடியாத நிலை! அதெப்படி, அவளுடைய அண்ணன்கள், இதுபோலச் சொல்லுவார்கள்?

இதே அண்ணன்மார், எவ்வளவு பிரியமாகத் தினமும் பள்ளிக்கும் கல்லூரிக்கும் வந்து, அவளை காரில் வீட்டுக்குக் கூட்டிப் போவார்கள்!

காரை எடுத்து வந்த அண்ணன் கையை நீட்டி, முன் கதவைத் திறந்துவிட, சுற்றிலும் ஒரு பெருமிதப் பார்வையோடு அவள் ஒயிலாகக் காரில் ஏறி அமர்வதும், எத்தனை பேர், ஆவென்று பார்த்துக் கொண்டிருப்பார்கள்!

அதிலும், இந்த நந்தகுமாரனும் பணக்காரன் என்று பேர்தான். ஆனால், அவனே பள்ளிக்கு, பைக்கில்தான்

வருவான். விலை உயர்ந்த பைக்தான் என்றாலும், கார் மாதிரி ஆகாதே!

அதனால், ஒரு மாதிரிப் பார்த்துவிட்டு, உடனே திரும்பிக் கொள்வான்! அவளுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும்!

அவன் பிளஸ் டூ முடித்துப் பள்ளியை விட்டுச் சென்ற பிறகு, மேலே அவளது இரண்டு வருடப் பள்ளிக்காலம், மூன்று ஆண்டுக் கல்லூரிக் காலம், எம்பிஏ படித்த இன்னுமோர் ஆண்டு, வந்தனா அவனைச் சந்தித்ததே இல்லை எனலாம்.

எங்கேனும் போக வர இருக்கும்போது வழியில் கண்ணில் பட்டிருக்கலாம்.

ஆனால், அறிமுகமான நபர் என்று, அரைப் புன்னகை செய்யுமளவு கூட, நின்று அவனையோ, அவனுடைய நண்பர்களையோ அவள் பார்த்தது கிடையாது.

ஆனால், இன்று... இப்போது... இப்படி இறங்கிய நிலையிலா, பார்க்க நேர வேண்டும் என்று, அவளது மனம் தவியாய்த் தவித்தது!

சும்மாவே, தன் தகுதிக்கு மிகவும் குறைவானது என்று, அவளுக்குப் பிடிக்காத வேலை, உள்ளூர சோர்வு தான், வருத்தம்தான். செய்வன திருந்தச் செய்ய வேண்டும் என்ற பிடிவாதம்தான். வேலையில் குற்றம் குறை நேர விடாமல் காத்தது என்று கூடச் சொல்லலாம்.

அதே ஊரில் வேலை எனும்போது, அறிந்தவர்கள், தெரிந்தவர்களைப் பார்க்க நேருவதுதான். அவர்களும், உண்மையோ, நடிப்போ, இரக்கம் காட்டி ஒரிரு வார்த்தைகள் சொல்வதுதான்.

ஆனால், அன்று அந்த மூன்று நண்பர்களையும் சேர்த்துப் பார்த்ததோ என்னவோ, அவளை மிகவும் பாதித்து விட்டது. அழுகைகூட வந்தது.

ஆனால், அங்கே நின்று அழுது கொண்டு பில் போட முடியாதே! அதிலும், திருமண சீசன் என்பதால், பரிசுப் பொருட்கள் வாங்க வந்த கூட்டம் வேறு நிறைய இருந்து வெறுமனே முகத்தைக் கழுவி வரக்கூட வழியின்றி, வேலை மிகுதியில் அவளுக்கு விழி பிதுங்கியது.

எட்டரை மணிக்கு ஷட்டரைப் போட்ட பிறகும், உள்ளிருந்த கூட்டம் சென்று, கணக்கு முடித்து, 'ஸ்டோரி'லிருந்து வந்தனா கிளம்பும்போது, மணி ஒன்பதாகப் பத்தே நிமிஷங்கள் தான் இருந்தன.

நின்று நின்று அலுத்த கால்களுக்கு சிறு ஓய்வு கூடக் கொடுக்க நேரமில்லாமல் அவள் விடுதிக்கு ஓட வேண்டியிருந்தது.

ஒன்பது மணிக்குள் விடுதிக்குப் போய்ச் சேரவில்லை என்றால், இரவு உணவு கிடைக்காது. எண்ணைப் பசையே இல்லாத எலுமிச்சை, அல்லது புளி சாதமே என்றாலும் வயிற்றுப் பசியை ஆற்றுமே!

தொண்டைக்குள் இறங்காமல் விக்கிய சாதத்தைத் தண்ணீரைக் குடித்து விழுங்கிவிட்டுப் படுக்கையில் விழுந்த வந்தனாவுக்கு, உடம்பு அலுத்திருந்த போதும், உறக்கம் வர மறுத்தது.

எப்போதும் இருக்கும் சிந்தனையாக, இந்த நிலை மாற என்ன செய்வது என்ற யோசனை! பலதும் யோசித்து, ஒன்றும் பலனில்லை என்றும் ஓயும்போதே, உடல் களைப்பில் அவள் தூங்கி விடுவது வழக்கம்.

ஆனால் இன்று அது முடியாமல், வேண்டாத நினைவு களே வந்து வந்து அவளை வாட்டின.

மற்றபடி, நினைவறியாக் காலத்திலேயே இறந்து விட்ட தாயின் ஏக்கம் இப்போது வருவானேன்?

அம்மா இருந்திருந்தால், பெண்ணுக்கு அணிவித்து அழகு பார்க்க என்றே, சில பல நகைகளை வாங்கிச் சேர்த்திருப்பாள் அல்லவா? அழகாக அணிந்து கொள்ளக் கையிலும் கொடுத்திருப்பாள்.

இந்த ஆண்டுப் படிப்புக்கான கட்டணத்தை அந்த நகைகளை விற்றே கட்டியிருக்கலாம். இப்படிப் பணமில் லாமல் படிப்பை விட்டிருக்க நேர்ந்திராது என்று, எண் ணும்போதே, இந்த எண்ணமும், கூடவே ஏக்கமும் அர்த்தமற்றவையே என்ற உண்மை நினைவு வந்தது.

ஏனென்றால், அப்படியே அம்மா நகைகள் வாங்கித் தந்திருந்தாலும் அவைகளை எடுத்துச் செல்ல, அண் ணன்மார் நிச்சயமாக விட்டிருக்க மாட்டார்கள். அப்படி ஏதாவது நகை, தொகை இருக்குமோ என்ற ஐயத்தில், ஏதோ திருட்டுப் பொருள் தேடுவது போல, அவளது துணிகளைக்கூட, உதறி எடுத்து சோதித்துதானே, கொடுத் தனுப்பினார்கள்! அது கேவலம் என்பதுகூட இல்லையே!

எனவே, இந்த அம்மா பற்றிய கற்பனை கூடப் பய னற்றதே!

வெறுப்புடன் புரண்டு படுத்தவளுக்குச் சட்டென நினைவு வந்தது.

இன்னும் அவள் பல் துலக்கவில்லை, குளிக்கவில்லை!

காலையில் இதையெல்லாம் செய்வது என்றால், நேரத்துக்கு வேலைக்குப் போய்ச் சேர முடியாது! எவ்வளவு

களைப்பாக இருந்தாலும், இப்போதே பல் துலக்கி, குளித்து முடிக்க வேண்டும்.

காலை எழுந்ததும், வெறுமனே பிரஷ்ஷால் தேய்த்து வாய் கொப்பளித்துவிட்டு, உடையை மாற்றிக் கொண்டு கிளம்பி விடலாம்.

இரண்டு நாட்கள் தாமதமாக வேலைக்குச் சென்று, இந்த வேலையும் கைவிட்டுப் போய்விடுமோ என்கிற நிலை வரை சென்று, அதைத் தவிர்ப்பதற்காகவே அவள் கடைப்பிடிக்கும் வழி முறை இது!

அடுத்தவர் பயன்படுத்திய அடையாளங்களைப் பார்த்து அருவருத்தபடியே குளித்துவிட்டு வந்து படுத்தாள் வந்தனா.

வழக்கம்போலக் காலையில் வெகு சீக்கிரமாக எழுந்து, முதலில் வந்தனா உடையை மாற்றி விடுவாள். எல்லோரும் பெண்களே என்றாலும், மற்றவர்களைப் போல, அடுத்தவர் முன்னிலையில் உடையணிய அவளால் முடியாது, கூசும்!

மற்ற இருவரும், அதற்காக அவளை ஜாடையாகக் கேலி கூடப் பேசுவார்கள்.

ஆனால் வளர்ந்த விதம் என்று ஒன்று இருக்கிறதே! 'அட்டாச்டு பாத்ரூமோ'டு ஒரு பெரிய தனி அறை, நினைவு தெரிந்த நாளில் இருந்து, அவளதாக இருந்த பழக்கம். கதவைத் தட்டாமல், தந்தை உட்பட யாருமே உள்ளே வர மாட்டார்கள்.

அப்படி வளர்ந்துவிட்டு, இதுதான் வாழ்வு என்றால், வேறு வழியின்றி சகித்தாளே தவிர, அருவருப்பும் வெறுப்பும், கூடவே துக்கமும் பெருகிக் கொண்டேதான் போயிற்று!

எப்போது இந்த துக்கம் கடலாகப் பெருகி, அவளையே மூழ்கடிக்கப் போகிறதோ?

மாற்றிய துணிகளை மடித்துப் படுக்கை மேலேயே போட்டுவிட்டு, கைப்பையை எடுத்துக் கொண்டு, கடனே என்று காலை உணவுக்கு வந்தனா கிளம்பிய போது, அங்கே எடுபிடியிலிருந்து எல்லா வேலைகளை யும் செய்யும், ரோசம்மா அறைக் கதவைத் தாண்டி, அவளருகே வந்து நின்றாள்.

வரலாமா என்று ஒரு வார்த்தை அனுமதி கேளாமல், எப்படி வந்து நிற்கிறாள்!

இதுவே அவள் வீட்டில் நடந்திருந்தால், ரோசம்மாவின் வேலை போயிருக்கும்! ஆனால், இது அவள் வீடல் லவே! இது மட்டுமல்ல, இப்போது எதுவுமே!

உள்ளூரக் குமுறியவாறே, பார்வையைத் திருப்பிக் கொண்டு, கட்டிலடியில் கிடந்த செருப்பை வந்தனா மாட்டியபோது, அவளையே அழைத்து ''த பாரு, உன் னயப் பார்க்க, கவுனரு வந்திருக்காரு!'' என்றாள் ரோசம்மா.

கவுனரு! ஒழுங்காக உடை அணிந்தாலே ரோசம்மா வுக்கு 'கவுனரு'தான்.

ஆனால், அப்படி யார் அவளை, இங்கே தேடி வரப் போகிறார்கள்?

ஒருவேளை அதிசயத்திலும் அதிசயமாக, அண்ணன் மாரில் எவனுக்காவது மனது இளகி விட்டதா?

அப்படி நடப்பதற்கில்லை என்று, மூளை அடித்துச் சொன்னபோதும், நம்ப இயலாத அதிசயங்களும், வாழ்க் கையில் நடக்கத்தானே, செய்கின்றன என்று, மிக மிக மெல் லியதான ஒரு நம்பிக்கையுடனேயே சென்றாள் வந்தனா.

ஆனால், கம்பிக் கிராதியிட்ட வெளிக் கூடத்தில் அவளுக்காகக் காத்து நின்றவனைப் பார்க்கையில் தன் கண்களையே அவளால் நம்ப முடியாத பிரமிப்பு!

தலை நிமிர முடியாத அவமானம்!

அவளைத் தேடி வந்திருக்கிறானே, அன்று பெருமை யாகப் பார்த்துவிட்டுப் போனாயே; இன்று இந்த நிலையில் இருக்கிறாயே என்று ஏளனம் செய்வானா?

அப்படிக் கூடத் தேடி வந்து அவமானப்படுத்து வார்களா? அதுவும், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு? அது வும்கூட, தானாகவே மனம் நொந்து, வெந்து சாம்ப லாகிக் கொண்டிருப்பவளை?

முடிந்த வரை, முகத்தைச் சலனமற்றதாக வைத்துக் கொண்டு, ''நீங்கள் என்னைத் தேடி வந்ததாக, ரோசம்மா சொன்னாள். என்ன விஷயம் மிஸ்டர் நந்தகுமார்?'' என்று மனதில் இல்லாத அமைதியைக் குரலில் காட்டிக் கேட்டாள் வந்தனா.

அவனுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது. கூடவே இந்த நிலையில் இருந்தும், கெத்தாகப் பேசுகிறாளே என்று வியப்பாகவும் இருந்தது.

பரவாயில்லை. இந்த அளவுக்கு நடிக்கத் தெரிந்திருப் பது நல்லதே! அப்பா, அம்மாவைச் சமாளிப்பது, இலகு வாக இருக்கும்!

ஆனால், அவனது திட்டத்தைச் சுற்றிலும் கண்களும் காதுகளுமாக இருக்கும் இங்கே வைத்துச் சொல்வது சரியல்ல. ஒருவேளை, அவள் உணர்ச்சி வசப்பட்டால், நன்றாயிராது.

எனவே ''என் பெயர் நினைவிருப்பது பற்றி, சந்தோஷம். என்னை நம்பி தெரு முனையில் இருக்கும் காபி ஷாப்புக்கு என்னோடு வர முடியுமா? ஒரு பத்து நிமிஷம் உன்னோடு தனியாகப் பேச வேண்டும். இங்கே சுவர்களுக்குக் கூடக் கண்களும் காதுகளும் இருப்பது போலத் தோன்றுகிறது'' என்றான் நந்தகுமாரன்.

தன்னையறியாமல், அவள் முகம் லேசாயிற்று.

அவன் சொன்னது உண்மைதான். இங்கே ரகசியத்துக்கு இடம் கிடையாது. எல்லோருக்கும், எல்லாமும் தெரிய வேண்டும். அங்கங்கே மறைவாகவோ, வெளிப்படையாகவோ நின்று, அவர்கள் பேசுவதைப் பலரும் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு ''பத்தே நிமிஷம் தான். ஏனெனில், நான் வந்து, சாப்பிட்டு வேலைக்குப் போக வேண்டும்'' என்றாள் அவள்.

ஷாப்பில் காபியோடு சான்ட்விச்சுக்கும் சேர்த்து, நந்தகுமாரன் ஆர்டர் கொடுத்தான்.

''சாப்பிடவில்லை என்றதால்'' என்று அவன் காரணம் சொன்னபோது, அவளுக்கு மறுக்கத் தோன்றவில்லை.

வெண்ணெயும், புதினாச் சட்னியும் தடவி, வெள்ளரி, வெங்காயம், தக்காளி வில்லைகளோடு, கிட்டத்தட்ட மரத்தே போய்விட்டிருந்த சுவை நரம்புகளைத் தட்டி எழுப்ப, சான்ட்விச்சை மெல்ல ருசித்தபடியே ''சொல்லுங்கள், என்ன பேச வேண்டும்?'' என்று கேட்டாள் அவள்.

நந்தகுமாரன் சொன்னது நம்ப முடியாத அதிசயமாக இருந்தது! நண்பனுக்காக, ஒருவன் இவ்வளவு தூரம் போவானா? போகிறேன் என்கிறானே!

ஆனால், அவளைப் பொறுத்த வரையில் முக்கியமான விஷயம், வெகுவாகத் தரம் இறங்கி இந்த நிலையில் இருந்து, அவளுக்கு மீட்சி! அடுத்து, மேல் படிப்பு!

ஆனால் சுகம் சும்மாக் கிடைப்பதில்லை.

இந்த மீட்சியின் விளைவாக, அவளது பிற்கால வாழ்க் கையே வீணாகிப் போகலாம்! தொண்ணூறு சதவீதம் அதுதான் உலக இயல்பு. ஆனால் மீட்சியோ, மூச்சுக் காற்று போல முக்கியமாகத் தோன்றியது, அவளுக்கு!

ஆழ் கடலில் மூழ்கும்போது, ஆதாரமாகக் கைக்குக் கிடைத்தது மிதப்புக் கட்டையா, விஷப் பாம்பா என்று ஆராய்ந்து கொண்டா இருக்க முடியும்? எதுவானாலும் பற்றிக் கொண்டு வெளியே வந்துதானே ஆக வேண்டும்? இயன்றவரை, தற்காப்பு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம், அவ்வளவே!

அவன் கொடுத்த இரண்டு நாட்கள் அவகாசத்தில், வெகுவாக யோசித்துவிட்டு, நந்தகுமாரனிடம் சம்மதம் தெரிவித்தாள் வந்தனா!



# 3

நந்தகுமாரன் சொன்ன திட்டத்தைச் சட்டென்று நம்பாதது வந்தனா மட்டுமல்ல. அவனுடைய உயிர் நண்பர்களான சுந்தரும், பசுபதியும் கூட, அதே போலத் தான் நம்பவில்லை.

''என்ன உளறல் இது, நந்தா? கேட்க சகிக்கவில் லையே. என்ன ஆயிற்று? நேற்று வரை, உன் மேல்மாடி

ஒழுங்காகத்தானே இருந்தது?'' என்று அவனை ரொம் பவும் சந்தேகமாகத்தான் பார்த்தார்கள்.

நண்பன் சற்று அலட்சியமாகப் பார்த்தபடி அசை யாமல் நிற்கவும், ''எப்படியும், இது சுத்தப் பைத்தியக்காரத் தனம், மச்சி! கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், உனக்கே புரியும்'' என்றார்கள், ஒரே குரலாக!

பயன்படுத்திய வார்த்தைகளில் சிறுசிறு வித்தியா சங்கள் இருந்தனவே தவிர, மொத்தத்தில், இருவரது கருத்தும் ஒன்றேதான்.

கடினமாக இருக்கும் என்று எண்ணிய முதலும் முக் கியமானதுமான வேலை எளிதாக முடிந்துவிடவே, நண்பர்களிடம், அதை இன்னமும் சற்று இலகுவாகவே எதிர்பார்த்திருந்த நந்தகுமாரனுக்கு, இப்போது கோபம் வந்தது.

''இப்போது என்னடா சொல்லுகிறீர்கள்? என்னைப் பாயை பிறாண்டாத கிறுக்கன் என்றா? சரி. என்னை விடுங்கள்? அப்படி நடக்க முடியாதது, அடியோடு ஒத்து வராது என்றால், அந்தப் பெண் சம்மதிப்பாளா? நம் முன்னே பூதமாய் நின்று மிரட்டிக் கொண்டிருக்கும் பிரச்சினையை 'பூ' என்று ஊதித்தள்ள அருமையான ஒரு வழி கண்டுபிடித்து வைத்திருக்கிறேன். அதைப் பாராட்டா விட்டாலும் பரவாயில்லை. ஒரேடியாகப் பைத்தியம் என்று பட்டம் கட்டி விட்டீர்களே!'' என்று எரிச்சல் பட்டான்.

நண்பனது ஏமாற்றம் புரிய, மற்றவர்கள் அவனைச் சமாதானம் செய்ய முற்பட்டார்கள்.

''அப்படியில்லை மச்சி! நீ நினைப்பது போல, இது சாதாரணமான... உன் வார்த்தையையே சொல்வதானால்,

'பூ' என்று ஊதித் தள்ளிவிடக் கூடிய விஷயம் அல்ல. இரண்டு பேரின் முழு எதிர்கால வாழ்வையும் பாதிப்பது...'' என்று தொடங்கிய பசுபதியை இடைமறித்து, ''அப்படி யல்ல என்பதைத்தான் முதலிலேயே சொன்னேனே! யாருக்கும் ஒரு பாதிப்பும் நேராது!'' என்று நந்தா பொறுமையிழந்து கூறினான்.

''எப்படி மச்சீ? நீயே, உன் திட்டத்தைப் பற்றி யோசித் துப் பார். யாரோ ஒருத்தி! அவளை மணந்து கொண் டால், உன் வீட்டில் தீவிரமாக ஏற்பாடு செய்து கொண் டிருக்கும் திருமண ஏற்பாடுகள் அப்படியே நின்று போகும் என்கிறாய். அந்த அளவில், இது முழுக்க முழுக்க சரிதான். ஆனால், பின் விளைவுகள்? முதலில் உன் அப்பா! முகத்தில் கரி பூசிய மாதிரி, அவருக்கு எவ்வளவு கோபம் வரும்?'' என்று பசுபதி எடுத்துச் சொன்ன விஷயம், நந்தகுமாருக்கு ஒரு பொருட்டாகவே படவில்லை.

''டேய், என் அப்பா கோபம் எனக்குத் தெரியாதா? என்ன, இப்போது கூடக் கொஞ்சம் திட்டுவார், அவ் வளவுதானே? பொறுத்துக் கொண்டால் போயிற்று!''

''இல்லை நந்தா. முகத்தில் முழிககாதே என்று, வீட்டை விட்டே விரட்டலாம்.''

''அதெல்லாம் மாட்டார். அவர் கோபத்தை எத்தனை முறை பார்த்துவிட்டேன்! என் அன்பு மச்சான்களா, என் அப்பாவுக்கு, நான் ஒரே பிள்ளை! ஏக புத்திரன்! அக்கா தங்கைகள் கூடக் கிடையாது! கொஞ்ச நாள் கூட வேண்டாம், ஒரே நாளில் அவரது கோபம் மாயமாக மறைந்து போகும்!'' என்றான் அவன் சர்வ நிச்சயமாக.

''ம், பெற்ற மனம் பித்தாகும்! சரிடா, அவரை விடு. அப்புறம் பெண்! திருமணம் பெயரளவில்தான்

என்கிறாய். உன் பெற்றோர், மனோகரி குடும்பத்தை நம்ப வைப்பதற்காகச் சில காலம், ஒரே இடத்தில் வசிக்கப் போவதாகவும், அப்புறம் அவரவர் வழியில் போகப் போவதாகவும் சொல்லுகிறாய். அதனால், அவளது பேர் கெட்டு விடாதா? அவள், ஒரு பெண்ணின் வாழ்க்கை வீணாகுமே! அதை நினைத்தாயா?''

''ஆகாதுடா சாமிங்களா, ஆகாது. பிற்காலத்தில் வேறு வாழ்க்கை அமையும்போது, நடந்ததை நேரில் வந்து எடுத்துச் சொல்ல நான் முன் வருவதோடு, அவள் தொடர்ந்து நல்லவளாகவே இருந்தால், ஒரு சாதாரண வைத்தியப் பரிசோதனையும், அதை நிரூபிக்கும். அதே போல எனக்கு ஏதாவது என்றால், அவளும் வந்து வேண் டியதைச் செய்வதாகச் சொல்லுகிறாள். போதுமா? எல்லாம் நாங்கள் விலாவாரியாகப் பேசியாயிற்று.''

இந்த அளவுக்கு, விஷயம் போய் விட்டதா என்பது போல, சுந்தரும் பசுபதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''நந்தா, நாங்கள் உன் நண்பர்கள், நல்லதை கெட் டதை எடுத்துச் சொல்வது எங்கள் கடமை. இதில், இன் னும் சில அபாயங்கள் இருக்கின்றன'' என்று பசுபதி, தொடங்கினான். ''நீயும் அந்த வந்தனாவும், பெரும் பாலும் ஒரே இடத்தில் இருக்கப் போகிறீர்கள். பொதுவாக இந்த மாதிரி வயதில், ஓர் ஆணும், பெண்ணும் தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருக்கும்போது, ஒருவருக்கொரு வர் பேரழகாகத் தோன்றி, காதலிக்கத் தொடங்கி விடுவார்களாம். இது இயற்கையின் தத்துவம் என்று படித்திருக்கிறேன். உங்கள் இருவர் வயதையும் சற்று எண்ணிப் பார்த்துக் கொள்'' என்று எச்சரித்தான்.

லேசாக முறுவலித்து ''வந்தனா அழகில்லை என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால், நாங்கள் யதார்த்த வாதிகள், பதி. இது ஒரு தொழில் உடன்படிக்கை, அப்படிக் கூடச் சொல்ல முடியாது. அதுகூடத் தொடரக் கூடியது. இது வெறும் தேர்தல் உடன்பாடு. அவ்வளவு தான். ஜெயித்ததும், அவரவர் வாழ்வு அவரவருக்கு என்று பிரிந்து விடுவோம். அவளுக்கு படிப்புக் கட்டண மும், தொடர்ந்து படிப்பு முடியும் வரையில் வாழ்க்கைச் செலவையும் தருவது என் பொறுப்பு. வந்தனா செய்ய வேண்டியது, என் கையால் தாலியை ஏற்று, என் திரு மணத்தை நிறுத்தி, மனோகரி சுந்தரோடு இணைவதற்கு உதவ வேண்டும். இது எங்கள் ஒப்பந்தம். இதற்கு மேல், உணர்வு பூர்வமாக எந்த உறவும், எங்களுக்குள் கிடை யாது'' என்றான் நந்தகுமாரன்.

''ஒருவேளை... ஒருவேளை, திருமணம் ஆன பிறகு, விலகிப் போக மாட்டேன், விலக வேண்டுமானால் பணம் கொடு என்று வந்தனா கேட்டால்? மனைவி என்றால் சொத்தையே பிடுங்க முடியுமே! அவள் நல்ல குடும்பப் பெண்ணே என்றாலும்...'' என்று இழுத்தான் பசுபதி.

''என்னடா பெரிய நல்லவள்? அவள் அண்ணன் மாரின் புத்தியில் பாதி போதுமே, இவளும் வில்லியா வதற்கு! இதையே நானும் யோசித்தேன், யோசித்து, இன்னின்ன மாதிரி எங்கள் ஒப்பந்தம் என்று, அவளிடம் எழுதியும் வாங்கி விட்டேன்'' என்று பெருமையோடு தெரிவித்தான் நந்தகுமாரன்!

விழி விரிய ''வாவ்!'' என்றான் பசுபதி. ''எல்லா வழியையும் கவர் பண்ணி விட்டாய்! நீ பெரிய ஆள்தான்

மச்சான்!'' என்று பாராட்டிய பசுபதி உடனேயே முகம் மாற, ''ஆனால், நீ இழுத்த இழுப்புக்கெல்லாம், அவள் ஏன் வருகிறாள் என்று, அது மட்டும் உறுத்துகிறது மச்சி'' என்றும் தெரிவித்தான்.

''பெரிய ரகசியம் ஒன்றுமில்லை, பதி. அவள் இருக்கும் நிலையிலேயே அழுந்திப் புதைந்து விடாமல் வெளியேறுவதற்கு, இது ஒன்றுதான் வழியில்லையா? அதற்காகத்தான். கூடவே, படிப்பு, படிப்பு என்று, அதே எண்ணம் வந்தனாவுக்கு. இவ்வளவு பணத்துக்கு, அவள் வேறே எங்கே போவாள், சொல்லு'' என்று விளக்கிய நந்தாவுக்கு, தானும் பசுபதியும் மட்டுமே பேசிக் கொண்டிருப்பது புரிந்தது.

செய்வதின் பெரும்பகுதி பலன், இவனுக்குத்தானே போகப் போகிறது? இவன், இப்படி மண்ணாந்தை மாதிரி சும்மா இருந்தால் எப்படி?

''என்ன சுந்தர், பேச்சையே காணோம்? உன் அபிப்பிராயம் சொல்லவே இல்லையே!'' என்று அவனிடம் நேரடியாகக் கேட்டான் நந்தா.

இப்போது சுந்தர் பேசினான். ''யோசித்துக் கொண்டிருந்தேன், மச்சி! ஆனால், என்ன மாதிரி யோசித்தாலும், என்னால் ஒத்துக் கொள்ளவே முடியவில்லைப்பா. நம் கலாச்சாரம் அடியோடு வேறு! அதன்படி, பெரிய தப்புடா, நந்தா!'' என்றான் தீவிரமான குரலில்.

அவனை ஒருதரம் ஆழப் பார்த்துவிட்டு, ''சரி, மச்சி. அப்படி ஒத்துக் கொள்ள முடியாதது என்றால், இந்த யோசனையே விட்டுவிடுவோம். வேறே என்ன செய்யலாம்? அப்பா சொல்வது போல மனோகரியை மணந்து,

அவள் ஓர் இடமும், நான் வேறு இடமும் முடங்கிக் காலத்தைக் கழிக்கட்டுமா?'' என்று கேட்டான்.

முகம் வாடியபோதும் ''ஏய் என்னை மடக்கவென்று இப்படிப் பேசுகிறாய். ஆனால் என்னாலும் அதே போலப் பேச முடியாதா? ஏன்? இப்போது உன் திட்டம் போலச் செய்தாலும், அதுதானே நடக்கப் போகிறது? எப்படியும், இரண்டு வாழ்க்கை வீணாகித்தானே, போகும்?'' என்று தன் கருத்திலேயே நின்றான் சுந்தர்.

''போகாது!'' என்று பலமாகத் தலையசைத்து மறுத்தான் நந்தா. ''இந்த வாழ்க்கை வீணாகிற கதையெல்லாம் என்னால் ஒப்ப முடியாது, சுந்தர். ஆனால், இப்போதைக்கு அதை விடு. உன், நம் விஷயத்துக்கு வா. அந்தப் பெண் வந்தனா யாரோ ஒருத்திடா. தங்கச்சி இல்லை...'' என்று நந்தகுமாரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ''நந்தா!'' என்று கூச்சலிட்டவாறே, நண்பனை இறுக அணைத்துக் கொண்டான், சுந்தர்.

''ஏய் ஏய்... விடு, விடு. என்னம்மா? என்ன ஆயிற்று? எதற்காக என் விலா எலும்புகளை நொறுக்க முயற்சிக் கிறாய்? அவ்வளவு பெரிதாக என்ன நடந்து விட்டது? என் திட்டத்தைக்கூட, நீ ஏற்கவில்லையே! என்ன பதி, என்னைச் சொல்லி, இவனுக்கு அல்லவா, மறை கழன்று விட்டது போல இருக்கிறது!'' என்றவாறு, நண்பனின் பிடியிலிருந்து, நந்தன் தன்னை விடுவித்துக் கொண்டான்.

இரு நண்பர்களும் கேள்வியாக நோக்க, ''என் மனோவைத் தங்கச்சி என்றாயே, நந்தா! கேட்கும்போது, எப்படி இருந்தது, தெரியுமா?'' என்று குரல் கரகரக்கக் கூறினான் சுந்தர்.

''மக்கு மச்சி! இருந்திருந்து இதற்குத்தானா, என் அயர்ன் செய்த சட்டையைக் கசக்கினாய்? என்னடா, பெரிய விஷயம் நீ ஆசைப்பட்ட பெண் எங்கள் இரு வருக்கும் தங்கைதானே? அதே போலப் பதிக்கு வரு கிறவள், நம் இருவருக்கும்! அப்படியேதானே, என் விஷ யமும், இந்த முக்கோணக் காதல் பிரச்சினையெல்லாம் நமக்குள்ளே வரவே கூடாது! ஆனால், அதை விடு! இப் போது நம் பிரச்சினைக்கு வருவோம்! தங்கச்சி வாழ்க் கையை என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டான் நந்தகுமாரன்.

''தங்கை என்று விட்டாய். உனக்கு இல்லாத அக் கறையா? நடத்து!'' என்று சுந்தரும் ஒப்புதல் அளித்தான்.

பாங்க்கில் இருந்து மூன்று லட்சம் ரூபாய்ப் பணத்தை எடுத்து, வந்தனாவின் படிப்புக் கட்டணத்தைக் கட்டுவது, நந்தகுமாரனுக்கு பெரிய காரியமாகப் படவில்லை. அது போகவும், அவனது கணக்கில் சில லட்சங்கள் இருக் கத்தான் செய்தன.

அவனது குடும்பத்தில் வீட்டில் எல்லோர் பேரிலுமே, பங்குதாரர் என்று, அவ்வப்போது பணம் போட்டு வைப்பது, அவனுடைய தந்தை பிரகாசம் எப்போதும் செய்வது. அதிலிருந்து, அவரவர் செலவுக்கு எடுத்துக் கொள் வார்கள்.

நந்தகுமார் பைக் வாங்கியதுகூட, அப்படித்தான். பிரகாசம் பைசாக் கணக்குப் பார்த்துப் பெரிதாகக் கேள்வி கேட்க மாட்டார். மீதம் என்ன இருக்கிறது என்று மட் டுமே, எப்போதாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுவார்.

அதே போலத் தேவைப்படும்போது, மனைவி மகனிடம் அவர் 'செக்' வாங்கி, கணக்கில் இருக்கும் பணத்தை

எடுத்து, அவர் தொழிலுக்குப் பயன்படுத்திக் கொள்ளு வதும் வழக்கமே!

எல்லாம் வெகு இயல்பாய் நடக்கும்.

சில சமயங்களில், தொழிற்சாலைக்கு வராமல் சம் பாதிக்கும் எண்ணமே இல்லாமல், பொறுப்பற்றுத் திரிகிறான் என்று பிரகாசம், மகனைத் திட்டுவது உண்டு.

மறுநாளே அதை மறந்து, புது ஐஃபோன் வாங்குவது பற்றி, இருவரும் பேசுவார்கள். அவனும், என்றேனும் ஒருநாள் தொழிற்சாலைக்குச் சென்று வருவான்.

ஆனால், இந்த முறை எல்லாம் மாறி, பெரும் பிரச் சினையாகி, நந்தா சற்றும் எதிர்பார்த்திராத திருப்பம் ஒன்று நேர்ந்துவிட்டது.

தன் கணக்கில் இருந்த பணத்தில் மூன்று லட்சத்துக் கான செக்கை. வந்தனாவின் படிப்புக்காக நந்தகுமார் கட்டி, அன்றோடு மூன்று தினங்கள் ஆகியிருந்தன.

முந்திய தினமே, செக் பாசாகி விட்டதாகவும், அடுத்த வாரம் தொடங்கும் வகுப்புக்குத் தவறாமல் வந்து சேரும்படியும், அவளுக்குத் தகவல் வந்து விட்டதாக, வந்தனா, அவனுக்குத் தெரிவித்திருந்தாள்.

பெற்றவர்களிடம் வந்தனா பற்றித் தெரிவிக்க வேண் டிய நாள் நெருங்குவது புரிய, அதைத் தன் நோக்கத்துக்கு ஏற்ப எப்படிச் சொல்வது என்று, நந்தகுமார் யோசித்துக் கொண்டிருந்தான்.

சிறு உரசல் ஒன்று நடக்கும் என்பது, அவனுக்கு நிச்சயம். அது சீக்கிரமே சரியாகிப் போகும் என்பதும், அதைவிட நிச்சயமே.

ஆனால், அவன் அஞ்சியது வேறொன்று. எப்போதும் விட்டுக் கொடுத்துவிடும் தந்தை, இப்போது இந்தத் திருமணத்தையும் சரிதான் என்று ஏற்று, அதைப் பெரிதாக நடத்தி, ஊர் உலகத்துக்குப் பறை சாற்றி விடக் கூடாதே என்று எண்ணினான்.

ஒரேயடியாக மறைக்க முடியாதுதான். ஆனால், எவ்வளவு குறைவாக வெளியில் தெரிகிறதோ, அவ்வள வுக்கு வந்தனாவுக்கு, ஏன் அவனுக்கும் நல்லது என்பது, அவனது அபிப்பிராயம்.

அது போன்ற மனநிலையைத் தந்தையிடம் கொண்டு வருவது எப்படி?

அன்று காலை உணவின்போது, பிரகாசம் மகனைப் பார்த்து, ''சாப்பிட்டதும், ஓர் ஆறு லட்சத்துக்கு செக் ஒன்று எழுதிக் கொண்டு வா, நந்தும்மா. 'நார்மன் அன்கோ' வுக்குக் கொடுப்பதற்கு என் பாங்க் கணக்கில் கொஞ்சம் குறைகிறது. இதைக் கட்டிவிட்டால் சரியாகிப் போகும்'' என்றார்.

ஒரு கணம் அதிர்ந்தாலும், தன் விஷயத்தைச் சொல்ல நல்ல வாய்ப்பு என்று தோன்றிவிட ''அவ்வளவு பணம் என் கணக்கில் இல்லையேப்பா!'' என்றான் மகன். அதற் கான விளக்கம் எதுவும் தராமலே.

''இல்லையா? எட்டு கிட்டே இருக்குமேம்மா! என்ன தான் நீ செலவு செய்தாலும், ஏழரைக்கு குறைய வழி யில்லையே. அப்படி என்ன செலவு செய்தாய்?'' என்று கணக்குக் கேட்டார் பிரகாசம்.

''அதுப்பா... வந்துப்பா...'' என்று சொல்லத் தயங்குவது போலக் காட்டிக் கொண்டான் பிள்ளை.

தந்தையும் தாயும் ஆச்சரியமாய் அவனை நோக்கினர்.

பேசத் தயங்குகிற பிள்ளை இல்லையே, அவன்!

''ஏன் நந்து, யாராவது சினேகிதனுக்குக் கடன் கொடுத்தியாம்மா?'' என்று தாயார் மெல்லக் கேட்டாள்.

''கடன் என்று இல்லை... அத்தோடு.''

''பின்னே? சும்மாக் கொடுத்து விட்டாயா? எவ்வளவு கொடுத்தாய்? அப்பாவிடம் சொல்லாமல்.''

''ஷ் வசுமதி! அவன் சொல்லி முடிக்கட்டும், விடு'' என்று மகனிடம் படபடத்த மனைவியை அடக்கினார் பிரகாசம். ''ம் சொல்லுப்பா. அத்தோடு... என்றாயே, அத்தோடு என்ன?'' என்று மகனை உந்தினார்.

''அத்தோடு எந்த சினேகிதனுக்கும் பணத்தைக் கொடுக்கவில்லை, கொடுத்தது...''

''கொடுத்தது?''

''என் வருங்கால மனைவி வந்தனாவுக்கு'' என்று கூறியவாறே, ஒரு விள்ளல் தோசையை, நன்றாக சட்டினியில் தோய்த்து, வாய்க்குள் அடைத்துக் கொண்டான் புத்திரன்.

வந்தனாவா? வருங்கால மனைவியா?

கண்கள் அகல விழித்து மகனைப் பார்த்த வசுமதிக்கு, அதிர்ச்சியில், முதலில் பேச்சே வரவில்லை.

மனைவியின் முகத்தைப் பார்த்துவிட்டு, அவளது கையைப் பற்றி, லேசாக அழுத்தினார் பிரகாசம்.

உடனே கணவரிடம் திரும்பி ''என்னப்பா, நந்தாவுக்காக நீங்கள் பார்த்த அந்தப் பெண் பெயர் ம... மனோ

கரியில்லை? இவன் வேறே ஏதோ பெயர் சொல்லு கிறானே!'' என்றாள் திகைப்புடன்.

மனைவியின் கண்களைப் பார்த்து மெதுவாகப் பேசினார் பிரகாசம். ''கொஞ்சம் பொறுமையாக இரம்மா. பெயரைச் சொன்னவன், மற்ற விவரங்களையும், தானே சொல்வா னில்லையா? சொல்லட்டும். கேட்போம்'' என்று அவளை அமைதிப்படுத்திவிட்டு, மகனிடம் திரும்பி ''நீ சொல் லப்பா'' என்றார்.

தந்தையின் அமைதி, புயலுக்கு முந்தியதாகவும் இருக்கலாம். அல்லது, பெற்ற மனம் பித்தாக, மகனுக்கு விட்டுக் கொடுப்பதாகவும் இருக்கலாம்! எதுவானாலும், அவனது நோக்கம் நிறைவேறினால் சரி!

சற்று யோசித்துவிட்டு, ''அப்பா, வந்தனா ஒன்றும், பெயர் சொன்ன உடனேயே நீங்கள் புரிந்து கொள்ளுகிற அளவு, அவள் பெரிய குடும்பத்துப் பெண் அல்ல. சின்ன வயதில், ஒரே பள்ளியில் படித்தோம். ஒரு 'டிப்பார்ட் மென்ட் ஸ்டோரி'ல் வேலை செய்வதைப் பார்த்தேன். படிப்புக்குக் கட்டணம் கூடக் கட்ட முடியவில்லையாம். வேலையில் சேர்ந்தாளாம். எனக்கு மனது கேட்கவில்லை! அதுதான் அவள் கேட்ட பணம் மூன்று லட்சத்தையும் கொடுத்து விட்டேன். அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை, கல்யாணம் பண்ணிக் கொள்வதாக இருக்கிறோம். திருமணத்தை முடித்துக் கொண்டு, உங்களிடம் வந்து ஆ... விவரம் சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனால், இன்று எப்படியோ, பேச்சில் வந்து விட்டது'' என்று அசடு வழிந்தான் மைந்தன்.

அதிர்ச்சியை சமாளித்துக்கொண்டு, ''மூன்று லட்சமா? கண்ணா, என்னடா நீ? என்னவோ மந்திரித்து விட்ட

கோழி மாதிரி, யாரோ ஒருத்தி கேட்டதுமே, கேட்ட பணத்தைத் தூக்கிக் கொடுத்துவிட்டு, அப்பறமாக வந்து, அதுவும் அப்பா செக் வேண்டும் என்று கேட்ட பிறகு சொல்கிறாய்? அவ்வளவு பணத்தை எடுத்துக் கொடுக்கு முன், அப்பாவிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா? இப்படி ஓர் ஆத்திர அவசரத்துக்குத்தானே, அப்பா நம் பேரில், இவ்வளவு பணம் போடுவது?'' என்று வருத்தப் பட்டாள் பெற்றவள்.

''என்னடி பைத்தியக்காரி, நீ? அவன் தன் வாழ்க் கையையே அவள் காலடியில் போட்டு விட்டு நிற்கிறான்! நீ பணத்தைப் பெரிதாகச் சொல்ல வந்து விட்டாயே! ஆனால், நீ சொன்னதும், ஒரு வகையில் சரிதான். மந்திரித்துவிட்ட கோழி என்றாயே, அதைச் சொன்னேன். அதற்குத்தான் தன் கதி என்ன ஆகப் போகிறது என்பதே தெரியாது. உன் பையனும், அந்த நிலையில்தான் இருக்கிறான்! பின்னாடி என்ன ஆகப் போகிறோம் என்று தெரியாத அசமஞ்ச நிலை!''

பதிலேதும் சொல்லாமல், வேண்டும் என்றே அசடு முழி முழித்தான். பிள்ளை.

அவனை ஒருதரம் முறைத்துவிட்டு, பிரகாசம் தொடர்ந்து பேசினார். ''அடுத்த வெள்ளிக்கிழமை கல்யாணம் வேறாம்! நாமானால், மகனுக்கு, உயரம் சரியாக இருக்குமா? நிறம் பொருந்துமா? நல்ல குடும்பமா என்று ஆயிரம் பார்த்துத் தேர்வு செய்தால், துரை எவளோடோ திருமண நாளையே நிச்சயித்து விட்டார்! திருமணத்தை முடித்து விட்டு வந்து, அ்தென்ன... விவரம், விவரம் சொல்வதாக இருந்தாராம்! யார் அடிக்கிற கொட்டுக்கு ஆடுகிறான், தெரிகிறதா? முன்னாலேயே தெரிந்தால், இந்தக்

கண்ணராவிக் கல்யாணத்தை நிறுத்திவிடுவேன் என்கிற பயம்!

''நான் ஏன் நிறுத்துகிறேன்? அது தானாக நிற்கும். அவளே நிறுத்துவாள். இப்படிப்பட்ட முட்டாளுக்குப் பட்டால்தான் தெரியும்! கல்யாணம் என்று ஆகுமுன்பே இப்படி பணம் பிடுங்குகிற அவள் எப்படிப்பட்ட கைகாரி என்று...'' என்று சொல்லிக் கொண்டே போனவரின் பேச்சை ''வேண்டாம்ப்பா'' என்று நந்தா குறுக்கிட்டு நிறுத்தினான்.

வந்தனாவைத் தேடிப்போய், இந்தத் திட்டத்தைச் சொல்லி, இது சரிவருமா என்று கலங்கித் தயங்கியவளை யும் வாழ்நாள் பூராவும் இப்படி பில் போட்டுக் கொண்டே இருக்கப் போகிறாயா என்று எடுத்துச் சொல்லிச் சம் மதிக்க வைத்தவன் அவனே! அநியாயமாக, அவள் மேல் பழி போடுவதா?

ஆனால் இதை விளக்கிக் கூற முடியாமல் ''அவளைத் தப்பாகப் பேச வேண்டாம், அப்பா. என்னை வேண்டு மானால், என்ன சொல்லியும் திட்டிக் கொள்ளுங்கள்'' என்றான், தணிந்த குரலில், சிறு கண்டிப்புடன்.

ஆனால் இந்த வார்த்தைகளும் குரலும், தந்தையை வெகுவாக உசுப்பேற்றி விடக்கூடும் என்று, அவன் அப்போது நினைக்கவில்லை.

''ஓகோ, அவ்வளவு மயக்கமா?'' என்று வெடித்தார் பிரகாசம். ''கேட்டாயா வசு? அவளை ஒரு வார்த்தை சொல் லக்கூடாதாம்! இவனை எப்படி வேண்டுமானாலும் திட்டிக் கொள்ளலாமாம்! நிலவரம் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்! கழுத்தில் தாலி ஏறவில்லை. அதற்குள் மூன்று லட்சத்துக்கு வேட்டு வைத்து

விட்டாள். இவள் மருமகளாக உரிமையோடு வீட்டுக்கு வந்தால், என்ன ஆகும்? சொத்து, தொழில் எல்லாவற்றை யுமே, முழுசாகத் துடைத்து எடுத்து விடுவாள். பட்டம் வாங்கி இரண்டு ஆண்டுகளாகச் சும்மா உதவாக்கரை யாகச் சுற்றிக் கொண்டிருக்கிறான். பொறுப்பு என்பது, அடியோடு கிடையாது. இவனை ஒருத்தி இவனுக்காக மணந்து, வாழ்வாளாக்கும்? அவளது குறியே, இந்த வீட்டுச் சொத்துதான்! இதைச் சொன்னாலே, துரைக்குத் தாங்கவில்லை!'' என்று மனைவியிடம் கூறிவிட்டு, மகனிடம் திரும்பினார்.

''வெட்ட வெளிச்சமாகத் தெரிகிற இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல், அவளை மணக்கப் போகிற நீ ஒரு முட்டாள். என்ன சுற்றிவிட்டு வந்தாலும், உட்கார்ந்து சாப்பிட இந்த வீடு இருக்கிறது என்கிற திமிர்தானே, உனக்கு? அது முதலில் அழிய வேண்டும். அதற்கு, நீ வெளியே போய் கஷ்டப்பட்டாக வேண்டும். பணம் இல்லாத உன்னை பிய்ந்த செருப்பாய் அவள் உதறி விட்டுப் போவாள், பார். அப்போதுதான், நீ ஒரு செல்லாக்காசு என்று உனக்கும் உறைக்கும், அவளிடம் இருக்கும் மயக்கமும் விலகும். அதனால் இன்றே, உன் துணிமணியை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறு!'' என்று கடுமையான குரலில் கூறி, மனைவி மகன் இருவரையும் அதிர வைத்தார்.

திகைப்புற்று ''அப்பா, நான்...'' என்று தொடங்கிய நந்தா மேலே பேச முடியாமல் நிறுத்தினான்.

நண்பன் எச்சரித்ததுதான். ஆனால், இந்த நிலை வரும் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இப்போது, இந்தக் கட்டத்தில் அவரிடம் என்னவென்று சொல்வது?

சுந்தர் தன் காதலை வெளிப்படையாகக் கூற முடியாத நிலையில் இருக்கிறான். அப்படிக் கூறினாலும், ஏற்கப்பட முடியாத நிலையில், இருப்பதால், அவனால் இப்போது அதை வெளிப்படுத்தவே முடியாது. மேலும், மகளின் பொருந்தாத காதல் விஷயம் தெரிந்தால் மனோகரி வீட்டில் அவசரமாக அவளை வேறு யாருக்கேனும் கட்டி வைத்தாலும் வைக்கலாம். இவர்களது எல்லா முயற்சியும் கெட்டு குட்டிச்சுவராகிப் போகும்.

அவன் தயங்கி நிற்கும்போதே, வசுமதி மகனுக்காகப் பேசினாள் "என்னப்பா நீங்கள்? அவனுக்கு வேலையும் இல்லை. வருமானமும் கிடையாது. சும்மா வெளியே போ என்றால், நந்தாவை நடுத்தெருவில் நிறுத்தப் போகிறீர்களா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"சும்மாவா போகச் சொல்லுகிறேன்? அதுதான், அவன் கணக்கில் மடத்தனமாக நான் போட்டிருக்கும் பணம், இன்னும் ஐந்து லட்சம் போல இருக்குமே! அதை வைத்து, ஒரு டீக்கடையோ, பெட்டிக்கடையோ வைத்துப் பிழைக்கட்டும். ஓசிச் சாப்பாட்டுக்கு, உழைத்து வரும் எதுவும் குறைச்சல் இல்லை. அவளும் ஏதோ ஸ்டோரில் வேலை செய்தவள் தானாமே! புருஷனும் பெண்டாட்டியும் சேர்ந்து கடை நடத்தி, ராஜபோகமாக வாழட்டும்! ஆனால், அந்த முதலும், இந்த அசட்டு அப்பனின் பணம்தான் என்று எப்போதாவது நினைவு வந்தால் சரி! இன்னும் ஒன்று! அந்தப் பணத்தையும், அவளுக்கு தாரை வார்த்துவிட்டு, இன்னும் ஏதாவது பீராயலாம் என்று இங்கே வந்தான் என்று வை! வேலைக்காரனை விட்டுக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவேன் என்பதை நினைவு வைத்துக்கொண்டு, வீட்டுக்குள்ளே

காலடி எடுத்து வைக்கச் சொல்லு!'' என்று சீறியவரை வெறித்து நோக்கிவிட்டு, மடமடவென்று மாடியில் அவனது அறைக்குப் போனான் நந்தகுமாரன்.

அறையில் அலமாரியை, மேஜை இழுப்பறைகளைத் தடால் தடாலென்று திறந்து மூடும் ஓசை கேட்டது.

சில நிமிஷங்களிலேயே, கையில் ஒரு 'கிட் பாகு'டன் நந்தகுமாரன் வேகமாகத் திரும்பி வந்தான்.

மேஜை மேல், ஒரு பாங்க் பாஸ் புக்கையும், இரண்டு செக்குகளையும் வைத்தான்.

''இது நீங்கள் பணம் போட்டது. அதற்கான வெற்று செக் கையெழுத்திட்டு வைத்திருக்கிறேன். அடுத்த செக், நான் வந்தனாவுக்குக் கொடுத்த பணத்தில் இரண்டு லட்சத்துக்கான செக். சில ஆண்டுகளாக, நான் ஸ்போர்ட்ஸ் டோர்னமெண்ட்களில் ஜெயித்ததில் வந்த பணத்தை எல்லாம், சிறு வயதில் தாத்தாக்கள் பரிசு கொடுத்த பணத்தை போட்டு, நீங்கள் தொடங்கிக் கொடுத்த பாங்க் கணக்கில்தான் போட்டு வந்தேன். அதிலிருந்து, பாக்கிப் பணத்தைத் தந்திருக்கிறேன். முழுசையுமே கொடுத்திருப்பேன். ஆனால், வாடகை வீட்டுக்கு முன்பணம், அன்றாடச் செலவுகளுக்கு, எல் லாம் எவ்வளவு ஆகும் என்று தெரியாததால், கொஞ் சத்தை மிச்சம் வைத்திருக்கிறேன். அதையும் சீக்கிரமே, கொஞ்சம் கொஞ்சமாகவேனும் திருப்பித் தந்து விடு கிறேன். இப்போது, நாலு செட் துணி மட்டுமே எடுத்துப் போகிறேன். மற்றதெல்லாம், படிப்பு, விளையாட்டுத் தொடர்பான என் சான்றிதழ்கள் மட்டும்தான். வேண்டு மானால், சோதனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றவன் இரு பெரியவர்களும் பேசாமலே பார்த்துக்

கொண்டு இருக்கவும், பையைக் கையில் தூக்கிக் கொண்டு வெளியே கிளம்பி விட்டான்.



# 4

வீட்டை விட்டு வெளியே சென்று, பைக்கில் பையை மாட்டிவிட்டு வண்டியைக் கிளப்பும்போதே, நந்தகுமாரனுக்கு மனதில் உறுத்தியது.

இந்த பைக்கும் அப்பா வாங்கித் தந்ததுதான்.

கையில் கட்டியிருக்கும் கடிகாரம், பையுள் இருக்கும் மொபைல் எல்லாமும் அவரது பணம்தான்.

ஆனால், இவையெல்லாம் இல்லாமல் தீராது. பணக் கணக்கில் அந்த ஒரு லட்சம் போல, இவைகளுக்கும் மதிப்புப் போட்டு, எப்படியாவது திருப்பிக் கொடுத்துவிட வேண்டும், கட்டாயம்! கொடுத்த பிறகுதான், அப்பா, அம்மா என்கிற உறவெல்லாம்.

வெளியே சென்று, எங்கேயும் வேலை செய்து, நந்த குமாரனுக்குப் பழக்கம் இல்லைதான். ஆனால், ஒருவ ரிடம் கைகட்டிச் சேவகம் செய்வதா என்கிற திமிரில், அவன் அப்படி இருக்கவில்லை.

எப்படியும் விரைவிலேயே ஒரு நாள், தந்தையின் தொழிற்சாலைப் பொறுப்பை அவன்தான் ஏற்றாக வேண் டும், வெளியே எதற்காகப் போய் வேலை செய்வது என்பதுதான்.

தொழிற்சாலையிலும், இப்போதைக்கு அப்பாவே திறம்பட நடத்தும்போது, அவன் வேறு எதற்கு? அவ்வப் போது போய், என்ன எப்படி நடக்கிறது என்கிறவரை தெரிந்து வைத்திருக்கிறான். அது போதும் என்கிற எண்ணம்தான்.

ஏதாவது பெரிய தேவை நேரம் என்றால், பிரகாசத் தோடு கூடச் சென்று உதவுவான்.

மற்றபடி, வேலை, தொழில் என்று எதையும் பெரிதாக எடுத்துக் கொள்ள நந்தகுமாருக்குத் தோன்றியதே இல்லை.

ஆனால், பொறுப்பு, விடா முயற்சி, உடல் நலம் பேணல் எதிலும் அவனைக் குறை சொல்ல முடியாது. அந்தக் குறைகள் இருந்திருந்தால், அவனது குழு நாடு முழுதும் பல வெற்றிகளை நிச்சயமாக அடைந்திருக் காது.

ஆனால் அதிலும் 'புரோஃபெஷனல்' என்கிற அளவு முழுமையாக ஈடுபட, அவன் விரும்பியது கிடையாது. அதே குறியாக இருப்பதானால், தந்தைக்குத் தேவைப் படும்போது, உதவ முடியாது என்பது ஒரு காரணம். அப்படி ஒரு தொழில் பொறுப்பு பின்னணியில் இருந்த தாலோ, என்னவோ விளையாட்டின் மூலம் பணம் சம் பாதித்துப் பெரிய ஆளாக வேண்டும் என்கிற ஆர்வமும் அவனுக்கு இருக்கவில்லை.

எனவே, விளையாட்டுப் பிள்ளையாகச் சுற்றுகிறவனா கவே, அவன் எல்லோருக்கும் தோன்றினான் அவன் உட்பட.

ஆனால் ரோஷம், இன்று அவனை மாற்றி யோசிக்க வைத்தது.

தந்தையின் பணம் இல்லாமலே, அவன் உருப்படியாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

வீட்டை விட்டு வெளியேறும் இந்த நிலைமை எதிர்பாராமல், அவனாக ஏற்றுக் கொண்ட சில கடமைகள் இருந்தன. அவைகளைக் கட்டாயமாக நிறைவேற்றியாக வேண்டும். இப்படியாகும் என்று நான் எண்ணவில்லையே என்று பொறுப்பை உதற அவனால் முடியாது!

வீட்டை விட்டுக் கிளம்பியதுமே நந்தகுமார், முதலில் நண்பன் சுந்தரோடு தொடர்பு கொண்டான்.

செல் திரையில் நண்பனது எண்ணைக் கண்டதும், ''என்ன மச்சி, இந்த நேரத்தில்? நான், அலுவலகத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்'' என்றான் சுந்தர்.

''அதற்கு முன் பிடிப்பதற்காகத்தான் அவசரமாய்க் கூப்பிட்டேன், மச்சான். அலுவலகக் கார்தானே? கூட இருப்பவர்களுக்குப் புரியாதபடி, நான் பேசுவதை மட்டும் கவனித்து, ஓரிரு வார்த்தைகளில் பதில் சொல்லு'' என்று தொடங்கி தன் வீட்டில் நடந்ததைச் சுருக்கமாகத் தெரிவித்தான்.

''முக்கியமான பகுதி, இனிமேல்தான் வருகிறது. உடனடியாக எனக்கு ஒரு வேலை வேண்டும். உன்னதைப் போலப் பெரிய வேலை இல்லை. உன் பதவியில் இருந்து கொண்டு, நீ ஏற்பாடு செய்யக் கூடிய, சாதாரணமான வேலை. அதிகம் கிடைத்தால் சந்தோஷம் தான் என்றாலும் இப்போதைக்கு வீட்டு வாடகைக்கும், இரண்டு பேர் உணவுக்கும், பைக் பெட்ரோலுக்கும் கட்டி வந்தால் போதும். இதை, உன் உடனடிப் பொறுப்பாக ஏற்றுச் செய்ய வேண்டும். எப்படியாவது செய்கிறாயா?''

என்று அவனிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, தொடர்ந்து, அடுத்த நண்பன் பசுபதியை அழைத்தான்.

நடந்த விவரங்களைச் சொல்லி முடித்துவிட்டு, ''உடனடியாக எங்களுக்கு ஒரு வீடு தேவைப்படுகிறது. மச்சான் மெய்யாகவே, உடனே வேண்டும். வெள்ளிக் கிழமை திருமணம் முடிந்ததும், வரும் ஒன்றாம் தேதியே, வந்தனா விடுதி அறையைக் காலி செய்வதாக, விடுதி யில் சொல்லியாயிற்று. இப்போது போய், எனக்கே தங்க நிழல் இல்லை, நீ அங்கேயே இரு என்று அவளிடம் சொல்ல முடியாது. உன் கடையில் இருக்கும்போது, இது போலத் தகவல் எல்லாம் கிடைக்கும் என்பாயே, அவசரத் தேவையாக, இது பற்றிப் பார்க்கிறாயா?'' என்று அவ னிடமும் ஓர் உதவி கேட்டான்.

நண்பனின் திட்டங்கள் எல்லாமே தெரிந்திருந்ததால், அவனுமே, அனாவசியக் கேள்விகள் எதுவும் கேட்க வில்லை.

என்னென்ன மாதிரி வீடுகள், என்னென்ன வாடகை யில் கிடைக்கிற நிலையில் இருக்கின்றன என்று, அதை மட்டும் கூறினான்.

''இல்லையில்லை. இந்த அளவு முடியாது. நான் எப்போதும் பழகிய மாதிரி வீடு என்றெல்லாம் பார்க்க வேண்டாம், பதி. இப்போதைக்கு பட்ஜெட் ரொம்பக் குறைச்சல். அதற்குச் சரியாகப் பார்த்தால் போதும். தன்னால் பார்த்துக் கொடுக்கக்கூடிய வேலை என்று சுந்தர் ஒருதரம் சொன்னானே, அதற்குத்தான் ஏற்பாடு பண்ணக் கேட்டிருக்கிறேன். அதை வைத்துக் கணக்குப் போட்டால், ஒற்றைப் படுக்கையறை ஃப்ளாட்தான் சரிவரும் போலத் தெரிகிறது. அதையே பார். கொஞ்சம்,

அந்தப் பெண் வந்தனாவின் கல்லூரிக்குப் பக்கமாகக் கிடைத்தால் நல்லது. விசாரித்துப் பார்த்தால், அவளுக்குப் படிப்பதற்கு நிறைய இருக்கும் போலத் தெரிகிறது'' என்றான் நந்தகுமார்.

''ஹூம்! போகிற போக்கைப் பார்த்தால், 'சன்னியாசி, சம்சாரி ஆகிற' கதையாகிவிடும் போல இருக்கிறது, மச்சான். சுந்தர் காதலுக்கு உதவுகிறேன் என்று, நீ கல்யாணத்தில் தொடங்கி, குடித்தனம் வைப்பது வரை, என்னவெல்லாம் யோசிக்க வேண்டியிருக்கிறது பார்'' என்று ஒரு பெருமூச்சுடன் தொடங்கி, பசுபதி சொல்லி முடித்தபோது நிலைமையின் விசித்திரம், இருவரையும் உரக்க நகைக்க வைத்தது.

அடுத்து, மூன்று நண்பர்களும் சந்தித்தபோது, மற்ற இருவருமே நந்தகுமாரனுக்கு நல்ல செய்திகளைக் கொண்டு வந்திருந்தனர்.

சுந்தரால் சற்றுக் கூடுதல் வருமானம் வரக்கூடிய, ஓரளவு நல்ல வேலையையே, நண்பனுக்காக ஏற்பாடு செய்ய முடிந்திருந்தது. முன்பு அந்த வேலையே வகித்தவன், வெளிநாட்டில் பெரிய வேலை கிடைத்தது என்று, சட்டென இதை விட்டுவிட்டான். சென்னையி லேயே, இன்னொரு கிளை, விவரம் தெரிந்ததும், சுந் தரும், உடனே ஹெச்ஆர்டி அதிகாரியிடம் போய் நின்று விட்டான்.

''நந்தகுமாரின் வேலைத்திறனுக்கு, நான் உத்திரவாதம்'' என்று அவன் சொன்னதே, முடிவெடுக்க முக்கிய காரண மாக இருக்க, நந்தாவின் விளையாட்டு வெற்றிகள், அவனுக்கு இன்னமும் துணை புரிந்தன.

டீம் விளையாட்டுகளில் வெற்றி என்றால், தனித் திறமை, விடாமுயற்சியோடு, மற்றவர்களோடு இணைந்து போராடும் தன்மையும் வேண்டுமே.

உறைவிடத்துக்கும், உணவுக்கும் கிடைத்தாலே போதும் என்று எண்ணியது மாறி, அவனுடைய தந்தை பிரகாசத்துக்கும் கொஞ்சம் பணம் அனுப்பியாக வேண்டும் என்கிற ஆசையும் நிறைவேறும் நிலை வந்தது, அவனுக்கு மகிழ்ச்சியை அளித்தது!

ஒரே ஒரு பிரச்சினை, ஒரு சந்தேகம் மட்டும் தோன்றி, நந்தாவைச் சற்று உயர்த்தியது.

அவனும் அவளும் மட்டுமாகத் தனி வீட்டில் வாழ நேரும் என்பதை, வந்தனா எப்படி ஏற்கக்கூடும்? அப்பா, அம்மா, வேலையாட்கள் என்று வீடு நிறைய ஆட்கள் இருப்பது நல்லது என்று அவள் எண்ணியிருக்கலாமே!

இப்போது அவனுக்கு ஏதோ கெட்ட எண்ணம் இருந்து, தனியே தள்ளிக்கொண்டு போகத் திட்டமிட்டு இருப்பதாக நினைத்து மறுத்தால்?

தான் அப்படிப்பட்டவன் அல்ல, பக்கா கனவான், இன்று வரை கெட்ட பேரே வாங்காமல், உத்தம மனிதனாக எப்படி வாழ்ந்து வருகிறான் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி, அவளை ஒத்துக் கொள்ள வைக்க வேண்டும் என்று, ஏகப்பட்ட வாதப் பிரதிவாதங்களை மனதில் தயார் பண்ணிக்கொண்டு, இந்தத் தனி வீட்டுக் குடித்தனத்தை, நந்தகுமாரன் அவள் காதுக்குக் கொணர்ந்தான்.

ஆனால் அதிசயிக்கும் விதமாக ''அப்பாடி!'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் வந்தனா.

நந்தன் வியந்து நோக்கவும், ''ஆமாம் நந்தகுமாரன், இப்போதுதான் எனக்கு நிம்மதியாக இருக்கிறது. என்னடா, உறவு, வேலையாட்கள் என்று நிறையப் பேர் இருக்கிற வீட்டுக்குப் போய் வசிக்க வேண்டியிருக் கிறதே, எல்லோரிடமும் மரியாதைக்காக ஓரிரு வார்த் தைகள் பேசினாலே, படிக்கிற நேரம் எவ்வளவு வீணா கும் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். இப்போது அந்தக் கவலை தீர்ந்தது. படிப்பிலேயே முழுக் கவனத் தையும் செலுத்தலாம்!'' என்று வந்தனா மகிழ்ச்சியுடன் கூற, இப்போது அவனுக்குத்தான் 'அப்பாடி' என்று இருந்தது.

இவளுக்குப் படிப்புதான் முக்கியம், மற்ற எதைப் பற்றியும் அக்கறையே இல்லை என்பது ஒரு வகையில் மிகவும் நிம்மதியாக இருந்தது!

ஆனால், தனியாக ஒரு வீட்டுக்குள், அவனும் அவளு மாக மட்டுமாக இருக்க நேரும்போது, எப்படி உணர்வாள் என்று, இப்போது நிச்சயமாகச் சொல்ல இயலாது. பயம், படபடப்பு வரலாம், வருவது இயற்கையே!

ஆனால், அப்படிப்பட்ட எண்ணமே இல்லாமல் இருக் கும் இந்த நேரத்தில், அந்த நிலைமையைக் குறித்துப் பேசி, தன்னைப் பற்றிய சிறப்புகளை இப்போது எடுத்துச் சொல்வது, சற்று அதிகப்படியாகத்தான் தோன்றும். எதற்கு, இப்படி அனாவசியமாகப் பெருமை பேசுகிறான் என்று கூட அவள் எண்ணலாம். அதனால், இப்போது அந்தப் பேச்சு சரிவராது.

ஆனால், அவனிடம் அவள் பயப்படத் தேவையே இராது என்பதைப் பிறகு, வாய்ப்புக் கிடைக்கும்போது, அவளிடம் கட்டாயம் தெரிவித்து விட வேண்டும்.

அவனைப் பற்றி, ஒரு பெண் பயப்படலாமா? *சீச்சீ!*

அதற்குமேல், அவர்கள் போட்ட திட்டத்தில் எந்தவித மாற்றமும் இல்லாமல் எல்லாம் செவ்வனே நிறைவேறியது!

தாலியை எடுத்துக் கட்டும்போது, 'என்னடா... இது' என்பதுபோல, நந்தகுமார் கொஞ்சம் ஒரு மாதிரியாகத் தான் உணர்ந்தான்.

ஆனால், நடிக்கிற நாடகத்தை முழுதாக நடத்தித் தானே ஆக வேண்டும்? வந்தனாவின் முகத்திலும், அதே உணர்வைக் காணவும் ''வேறே வழியில்லை, சாரி'' என்று முணுமுணுத்தவாறே, தாலியைக் கட்டினான் அவன்.

''ச்சு, என்ன செய்வது? நாடகத்தின் ஓர் அங்கம், ஏற்ற படி நடித்துதானே ஆக வேண்டும்?'' என்றாள் அவள்.

திருமணத்தைப் பதிவு பண்ணுவதற்கான ஏற்பாடு களைச் செய்துவிட்டு, நாலு பேருமாக, ஹோட்டலில் உணவு உண்டார்கள்.

அவசரமாக உணவை அள்ளி விழுங்கிவிட்டு ''கல்லூரி யில் வரச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் படிப்பு பற்றிய விவரங்கள் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்'' என்று வந்தனா கிளம்பிச் சென்றுவிட்டாள்.

புது வீட்டுக்கு வேண்டிய அடுப்பு, பாத்திரங்கள் என்று, கட்டாயமாகத் தேவையான பொருட்களை பட்டியல் போட்டு, மூன்று நண்பர்களுமாக வாங்கி வைத்தார்கள்.

வந்தனாவிடம் விரைவிலேயே வந்துவிட ''நான் போய்ப் பால் பாக்கெட் வாங்கி வருகிறேன், நந்தா. முதலில் பால் காய்ச்சிக் குடித்துவிட்டு, ஒரு பாயசமும்

வைத்துவிட்டால், புதுமனை புகுவிழா நல்லபடியாக நிறைவேறிவிடும்'' என்று பசுபதி எழுந்தான்.

''ஆமாம், ஆமாம். முதல் சமையலாகப் பாயசம் செய்வதுதான் சரியாக இருக்கும். கொஞ்சம் பொறு, பாயசத்துக்கு என்னென்ன வேண்டும் என்று பார்ப்போம்'' என்று அவனை நிறுத்தி வைத்துக் கொண்டு, வந்தனாவைப் பார்த்து மற்றவர்கள் புன்னகை செய்தனர்.

''என்ன எல்லோரும் என்னைப் பார்க்கிறீர்கள்?'' என்று விழித்தாள் அவள்.

''வந்து... பாயசம் செய்ய வேண்டும் அல்லவா? அதற்கு வேண்டியது எல்லாம் சொல்லு. பாலோடு சேர்த்து வாங்கி வருகிறோம்.''

''என்னது, பாயசமா?'' என்று அதிர்ந்தாள் வந்தனா. ''அதற்கு வேண்டியது என்னென்ன என்று, எனக்கு எப்படித் தெரியும்? அடுப்பு வேலை, சமையல் எல்லாம் எனக்கு எப்படித் தெரியும்?'' என்று சற்றே கிரீச்சிட்ட குரலில் கேட்டாள்.

எல்லோருமே திகைத்து அவளைப் பார்க்கவும், அவள் தொடர்ந்து பேசினாள். ''பாருங்கள் நீங்கள் சொல்லுகிற பால் காய்ச்சுவது உள்பட, எனக்கு ஒன்றுமே தெரியாது. அடுப்புப் பக்கமே நான் சென்றது கிடையாது. அதனால் அடுப்பைப் பற்ற வைக்கக் கூடத் தெரியாது'' என்றவள், மூன்று நண்பர்களும் முகத்தில் ஏமாற்றத்துடன் சிறு நம்பிக்கையின்மையும் பரவுவதைக் கண்டு, அவசரமாக விளக்கம் சொன்னாள்.

''என்ன, அப்படிப் பார்க்கிறீர்கள்? எனக்கு அம்மா இல்லை என்று, உங்கள் எல்லோருக்கும் தெரியும்

தானே? அம்மா இறக்கும்போது எனக்கு ஒன்றரை வயதாம். அதிலிருந்து வீட்டில் சமையல்காரன்தான். வீட்டில் இருந்த வரை, சமையலாள் செய்து மேஜையில் வைப்பதைத் தின்றுவிட்டு பள்ளி, கல்லூரி போவேன். அப்புறம் இப்போது விடுதி, எனக்கு சமையல் என்ன தெரியும்? தெரிய முடியும்? சொல்லுங்கள்?'' என்று அவர்களையே கேட்டாள்.

என்ன பதில் சொல்வார்கள்? திருதிருவென்று முழித்தார்கள்.

சற்று நேரம் விழித்துவிட்டு, ''மச்சான் எனக்குப் பாலைக் காய்ச்சத் தெரியும்'' என்றான் பசுபதி. ''அம்மாவுக்கு அடிக்கடி மூட்டுவலி வரும். காலையில் எழுந்திருக்கக் கஷ்டப்படுவார்கள். தங்கைகள் சின்னப் பிள்ளைகளாக இருக்கும்போது, தூக்க முடியாமல் மேலே இழுத்துப் போட்டுக் கொள்வார்களோ என்ற பயத்தில், நானும் கூடப் போய் நின்று, அடுப்பில் ஏற்றி இறக்குவதில் உதவுவேன்! அதனால் பால் காய்ச்சுவதை நாமே பார்க்கலாம்'' என்று வெளியே போய், அருகில் இருந்த கடையில், தண்ணீருக்குள் போட்டு வைத்திருந்த பால் பாக்கெட்டை வாங்கி வந்தான்.

''எங்கள் வீட்டில் வேறு விதம். படிக்கிற பிள்ளைகளைக் கெடுக்கக் கூடாது என்று, என்னையோ, தங்கையோ, அடுப்பு கிட்டேயே, அப்பா போக விட மாட்டார். ஆனால் கொஞ்சம் பார்த்திருக்கிறேன்'' என்று ஒரு பாத்திரத்தை எடுத்துக் குழாய் நீரில் கழுவிக் கொடுத்தான் சுந்தர்.

''உள்ளதில், எதற்கும் பயன்படாதவர்கள், நானும் வந்தனாவும்தான் போல இருக்கிறது'' என்று யோசனையோடு கூறிய நந்தகுமாரன், சட்டென எழுந்து, பாத்திர

மூட்டையைப் பிரித்து, அதிலிருந்து டம்ளர்களைத் தேடி எடுத்தான்.

சிறு புருவச் சுளிப்புடன் வந்தனா பார்த்துக் கொண்டிருக்க, டம்ளர்களை எடுத்துப் போய், அவனே கழுவி வைத்தான்.

''பால் காய்ச்சி விடலாம். ஆனால், பாயசம்... இவ்வளவு உதவி செய்கிறீர்கள், உங்களுக்கு இனிப்பாகக் கொடுக்க வழியில்லையே!'' என்று வருத்தப்பட்டவன், ஏதோ தோன்ற, உடனே முகம் மலர்ந்தான்.

குறுகுறுப்பாய் சுந்தரின் முகத்தைப் பார்த்து, ''ஏ மச்சி, சொல்லு, உன் ஆளைக் கூப்பிட்டால் வருவாளா? இந்தப் பக்கம்தானே அவர்கள் வீடு என்று நீ சொன்ன ஞாபகம்? தங்கச்சிக்கு சமையல் தெரியாது என்று மட்டும் நீ சொல்லிவே முடியாது. சமையல் வேலையைத் தலையில் கட்டி விட்டு தாயார் வெளியே போகிறபோதுதானே, தைரியமாக உன்னோடு பேசுவதாகச் சொல்வாயே! பேச்சு சுவாரசியத்தில், கூட்டுக் கறியைத் தீய விட்டுவிட்டதாகக் கூட... என்ன, கூப்பிடலாமா?'' என்று கேலிச் சிரிப்புடன் கேட்டான்.

''ஹையோ, கேட்கணுமா? ஆயிரம் வாட் பல்பு போட்ட மாதிரி, நம்ம மச்சி முகத்தைப் பாரேன்'' என்று பசுபதி கிண்டல் செய்ய, அசட்டு நகையுடன், சுந்தர் செல்லில் எண்களை அழுத்தலானான்.

சற்று விலகி நின்று பேசிவிட்டு மலர்ந்த முகத்துடன் வந்து ''வருகிறாளாம்ப்பா!'' என்று வழிந்தான்.

அவனை கிண்டல் செய்வதில் எல்லோர் முகங்களும் மலர்ந்து விகசிக்க, சுந்தருடைய காதலி மனோகரியும்

அதே மலர்ச்சியுடன் வெகு விரைவிலேயே வந்து சேர்ந்தாள்.

அதே வேகத்தில் பாயசமும் தயாராயிற்று.

நந்தகுமாரன் வந்தனா திருமண விவரம், அவளும் அறிந்ததே.

நெஞ்சில் நிரம்பியிருந்த நன்றி உணர்ச்சியில், ஆவலும் மகிழ்ச்சியுமாக வேலை செய்தாள்.

பாயசத்தை செய்ததோடு, எல்லோருக்கும் கிண்ணத்தில் ஊற்றி, ஸ்பூன் போட்டுக் கொடுத்தாள்.

ரசித்து அருந்தியவாறு, "ஏய் மச்சி, நீ ரொம்ப லக்கிடா. பாயசம் என்ன இனிப்பாக ருசியாக இருக்கிறது பார்!" என்று நந்தகுமார் பாராட்டினான்.

"ஓ" என்று உரக்கச் சிரித்துவிட்டு, "மச்சி, இனிப்பாக இருப்பதுதான் பாயசம், உப்பு புளிப்போடு இருந்தால், அதன் பேர் ரசம்" என்று பசுபதி கூற, சிரிப்பும் கலகலப்புமாக, வீட்டில் ஒரே அமளியாக இருந்தது.

முதலில் கிளம்பியது, மனோகரிதான்.

"ஒரு சினேகிதி, பாலா என்று பெயர். அவள் வீட்டுக்குப் போவதாக அம்மாவிடம் சொல்லும்படி, வேலைக்காரம்மாவிடம் சொல்லிவிட்டு வந்தேன். அதை உண்மையாக்க, இப்போது அவள் வீட்டுக்கு வேறு போயாக வேண்டும். இல்லாவிட்டால், ஏடாகூடமாக அம்மா முன்னிலையிலேயே, என்னடீ, ஆளையே காணோம் என்று கேட்டு, என்னை மாட்டி வைத்து விடப் போகிறாள். அப்புறம், என்னை வீட்டுக்குள்ளேயே வைத்துப் பூட்டாத குறையாகி விடும். வரட்டுமா? நந்தா அண்ணா, வருகிறேன். பதியண்ணா, வருகிறேன், வந்தனா? வரட்டுமா?

பள்ளிப் படிப்பின்போது, நாம் இருவரும் ஒரே வகுப்பு தான். ஆனால், சுமாராகப் படித்ததால், நான் 'சி' பிரிவு. நீதான் எப்போதும் 'ஏ'தானே பை, வந்தனா?'' என்று படபடவென்று பேசி முடித்தவள், சுந்தரிடம் ஒரு கடைக்கண் பார்வையோடு, தலையை மட்டும் அசைத்து விடை பெற்றுக் கிளம்பினாள்.

கேலியும் கிண்டலுமாக, முக்கியமாக சுந்தரைக் கிண்டலடித்தபடி எல்லோரும் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருக்கையில், வந்தனா மட்டும் சற்று அமைதி யாகவே இருந்தது நன்றாகவே தெரிந்தது.

குறைவாக, அதுவும் முயன்று பேசுவது, நன்றாகவே தெரிந்தது.

எனவே, தங்கள் உரையாடலுக்குள் அவளையும் கொண்டுவர, எல்லோருமே முயற்சி எடுக்கத்தான் செய் தார்கள்.

ஆனால், கண்ணைத் தொடாத முறுவலில், அவள் உதடுகளை மட்டும் லேசாக இழுத்து சிரிப்பது போலக் காட்டினாளே தவிர, மற்றவர்களின் மகிழ்ச்சியில், அவள் மனதாரக் கலந்து கொள்ளவில்லை. கலந்து கொள்ள முடியவில்லை என்று தோன்றியது.

ஒருவேளை, பெண்ணாக இருந்தும், அடுப்படி விஷய மாக, அரிச்சுவடி நிலையில் கூட இல்லையே என்று வருந்துகிறாள் என்றே, எல்லோரும் எண்ணினர்.

அவளைத் தேற்றும் நோக்கத்தோடு ''ஓரிரு சமையல் புத்தகங்களை வாங்கி வைத்துக் கொண்டால் நாலே நாளில் படித்துவிடலாம்'' அவளுக்குத் தென்பூட்டினர்.

ஆனால், அப்போதும் அவளது முகம் ஒன்றும் பூவாக மலர்ந்து விடவில்லை.

நந்தகுமாரனை ஒரு தரம் நேராகப் பார்த்துவிட்டு, எதுவும் பேசாமல், சும்மாவே இருந்தாள்.

ஏனிப்படி என்று யோசித்த நந்தகுமாரனுக்கு உடனே விஷயம் புரிந்தது.

என்னவானாலும் பெண். உள்ளூர அச்சம் இருக்கத் தான் செய்யும். முடிந்தவரை சீக்கிரமாக, இவளுக்கு எல்லாம் தெளிவு படுத்திவிட வேண்டும். அப்போது தான் நம்பிக்கையோடு, நிம்மதியாக இருப்பாள் என்று எண்ணினான் அவன்.

இருள் பரவத் தொடங்கியதும், நண்பர்கள் மெல்லக் கிளம்பலானார்கள்!

சிறு சிறு சங்கடமான மௌனங்கள். அதைத் தவிர்க்க என்ன செய்வது என்று அறியாத திணறல்கள்.

கல்யாணம். ஆனால் கல்யாணமில்லை! புதுக் குடித் தனம். ஆனால் அப்படியுமில்லை. ஆனால், இருவருக் குமே இது புது வாழ்வு! இதில் என்ன சொல்லி வாழ்த்தி அவர்களைத் தனியே விட்டு அங்கிருந்து வெளியேறுவது?

கடைசியாக, நந்தகுமாரும் வந்தனாவும் தனக்கு செய்திருக்கும் உதவிக்கு நன்றி தெரிவித்து, சுந்தர் விடைபெற்றான்.

பசுபதியோ, ''நீங்கள் இருவரும் செய்திருக்கும் தியாகம் ஒரு போதும் வீணாகாது, மச்சான். சீக்கிரமே, எல்லாம் நல்லபடியாக முடியும் என்று எதிர்பார்ப்போம். அதுவரை, சமாளியுங்கள்'' என்று கூறிக் கிளம்பினான்.

களைத்தவள் போல, வந்தனா பெருமூச்சுவிட, அலுப்புத் தீர சோம்பல் முறிக்கப் போன நந்தகுமார், சட்டென அடக்கிக் கொண்டான்.

தனியறையில் போல உடம்பைத் திருக்கி நீட்டிச் சோம்பல் முறித்தால், அதே அறையில் இருக்கும் அந்தப் பெண்ணுக்கு ஒரு மாதிரி இருக்காதா?

கூடவே, அவளிடம் சொல்ல எண்ணியது நினைவு வர, ''வந்தனா, உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்'' என்று தொடங்கினான்.

அவனை நிமிர்ந்து பார்த்து ''நானும் சொல்ல வேண்டும். முதலில் நீங்கள் சொல்லுங்கள், நந்தகுமார்'' என்றாள் வந்தனா.

இந்த தனிமை பற்றித்தான் ஏதோவாக இருக்கும் என்று, நந்தகுமாரனுக்கு நிச்சயம், எனவே, அவனே சொல்லத் தொடங்கினான்.

''கவனி வந்தனா, எதையும் கொஞ்சம் மேம்போக்காக எடுத்துக் கொள்கிறவன் என்று என்னைப் பற்றி, சிலர் சொல்வார்கள். ஆனால், சொன்ன வார்த்தை மாற மாட்டேன். நம்மைப் பொறுத்தவரை, இது ஒரு தொழில் உடன்பாடு. அதனால் என்னிடம் பயப்படத் தேவை கிடையாது. நீ பயப்படவும் கூடாது. அது எனக்குப் பிடிக்காது'' என்றான். அழுத்தமான குரலில்.

ஆனால், லேசாகப் புருவம் சுருக்கி ''யாரைப் பார்த்து, நான் எதற்குப் பயப்பட வேண்டும்?'' என்று கேட்டு, அவனைத் திகைக்க வைத்தாள், அவள்.

''அது... வந்து... நீயும் நானும், இங்கே தனியாக... என் மேல் ஏதாவது சந்தேகமாக இருந்தால்...'' என்று உரிய வார்த்தைகளால் சொல்ல முடியாமல், நந்தகுமார் தடுமாறினான்.

''சேச்சே! அப்படி எதுவும் இல்லை, நந்தகுமார். நான் உங்களை முழுதாக நம்புகிறேன்'' என்றாள் அவள் தெளிவாக.

''ஓ!'' என்றவனுக்கு, மனது பெரிதும் நிம்மதியடைந்தது. என்ன செய்தாலும், தப்பா எண்ணிக் கொள்வாளோ என்று பயந்து கொண்டே இருக்கத் தேவையில்லை. ஆனால்...

''பின்னே ஏன் அப்படிப் பார்த்தாய்?'' என்று விசாரித்தான் நந்தகுமாரன்.

''எப்படி... எப்போது?'' என்று இவள் கேட்க, அவன் விளக்கினான். ''சமையல் புத்தகங்கள் போதும் என்று பேசினோமே! அப்போது!''

''அதுவா?'' என்று நிமிர்ந்து அவன் முகத்தை நேராகப் பார்த்தாள் வந்தனா.

''சொல்கிறேன், நான் சொல்ல நினைத்ததும் அதுதான்'' என்று தொடங்கினாள்.



# 5

சரியான வார்த்தைகளைத் தேடியோ, என்னவோ, சில கணங்கள் யோசித்துவிட்டு, அதன் பிறகே, ஆனால், நிமிர்வு சற்றும் தளராமல் வந்தனா சொல்லலானாள்.

''நந்தகுமார், நீங்களே சொன்னது போல, நம்முடையது முழுக்க முழுக்க ஒரு தொழில் உடன்பாடே. இதில் என்

லாபம், என் படிப்பு, உங்கள் தேவை. நண்பனுக்காக, அந்த மனோகரியோடு திருமண நிறுத்தம். இதற்காகப் பெயரளவில் நமக்குத் திருமணம் நடந்திருக்கிறது. இது நம் முக்கிய உடன்பாடு, சில்லரை ஷரத்துக்களாக, மற்றவர்களை நம்ப வைப்பதற்காக உங்களுக்காகவும், படிப்பு முடியும் வரை எனக்காகவும் ஒரே வீட்டில் வாசம், அவ்வளவுதான்...''

''ஆமாம் அவ்வளவுதான். இதை யாரும் மறுக்கவில்லையே. பின்னே, ஏன் அப்படிப் பார்த்தாய்?''

முகம் இறுகிற்று அவளுக்கு ''பிறகென்ன? இந்த உடன்பாட்டில், சமையல் புத்தகத்துக்கு அவசியம் என்ன? நான் பாடம் படிக்க வந்திருக்கிறேன், நந்தகுமாரன், சமையல் பண்ணிப் போட அல்ல! அதை என்னிடம் யாரும் எதிர்பார்க்கக் கூடாது நீங்கள் உட்பட!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி முடித்துவிட்டு, அவனது பதிலுக்குக் காத்திராமலே எழுந்து, அங்கிருந்து ஒற்றைப் படுக்கை யறைக்குள் சென்று மறைந்தாள்.

என்ன திமிர் என்று ஆத்திரம் வந்தபோதும், வந்த ஆத்திரம், அவனுக்கு உடனேயே அடங்கியது.

வந்தனா கூறியதும் சரிதானே? படிப்புக்கு பணம் தருவதோடு நில்லாமல் இந்த ஆண்டின் படிப்பு தடை யற்று நடப்பது அவனது பொறுப்பு என்று ஒத்துக் கொண்டிருக்கிறான். சொல்லப் போனால், அந்த யோசனையே அவனதுதான்.

பெற்றோரும், மற்றவர்களும் நம்பும்வரை, அவனும் அவளும் ஒரே இடத்தில் தங்க வேண்டும் என்பதற்காக,

அவளது படிப்பைத் தூண்டிலாக்கிச் சொன்னான். ஆனால் சொன்னது, சொன்னதுதான்? அதை, அவனே மீறலாமா?

அவனுக்குச் சமையல் பண்ணிப் போட்டுக் கொண் டிருந்தால், அவள் எப்போது படிப்பாள்? இந்தப் படிப்புக் காக தன் எதிர்கால வாழ்க்கையையே பணயம் வைத் திருப்பவள்! ஆனாலும்...

சற்று நேரம் யோசித்துக் கொண்டிருந்துவிட்டு, வந்தனாவை உணவருந்த அழைத்தான் அவன்.

ஏற்கனவே வாங்கி வைத்திருந்ததுதான்.

அவளது முகம் சற்றே கலங்கியிருப்பது போலத் தோன்றியபோதும், அவன் எதுவும் கேட்கவில்லை.

சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுக்கிற மாதிரி, இன்னொரு குறை சொல்ல வாய்ப்பைக் கொடுக்கக்கூடாது.

வந்தனாவும், எதையும் பேசுவதாக இல்லை. சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்துவிட்ட மாதிரி, மௌன மாகவே உண்டுவிட்டு, மிச்சம் மீதியை எடுத்து ஒதுக்கி விட்டுப் படுக்கப் போனாள்.

செல்லுமுன், ஹாலில் கிடந்த சற்று நீளமான 'திவான்' ஓரக் கண்ணில் பட்டது.

அதில்தான், நந்தகுமாரன் படுக்கப் போவதாக திட்டம்.

நந்தாவின் உயரத்தைக் கணக்கிட்டால், அதன் மேல் படுத்து உறங்குவதற்கு அவன் மிகவும் சிரமப்படுவான் என்று, அவளுக்குத் தோன்றியது.

பெண் என்பதால, அவளுக்குச் சற்று தனிமை தேவைப் படும் என்று, இருந்த ஒற்றைப் படுக்கையறை, அவ ளுக்குத் தரப்பட்டிருந்தது.

எல்லாமே நண்பர்கள் மூவருமாகச் சேர்ந்து திட்ட மிட்டதுதான்.

நண்பனுக்காக, நந்தகுமாரன் எந்த அளவுக்குத்தான் போவான்? உடன் பிறந்த ரத்தமே பொய்த்துப் போகும் இந்தக் காலத்தில், இப்படியா என்று ஆச்சரியமாக இருந்தது, வந்தனாவுக்கு.

காலையில சீக்கிரமாகவே விழித்து, வந்தால், கையில் ஒரு கப்புடன், அங்கே அமர்ந்து, நந்தகுமாரன் பத்திரி கையைப் படித்துக் கொண்டிருந்தான்.

அவள் முகத்தில் வியப்பைக் கவனித்து ''ஜாக் பண்ணுவதற்காக தினமும் சீக்கிரமே விழித்துப் பழக்கம். அப்படியே பால் வாங்கி வந்தேன். காய்ச்சியும் வைத்திருக் கிறேன். 'இன்ஸ்டன்ட் காபி கலக்கவேணும் தெரியுமா? இல்லையென்றால்'' என்று எழப் போனவனிடம் ''வேண் டாம் நானே கலந்து கொள்கிறேன். ஆனால், தூள் எவ் வளவு போட்டால் நன்றாக இருக்கும்?'' என்று கேட்டாள் அவள்.

அவன் எழுந்தான்.

''பார் வந்தனா, நீ எனக்குச் சமையல் பண்ணிப் போட வேண்டும் என்று, நான் சொல்லவில்லை. ஆனால் உனக்கு ஒரு காபி சூடு பண்ணிக் கொள்ளவேனும் தெரிந் திருப்பது நல்லது'' என்று அவள் கூடவே சமையல் அறைக்கு வந்து காபி போடக் கற்றுக் கொடுத்தான்.

''நான் போட்ட முதல் காபி!'' என்று சொட்டு விடாமல் குடித்து முடித்தாள் வந்தனா.

''அதை கையோடு கழுவி வைத்துவிடு. அதை நாமே தான் செய்ய வேண்டும். வேலைக்கு ஆள் வைத்தால்,

'உள் வீட்டு சங்கதி, ஊர் அம்பலத்தே உரைப்பார்' என்று பாரதியார் சொன்னது போல, நம் விசித்திர வாழ்வு, வெளியே பரவக்கூடும். சமையல் பண்ணப் போவது இல்லை எனும்போது, பாத்திரங்கள் நிறைய அழுக்காக வும், வாய்ப்பில்லை. அதனால்... சம்மதம்தானே?'' என்றான் நந்தகுமாரன்.

அவன் மறுபடியும் பத்திரிகையில் மூழ்க, வந்தனா, அவனை ஆராய்ந்தாள்.

நிச்சயமாக, இந்த திவானில் அவனால் சரியாகப் படுத் திருக்கவே முடியாது. கால் தொங்கியிருக்கும். அப்புறம் தூங்குவதேது?''

பார்க்கும்போதே, கால்கள் தொங்காமல் சமாளிக்க, அவன் நாற்காலியை இழுத்துப் போட்டிருப்பது தெரிந்தது. திண்டாடி திணறியிருப்பான் பாவம்!

அவளானால், வெகு நாளைக்குப் பிறகு, தனியறை யும், ஓரளவு நல்ல படுக்கையுமாகக் காலை வரை நன்றாகத் தூங்கினாளே! குற்ற உணர்ச்சி குறுகுறுக்க ''நந்தகுமார்'' என்று அழைத்தாள் வந்தனா.

பத்திரிகையைத் தாழ்த்தி, அவளைப் பார்த்தான் ''என்ன வேண்டும்?''

''எனக்கு ஒன்றும் வேண்டாம். ஆனால், வந்து... குளியல் அறை! நீங்கள் வேண்டுமானால் முதலில் குளிக்கிறீர்களா? வீட்டில், சொந்த அட்டாச்டு பாத்ரூமில் குளித்துப் பழகியவர்களுக்கு, அடுத்தவர் பயன்படுத்தி யதில் குளிக்கப் பிடிக்காது. அதனால் நீங்கள் முதலில் குளியுங்களேன்'' என்று ஒருவாறு சொல்லி முடித்தாள், அவள்.

புரியாமல் அவளைப் பார்த்தான் நந்தகுமாரன், பின்னர் ''நீயும் அப்படி இருந்து பழகியவள்தானே?'' என்று வினவினான்.

''அதனால்தான் சொல்லுகிறேன்'' என்றாள் வந்தனா ''விடுதியில் அடுத்தவரின் பின்னே குளிக்கும்போது, ரொம்பக் கஷ்டமாக இருக்கும். ஆனால், அதற்குப் பழகி விட்டவள் நான்...'' என்று, திவானை ஒரு பார்வை பார்த்து விட்டு, ''உங்களுக்கு சும்மாவே, சிரமம், நந்தகுமார். அனாவசியமாக, இதிலும் எதற்கு?'' என்று கேட்டாள்.

திடுமென வாழ்வில் நேர்ந்த மாற்றத்தினால், பாவம் எவ்வளவு கஷ்டப்பட்டாளோ என்று, உள்ளூரப் பரிதாபம் அவனுக்கு உண்டாயிற்று.

அதற்கு நடுவிலும், அவனது கஷ்டத்தைப் பற்றியும் யோசித்திருக்கிறாளே! நல்ல பெண்தான் போலும் என்று எண்ணியவாறே நந்தகுமார் குளிக்கப் போனான்.

சமையல் செய்ய முடியாது என்று இன்னோரன்ன வார்த்தைகளால் வந்தனா உறுதியாகச் சொன்னதும், இப்போது அவனுக்கு முழு நியாயமாகவே பட்டது.

பொதுவாகத் தகவல் நிலையமாகக் கருதப்பட்ட பசுபதியிடம் போய் என்ன செய்வது என்று, நந்தகுமார் ஆலோசனை கேட்டான்.

ஏனெனில், அவனுக்குப் பழக்கமான உணவு நிலை யங்களில் தினமும் இருவர் சாப்பிட்டால், அவனது ஊதியம் பாதி மாதத்துக்குக் கூட கட்டி வராது என்பது, அவனுக்கு நிச்சயம்.

அவனது ஆலோசனையின் பேரில், அந்த சுற்று வட் டாரத்தில் வீட்டில் சமையல் செய்து, கேட்கிற இடத்தில் கொண்டு போய்க் கொடுக்கிற ஒரு முகவரி கிடைத்தது.

கணவருக்கு முடக்கு வாதம் வந்து, வேலைக்குச் செல்ல முடியாமல் போய்விட, மனைவியும் தாயாருமாகத் தொடங்கியது, வளர்ந்து, நல்ல வருமானம் தரும் தொழிலாகவே வளர்ந்து கொண்டிருந்தது.

தேவைப்பட்டதை முன்னதாகச் சொல்லிவிட்டால், அனுப்பி விடுவார்கள். சற்று எளிமையான உணவுதான் என்றாலும், வீட்டுச் சாப்பாடாக சாப்பிட முடிந்தது.

''விடுதிச் சாப்பாட்டுக்கு, இது அமிர்தமாக இருக்கிறது'' என்றாள் வந்தனா.

''விளையாட்டுப் போட்டிகளுக்குச் செல்லும்போது, கிடைப்பதை உண்டு எனக்குப் பழக்கம் இருக்கிறது'' என்றான் நந்தகுமாரன்.

காலை உணவின் பின், ஆர்டர் செய்து வந்திருக்கும் ஏதாவது கலந்த சாதத்தை எடுத்துக் கொண்டு, வந்தனா கல்லூரிக்கும் நந்தகுமாரன் வேலைக்கும் செல்வார்கள்.

மாலையில் நந்தகுமார் வரச் சற்று தாமதமாகும். வந்தனா எப்போதும் லாப்டாப்பும் கையுமாக இருந்து, வேலை செய்து கொண்டே இருப்பாள்.

இரவுக்கு வருவதை உண்டுவிட்டு, அவரவர் இடத்தில் முடங்குவார்கள்.

இப்படியே அந்த வாரம் முழுவதும் கழிந்து முடிந்தது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை நண்பர்கள் இருவரும் வந்து சேர்ந்தார்கள்.

உண்பதற்கும், கொறிப்பதற்கும், அவரவர் வீடுகளிலிருந்து முறுக்கு, பக்கோடா என்று எதையெதையோ கொண்டு வந்திருந்தார்கள்.

நந்தகுமாரை உறுத்தியது என்னவென்றால், அறைக்குள் இருந்து வேலை செய்து கொண்டே இருந்த வந்தனா, எழுந்து வந்து 'வா' என்று அவர்களை வரவேற்கவோ, அவர்களோடு பேசவோ இல்லை.

பேசுவதென்ன, அவள்தான் கதவையே திறக்கவில்லையே!

சுந்தருக்கும், பசுபதிக்கும் அது உறுத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் பார்க்க வந்தது, அவர்களுடைய நந்தாவைத்தான். எப்போதும் போல அவர்கள் மூவருமாகப் பேசியதில், இயல்புக்கு மாறாக எதையும், அவர்கள் உணரக்கூட இல்லை.

ஆனால், இதைத் தன் வீடாகக் கருதியிருந்த நந்தகுமாரோ, சாதாரண நாகரீகம் இல்லாமல், தன் நண்பர்களை வந்தனா அலட்சியப்படுத்தியது போலவே, உணர்ந்தான்.

ஆனால், அவளைப் பற்றிய எண்ணமே இல்லாமல், பசுபதியும் சுந்தரும் கலகலக்கவே, தன்னையறியாமலே வந்தனாவை மறந்து, நந்தாவும் அதிலே கலந்து கொண்டான்.

இந்த ஒரு வாரமாக இருவர் வீடுகளிலும், வெளியிலும் நடந்தவற்றை, நகைச்சுவை வண்ணம் பூசி இருவரும் சொன்ன தினுசில் நந்தனின் வாய்ப்பூட்டு கழன்றுவிழ, அவனும் தொடங்கி விட்டான்.

''டேய் மச்சிங்களா, எங்கள் அலுவலகத்தில் ரோட் ரோலர் ஒன்று இருக்கிறதுடா. அதற்குத்தான் ரொம்ப அழகென்று எண்ணம்! சதை பிதுங்கப் பிதுங்க இறுக்கமாக எதையாவது அணிந்து கொண்டு வருவாள் பார்!

எல்லோரும் சிரிப்பார்கள். ஏதோ சந்தேகம் கேட்கும் பாவனையில் பாசிடம் போய் நின்றாளாம். அவர் என்னிடம் தள்ளி விட்டுவிட்டார். வரும்போதும், போகும் போதும் இடுப்பை ஆட்டுவாள், பார்! ஹையோ சகிக்க முடியவில்லைடா! மச்சான், மனோகரியின் இடுப்பே, அவளது ஒரு தொடையளவுதான் வரும் என்றால் ஊகித்துக் கொள்ளுங்களேன்!'' என்று சுந்தர் கூறவும், எல்லோரும் ஒருமுறை விழுந்து விழுந்து நகைத்தனர்.

சிரித்து முடித்ததும் ''ஆனால், இப்போது எனக்கு ஒரு சந்தேகம், மச்சான். இவன் எதற்கு, அந்தப் பெண்ணின் தொடையைப் பார்த்தான்? அதுவும் இவ்வளவு துல்லியமாக அளவு சொல்லும் அளவுக்கு? நம்ம மனோத் தங்கச்சியிடம் ஒரு வார்த்தை போட்டு வைக்க வேண்டும் போலத் தெரிகிறதே!'' என்று நந்தகுமார் உரக்க யோசிக்கவும், மற்றோர் அவுட்டுச் சிரிப்பு வெடித்தது.

சிரிப்புனூடே, ''அய்யோ பாவி, பாவி வத்தி வைத்து விடாதேடா, மச்சான். ஏதோ இப்போதுதான் விஷயம் ஒரு வழியாகத் தளிர் விடத் தொடங்கியிருக்கிறது! ஆசிட் ஊற்றி அழித்துவிடாதே!'' என்று சுந்தர் பரிதாபமாகக் கெஞ்ச, ''ஆஹா விடுவதில்லை'' என்று தொடையில் தட்டி, மற்றவர்கள் சேர்ந்து மிரட்டினார்கள்.

உற்சாகப் பேச்சும் சிரிப்புமாகச் சத்தம் ஏறிக் கொண்டே போக, 'டக்'கென்று அறைக் கதவு ஒலியுடன் திறந்தது.

கதவைத் திறந்து வெளியே வந்த வந்தனா, அவர்களைத் திரும்பியும் பாராமல், நேரே வெளியே போய், மொட்டை மாடிக்குச் செல்லும்படியில் ஏறலானாள். கையில் லாப்டாப்.

நண்பர்களின் பேச்சு சட்டென நின்றுவிட, முகத்தி லேயே அறை வாங்கினாற்போல, நந்தகுமாரின் முகம் கன்றிக் கறுத்துப் போயிற்று.

வெளியே காட்டிக் கொள்ளாதிருக்க முயற்சி செய்த போதும், நண்பர்களின் முகத்தில் சிரிப்பு உறைந்து, பேச்சு நின்று போனது. அவனுக்கு இன்னமும் ஆத்திர மூட்டியது.

இவர்கள் இல்லாவிட்டால், அவள் இப்போதும், குறைந்த சம்பளத்துக்கு பில் போட்டுக் கொண்டு, வசதியற்ற விடுதியில் வாடிக் கொண்டிருக்க வேண்டும்!

கொஞ்சமும் நன்றியே இல்லாமல், எப்படிப் போகி றாள்!

''வா என்று ஒரு வார்த்தை சொல்லாமல் போவதைப் பார்! என்ன திமிர்'' என்று கொதித்தான் அவன்.

நண்பர்களுக்கும் சங்கடமாகத்தான் இருந்தது. ஆனால் எரிகிற தீயில் எண்ணெயை ஊற்ற விரும்பாமல், நந்தகுமாரை அமைதிப்படுத்தினார்கள்.

''போகிறதுடா. படிப்புக்காகத்தானே அவள் செய்வது எல்லாம்? கையில் எடுத்துப் போவதைப் பார்த்தாயா? இப்போதுகூட சீரியசாக பாடம்தான், ஏதோ செய்து கொண்டு இருந்தாள் போல! நாளைக்கு முடித்துக் கொடுக்க வேண் டியதாக இருக்கலாம்! நாமும், தனியாக இருப்பதுபோல, அதிகமாகத்தான் கும்மாளம் போட்டு விட்டோம். அவள் என்ன, நம்மிடம் வந்து கத்தினாளா, என்ன? நம் பேச்சுக்கு இடைஞ்சல் இல்லாமல் விலகித்தானே போய்விட் டாள்? அதற்குப் போய் கோபப்படாதே'' என்று மாறி மாறிப் பேசி, சமாதானம் சொன்னார்கள்.

ஆனால், அதற்கு மேல் அவர்களால் அங்கே தங்கி அரட்டையடிக்கவும் முடியவில்லை.

அத்தோடு, சுந்தர் அவனது இன்னொரு கவலையையும் தெரிவித்தான். ''நந்தா ப்ளீஸ், இதற்காக நீ பிரச்சினை எதுவும் பண்ணி விடாதேய்யா. உன் திட்டம், இன்னும் முழுக் கிணறையும் தாண்டி முடிக்கவில்லை. உன் நாடகத்தை அங்கிள் முழுதாக நம்பியது போலவும் தெரியவில்லை. மனோ அப்பாவிடமே சொல்லியிருக்கிறார். 'இதில் என்னமோ இருக்கிறது, என் பையன் இப்படி நடக்கிறவன் இல்லை, எதிலும் கொஞ்சம் மேம்போக்காகப் போகிறவனே தவிர, இப்படி திடுமென எவளோ ஒருத்தியைத் திருமணமே செய்து வாழ்வது, அவன் குணத்துக்கு ஒத்து வரக் காணோம், காதல் கீதல் என்றால் சரி, போகிறது என்று நாங்களே பண்ணி வைத்திருக்க மாட்டோமா? ஒரு வேளை, அந்தப் பெண்ணுக்கு உதவி செய்வதாக எண்ணி, ஏதோ அசட்டுத்தனம் பண்ணுகிறானோ, என்னவோ? பொறுத்திருந்து பார்க்க வேண்டும்' என்று அங்கிள் சொன்னதாக, மனோ அம்மாவிடம், மனோ அப்பா சொன்னாராம். இவள் அப்படியே ஒட்டுக் கேட்டு என்னிடம் ஒப்பித்தாள்...''

''மனோ அப்பா, மனோ அம்மா என்று நீட்டி முழுக்குவானேன்? மாமியார், மாமனார் என்று குறிப்பிட வேண்டியதுதானே?'' கேலிக் குரலில் நிலைமையை இலகுவாக்கும் நோக்கத்துடன் பசுபதி வினவினான்.

''ஒருவேளை, அவள் பெயரைத் திரும்பத் திரும்பச் சொன்னால், நாக்கில் தேனாய் இனிக்கிறதோ, என்னவோ?'' என்று பசுபதியைத் தொடர்ந்து நந்தகுமாரும் முயன்றான்.

''போ, மச்சான்!'' என்றான் சுந்தர் அலுப்புடன் ''இதை யெல்லாம் நந்து அண்ணனிடம் தெரிவித்து, எச்சரிக்கை யோடு இருக்கும்படி சொல்லுங்கள் என்றாள். எதற்கெல் லாம் பயப்படுவது என்று பார்! கொஞ்ச நாள் அவளுக்கு வேறு மாப்பிள்ளை பார்க்க மாட்டார்கள் என்று சற்று இலகுவாக மூச்சு விடுமுன், இப்படி ஒரு பிரச்சினை. ஓர் ஆண்டுக்கு வந்தனாவால் பிரச்சினை இராது என்று நினைத் தால், அதிலும் இடிக்கிறது. என்ன ஆனாலும் கொஞ்சம் கவனத்துடனேயே இரு, நந்தா!'' என்றான் கவலைக் குரலில், கெஞ்சுதலாக.

அவன் முகத்தில் கப்பியிருந்த கவலையைப் பார்த்ததும், நந்தகுமாரின் மனம் இளகியது. நண்பனின் கையைப் பிடித்து, ''கவலைப்படாதே, மச்சி. உனக்கும் மனோகரிக் கும் கல்யாணம் நடக்கும் வரை, கழுத்தைப் பிடித்துத் தள்ளினால் கூட, நானும் வந்தனாவும் இந்த வீட்டிலிருந்து அசைய மாட்டோம். இது சத்தியம்!'' என்று பற்றியிருந்த கைமேல் சற்றுப் பலமாகவே அடித்து, சத்தியம் செய்தான்.

கையை உருவி ''ஆ!'' என்று உதறி ''இதுதான் சாக்கு என்று, வைத்து வாங்குகிறாயா, மச்சான்'' என்று கேட்டான் சுந்தர்.

''பின்னே சாமி, வேறு எப்படியப்பா, உன்னை அடிப்பது?'' என்று சோகம் காட்டிக் கேட்டான் நந்தா.

''ஆகா, எப்பேர்ப்பட்ட அன்பான நண்பனோடா அளவ ளாவிக் கொண்டிருக்கிறேன்! கடவுள் தான் என்னைக் காப் பாற்ற வேண்டும்!'' என்று சரணாகதி போலக் கைகளை உயர்த்திக் காட்டினான் சுந்தர்.

''அட அப்பன்களே, உன்னைக் காப்பாற்றத்தானே நான் இங்கே வந்ததே!'' என்று பசுபதி கடவுள் போஸ் கொடுக்க, ஒருவாறு மூன்று பேரும் சேர்ந்து சிரித்தனர்.

இப்படி முயன்று சிரிப்பது சீக்கிரமே அலுத்துவிட, விருந்தினர் இருவரும் அங்கிருந்து கிளம்பினர்.

வைத்திருந்து சாப்பிடுவதற்காக, இனிப்பும் காரமுமாக, ஏதேதோ தின்பண்டங்கள் கொண்டு வந்திருந்தனர். நியாயப்படி, இவர்களுக்கு நன்றி சொல்வதோடு, காபியும் போட்டுக் கொடுத்திருக்க வேண்டும்.

இவளானால் முகமறியாத அன்னியள் போல, எங்கோ போய் உட்கார்ந்து கொண்டாளே!

நந்தகுமாரின் முகத்தைப் பார்த்துவிட்டு ''என்னிடம் சத்தியம் செய்திருக்கிறாய், மச்சான்! மறக்க வேண்டாம்!'' என்று கெஞ்சுதலாகக் கேட்டுக் கொண்டான் சுந்தர்.

''அதெல்லாம் மறக்க மாட்டான், நந்தா என்றேனும் சொன்ன சொல் மாறியிருக்கிறானா?'' என்று சுந்தருக்குச் சொல்வது போல, பசுபதியும் நினைவூட்டவே, காரணம் புரிந்து நந்தகுமார் தன் முகபாவத்தை மாற்றிக் கொண்டான்.

இயல்பாகச் சொல்வது போல, ''வேண்டுமானால், இன்னொரு தரம் சத்தியம் செய்யட்டுமா?'' என்று அவன் கையை ஓங்கிக் காட்ட, இரு நண்பர்களும் சிரித்தவாறே கிளம்பிச் சென்றனர்.

அவர்கள் செல்வதைப் பார்த்தவாறே நின்ற நந்தகுமாரின் முகம் மறுபடியும் இருண்டது.

இந்த இரு நண்பர்களில் யார் அவனது வீட்டுக்கு வந்தாலுமே, அம்மா அப்பா இருக்குமிடம் தேடிப்போய் விடைபெற்றுப் போவார்கள். இப்போதும் மாடிக்குப்

போய், வந்தனாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பக் கூடியவர்கள்தான்.

ஆனால், அவள் என்ன மாதிரி நடந்து கொள்வாளோ என்று அஞ்சி, சொல்லாமலே போகிறார்கள்!

வரட்டும் வந்தனா. குடும்ப நாகரீகம் என்றால் என்ன என்று, அவளுக்குச் சற்று கற்றுக் கொடுக்க வேண்டும். அப்படி விறைத்துக் கொண்டு, வீட்டை விட்டு வெளி யேறி விடுவாளா, என்ன? பார்த்து விடலாம்!

கோபத்தில் குமுறும்போதே, சுந்தரின் கவலை ஒரு புறம், அவனை அமைதிப்படுத்த முயன்றது.

ஒருவேளை... நண்பனே அஞ்சியது போல ஏதேனும் நடந்து விட்டால்?

அவனுடைய தந்தை, அவனை வற்புறுத்தாமல் விட்டு விட்டாலும், மனோகரியுடைய பெற்றோர், எவனை யாவது தேடிப் பிடித்து மகளது திருமணத்தை முடிக் காமல் விடமாட்டார்கள்! அதனால், அவசரப்பட்டு, மாடிக்குப் போய், பிறர் அறியக் கத்திவிடக் கூடாது!

மனதை அடக்கிக் கொண்டு, நந்தகுமாரன் பேசாமல் உட்கார்ந்திருந்தான். சும்மா அல்ல! அவளை இப்படி மடக்க வேண்டும், அப்படி வார்த்தையால் குத்த வேண் டும் என்று, பலப்பல கற்பனைகளை!

ஆனால் வெகு நேரம் ஆன பிறகும் வந்தனா கீழே இறங்கி வரவில்லை என்றாலும் நந்தகுமாருக்கு, கலக்கம் உண்டாயிற்று.

மாடிக்குப் போனவளுக்கு என்ன ஆயிற்று?

மொட்டை மாடிக்குத் தனியாக வந்த பெண்ணை... என்று, எதிலோ படித்த செய்தி நினைவு வந்தது, இன்னமும் அவனது மனதைக் கலக்கியது.

நன்றாக இருட்டியாயிற்று. இன்னமும் அவள் மாடியிலேயே இருந்து என்ன செய்கிறாள்?

அவளுக்காகப் போன மாதிரி காட்டவும், நந்தகுமாருக்கு மனமில்லை. சும்மா இருக்கவும் முடியாமல், சத்தமின்றிப் படியேறிப் போனான்.

அவன் அஞ்சியதுபோல, அவளுக்கு எதுவும் ஆகவில்லை என்ற அளவில், அவனுக்கு நிம்மதியே.

ஆனால், அங்கே வந்தனா தன்னந்தனியே, தலையைக் கைகளால் தாங்கியபடி, அமர்ந்திருந்த நிலை, அவனை வெகுவாக உறுத்தியது.



# 6

அந்த அடுக்கு மாடி வீட்டின் மொட்டை மாடியில், சில சமயங்களில் ஏதாவது விழாக்கள் நடப்பதுண்டு.

குடியிருப்போர் சங்கத்திலிருந்து, வருஷப் பிறப்பை பொது விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். தனிப்பட்டோரும் முன் கூட்டியே சங்கத்தின் அனுமதி பெற்று சிறு விழாக்களை நடத்துவார்கள்.

எனவே, மின்விளக்கு வசதி, மொட்டை மாடியிலும் உண்டு.

எனவே இந்த நேரத்தில், இங்கே இருளில் உட்கார்ந் திருக்க வேண்டிய அவசியம் கிடையாது.

படிப்புத் தொடர்பாக, லாப்டாப் வெளிச்சமே போதும் என்றாலும், அதுவும் அணைக்கப்பட்டிருந்தது. அதாவது, அவள் வெறுமனே சும்மாதான் உட்கார்ந்திருந்தாள்.

விளக்கைப் போடலாமா என்று தோன்றிய எண்ணம், நந்தகுமாருக்கு உடனே மறைந்தது. அப்படி விறைப்பாக, எல்லோரையும் நண்பர்களோடு அவனையும் அவமதித்து விட்டு வந்தாளே, அவளுக்கு வேண்டுமானால், அவளே போட்டுக் கொள்ளட்டும் என்று, கோபமாகவே இறங்கி வந்து விட்டான்.

வரட்டும், வந்ததும், அவளிடம் சற்றுக் கடுமையாகப் பேசியே ஆக வேண்டும்.

விடுதி வாழ்வை நினைவுறுத்துவது கொடுமைதான். ஆனால், அவள் அதை அடியோடு மறப்பதும் சரியல்ல.

வந்தனாவின் மனது வலிக்கும் விதமாக, அதே சமயத்தில் அவள் செய்த தவறை உணர்ந்து அவள் வருந் தும் விதமாகவும் எப்படிப் பேசுவது என்று, நந்தகுமாரன் திட்டமிட்டுக் கொண்டிருந்தபோது, மெல்லிய காலடிச் சத்தத்தோடு, அவள் உள்ளே வந்தாள்.

உள்ளே வந்து கதவைச் சாத்தியவள், உடனேயே அவனை நோக்கி மெல்லிய குரலில் ''சாரி, நந்தகுமார்'' என்றாள்.

தானாகவே உணர்ந்து பேசுகிறவளிடம் என்னத்தை புரிய வைப்பது?

ஆயினும் நண்பர்களின் விரைந்து சென்ற விதம் மனதில் இருக்க, அவன் பேசாமல் பார்த்தான்.

லாப்டாப்பை திவான் மேல் வைத்துவிட்டு ''நாளைக்கு முடித்துக் கொடுக்க வேண்டிய வேலை நிறைய இருந்தது. உங்கள் பேச்சும், சத்தமும், உரிய வார்த்தைகளை இலகுவாகக் கொண்டு வர முடியாமல், ரொம்ப இடைஞ்சலாக இருந்தன. முடித்தாக வேண்டுமே என்றுதான்... பசுபதி சார் எண் என்னிடம் இருக்கிறது, மிஸ்டர் சுந்தரின் செல் எண் தந்தால், இருவரிடமுமே சாரி சொல்லி விடுகிறேன்'' என்று முடித்தாள்.

''பரவாயில்லை, அவர்கள் இருவருமே மிகவும் நல்லவர்கள். உன் காரணத்தைச் சரியாகவே ஊகித்துச் சொன்னார்கள். அதனால் மன்னிப்புக் கேட்க அவசியமில்லை'' என்றான் நந்தகுமாரன்.

''ஓ!'' என்று அவனை உற்று நோக்கினாள் வந்தனா ''அப்படியானால் நீங்கள் தான் கோபப்பட்டீர்கள் போல?''

ஒரு கணம் தயங்கியபோதும் ''ஆமாம்'' என்று உண்மையைச் சொன்னான் நந்தகுமார். ''அவரவர் வேலைகள் இருப்பதால், நாங்கள் அடிக்கடி சந்திக்க முடிவதில்லை. ஆனால் மூவர் மனதிலும் ஒளிவு மறைவு கிடையாது. ஒருவருக்காக ஒருவர் உயிரையும் கொடுப்போம். அவர்கள் இருவரும் நமக்கு பெரிய அளவில் உதவி செய்தவர்கள். இந்த வீடு, பொருட்கள் என்று பார்த்துப் பார்த்து வாங்கிக் கொடுத்தவன் பசுபதி, சுந்தரோ, என் அப்பா வெளியே போடா என்ற பிறகும், மானத்தோடு வாழ்க்கை நடத்துவதற்கான வேலையே வாங்கித் தந்தவன். அவர்கள் வீடுகளில் என்னையும் ஒரு பிள்ளை போலவே நடத்துவார்கள். படிப்புக்காகத்தான் ஒப்பந்தம், சமையல்

கற்கவோ, செய்யவோ முடியாது என்றாய், சரிதான் என்று நானும் ஒத்துக் கொண்டேன். ஆனால், என் வீடு தேடி வந்த என் நல்ல நண்பர்களை அவமதிப்பது போல நீ நடந்து கொண்டால், எனக்கு எரிச்சல் வராதா?'' என்று மனதில் இருந்ததைக் குரல் உயர்த்தாமல், அமைதி யாகவே தெரிவித்து முடித்தான்.

அவளும் இது பற்றியே யோசித்திருந்தவள் போலக் குறுக்கிடாமல் கேட்டாள். பிறகு ''ஒரு வகையில் நீங்கள் சொல்வது சரிதான், நந்தகுமார். ஆனால் இப்படி யோசித்துப் பாருங்கள், அவர்கள் இருவர் செய்ததும் உங்கள் விஷயமாக, உங்கள் பிரச்சினை தீர்வதற்காக மட்டும்தானே? இதில், நான் எங்கே வருகிறேன்?'' என்று பதிலுக்குக் கேட்டாள்.

''அதெப்படிச் சொல்ல முடியும்? இதில் உனக்கும் தானே, லாபம்?''

''நம் ஒப்பந்தம் என்ன? நண்பர் ஆசைப்பட்ட பெண் ணோடு உங்கள் திருமணம் நடக்காமல் நிறுத்துவதற் காக, உங்களை நான் பெயரளவில் மணக்க வேண்டும். பதிலாக; இந்த என் இறுதி ஆண்டு படிப்பு பொறுப்பு, உங்களுடையது. என்பதுதானே? அதன்படி, என் பங்கு கடமை எல்லாம் திருமணப் பதிவு அலுவலகத்தோடு முடிந்து விட்டது. மற்றவர், முக்கியமாக உங்களுடைய, மனோகரியுடைய பெற்றோர் நம்பும்படியாக இந்தத் திருமணம் இருக்க வேண்டும் என்பதால், ஒரே வீட்டில் வசிக்கிறோம். அவ்வளவுதான் என் பொறுப்பு? மற்றபடி, உண்மையாகவே உங்கள்... ம... வந்து, வீ... வீட்டுத் தலைவி மாதிரி, விருந்து, உபசாரம், சமையல் விவகாரம்

எல்லாம் என்னிடம் எதிர்பார்ப்பது...'' என்று அவள் சொல்லி வரும்போது குறுக்கிட்டு ''கூடாதுதான்'' என்று அவன் ஒப்புதலாகக் கூறி முடித்தது, அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது போலும்.

எனவே ''ஆனால் முகம் அறியாத யாரோ, எங்கோ வந்திருப்பது போலப் போவதும்...'' என்று அவன் தொடர்ந்து சொல்லத் தொடங்கியபோது, அவள் குறுக்கிட்டு, ''கூடாதுதான்!'' என்று முடிக்க, அந்தப் பெயரளவுத் தம்பதிகள் சற்று நேரம் விழுந்து விழுந்து சிரித்தார்கள்!

எதற்காக அப்படிச் சிரித்தோம்? இது ஒன்றும் பிரமாதமான நகைச்சுவை அல்லவே என்று, அப்புறமாகத் தனிமையில் இருவருக்குமே யோசனை வந்தது.

கேள்விக்குரிய பதில் சரியாகத் தெரியாவிட்டாலும், அந்தச் சிரிப்பிற்குப் பிறகு, இருவராலும் இலகுவாக உரையாட முடிந்தது எனலாம்.

அன்றைய தினத்தின் சங்கடத்தை ஈடு செய்வது போல, அடுத்த ஞாயிறு மாலைச் சிற்றுண்டி உண்ண, வீட்டுக்கு வருமாறு, வந்தனாவே, சுந்தரையும் பசுபதியையும் போன் செய்து கூப்பிட்டாள்.

இலகு சமையல் செய்வது பற்றிய புத்தகத்தை, நாலு புத்தகக் கடைகள் ஏறி, இறங்கித் தேடிப் பிடித்து வாங்கி வந்தாள்.

அதைப் பார்த்துப் பார்த்து கவனத்துடன், கேசரியும், பஜ்ஜியும் செய்தாள்.

ஆனால், என்னதான் பார்த்துப் பார்த்து செய்த போதும், பழக்கமற்ற வேலை என்பது தெரியத்தான் செய்தது.

கேசரியில் வேகாத ரவை, அங்கங்கே சேர்ந்து, கட்டி கட்டியாக உருண்டு கிடந்தன. பஜ்ஜிகள் இளமஞ்சளில் இருந்து கறுப்பு வரை, பல்வேறு வண்ணங்களில் காட்சி யளித்தன.

வந்தனாவே தனிக் கறுப்பாகி விட்ட பஜ்ஜிகளைக் கழித்துவிட்டு, கேசரியில் ரவைக் கட்டிகளை முடிந்த வரை அகற்றி, மீதியைத்தான் உண்பதற்காக எடுத்து வைத்தாள். ஆனாலும் பார்க்கப் பரிதாபகரமாகத்தான், அவை தோற்றமளித்தன.

ஆனால், அவைகளையும் ருசியாக இருப்பதாகச் சொல்லி, அந்த நண்பர்கள் உண்ட விதம், அவளது கண் களைப் பனிக்கச் செய்தது.

நல்லவேளையாக 'இன்ஸ்டன்ட்' காபி!

காபியைக் கலந்து எல்லோருக்கும் கொடுத்துவிட்டு தானும் ஒரு கப்புடன் வந்து, எல்லோருடனும் சேர்ந்து அமர்ந்தாள்.

கலகலப்பான பேச்சை ரசித்தபடி இருந்தவளுக்கு, இது கெடுவது தப்பு என்று தோன்றியது. கடமை என்று வலியுறுத்த முடியாததாக இருக்கலாம். ஆனால், மனி தாபிமானம் என்றும் ஒன்று, அவளுக்கும் இருக்கிற தல்லவா?

அவள் செய்த கேசரியையும், பஜ்ஜியையும், அவர்கள் சுவை என்று சொல்லிச் சாப்பிட்ட மாதிரி!

எனவே சுந்தரை நோக்கி "சுந்தர் சார், அன்று வந்து பாயசம் வைத்துத் தந்தாளே, உங்கள் மனோகரி. என் றேனும் எனக்குப் படிப்புக் கொஞ்சம் இலகுவாக

இருக்கும்போது இந்தச் சமையல் கற்றுத் தரக் கூப்பிட்டால், அவளால் இங்கே வந்து உதவ இயலுமா?'' என்று கேட்டாள்.

பளிச்சென்று வாயெல்லாம் பல்லாகி விட ''கட்டாயம்!'' என்றான் அவன். ''எப்போது வேண்டுமானாலும் சொல்லம்மா. நானே, அவளிடம் பேசி வரச் சொல்லுகிறேன்'' என்று ஆர்வத்துடன் கூறினான்.

வந்தனா நன்றி தெரிவிப்பதற்காக வாயை திறக்கு முன் ''கேட்டாயா, பதி? மச்சான்தான், மேடத்திடம் பேசி வரச் சொல்லுவாராம். மற்ற யாரும் அதில் மூக்கை நீட்டி விடக் கூடாதாம்ப்பா!'' என்று கிண்டல் செய்தான் நந்தகுமார்.

''நாக்கைத் தொங்கப் போடாத குறையாக அலைகிறான்ப்பா! தங்கச்சி, புரிந்ததா? நீ, மனோத் தங்கச்சியை நேராகக் கூப்பிட்டு விடக் கூடாதாம்! அந்தச் சாக்கில், அவளோடு இன்னொரு தரம் இவன் பேச வேண்டுமாம்! வேண்டுமானால் பார், மனோவை இன்றைக்குக் கூப்பிடவா, இப்போது கூப்பிடவா என்று, உன்னை அறுக்கப் போகிறான்!'' என்று பசுபதி தொடர்ந்தான்.

அசடு வழிந்தபடி, ''ஏதோ தங்கச்சிக்கு ஓர் உதவி செய்யலாம் என்று பார்த்தால், நம்ம மச்சான்கள் சும்மா விட்டு விட மாட்டார்களே!'' என்று குறைப்பட்டான் சுந்தர்.

கலகலவென்று சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, பயன்படுத்திய பாத்திரங்களைக் கழுவிச் சுத்தம் செய்வதில் உதவிவிட்டு, சுந்தரும் பசுபதியும் சிரித்த

முகமாகவே கிளம்பிச் சென்றது, மற்றவனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

செல்லை எடுத்து மணி பார்த்துவிட்டு ''இதற்கென்று, இரண்டு மணி நேரம் ஒதுக்கினேன். நாலு மணி நேரம் வினாடியாய்ப் போய்விட்டது. இதை ஈடு கட்ட இரவில் விழித்திருந்து படித்தாக வேண்டும்'' என்று வந்தனா சொன்னதுகூட, அவனுக்கு குறையாகப் படவில்லை. மாறாக, அன்றைய தவறைச் சீர்ப்படுத்துவதற்காகப் பாவம், எவ்வளவு பாடு பட்டிருக்கிறாள் என்றுதான் தோன்றியது.

அன்றைய தினத்தின் அடுத்த விளைவாக, மனோகரி அந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து போகலானாள்.

அதிலும் மூன்று நண்பர்களும் சந்திக்கும் தருணங் களில், அவள் நிச்சயமாக அந்த வீட்டில் இருந்தாள். மாலைக்கும் இரவுக்குமாக, உணவில் ஏதாவது தடபுடல் செய்வாள்.

தீவிரப் படிப்புக்குச் சற்று மாற்றமாகவும், சுவாரசிய மாகவும் இருந்ததால், வந்தனாவும் கேசரி, உப்புமா, பாயசம் போன்ற இலகுவான பதார்த்தங்களைச் செய்யப் பயின்று கொண்டாள்.

இரு பெண்களுக்கும் இடையே, ஆழ்ந்த நட்பு மலர்ந் ததும், இன்னொரு விளைவே.

வீட்டுச் சமையல் ஆர்வத்தில், கிடைத்த நேரங்களில், தன் இலகுச் சமையல் வகைகளை, வந்தனா செய்தும் வைத்தாள்.

வீடு, பாத்திர சுத்தம் போன்றவற்றை, நந்தகுமார், வந்தனா இருவருமே பகிர்ந்து கொண்டனர். உடை

கள், முதலில் இருந்தே அவரவர் பொறுப்பாகச் செய்தனர்.

இப்படித்தான் இருந்தாக வேண்டும் என்று வார்த்தைகளால் வரைமுறை செய்து கட்டுப்படுத்தாமல், ஒரு புரிதலோடு நடந்து கொண்டதால், எல்லாம் இதமாகவே நடந்தது.

அதில், முயன்று பயின்று செய்த வந்தனாவுக்கு, நந்தகுமாரன் தானாகவே செய்த வேலைகள் வியப்பை அளித்தன. ஆச்சரியமாகக் கேட்டபோது, விளையாட்டுக் குழுவோடு வெளியூர் செல்லும்போது, தன் தேவைகளைத் தானே செய்து பழகிக் கொண்டதாக விளக்கம் கொடுத்தான் அவன்.

வீடு, படிப்பு, அப்பா, அண்ணன்மார் என்று கூட்டுப் புழுவைப் போல வாழ்ந்திராமல், இவனைப் போல வெளி உலகமும் பழகியிருந்தால், விடுதியில் அவ்வளவு வேதனைப்பட்டிருக்க நேர்ந்திராது என்று, வந்தனாவுக்குத் தோன்றியது.

தொடர்ந்து சில வாரங்கள், மூச்சு விடக்கூட நேரமில்லாதது போல, வந்தனா தன் படிப்புக்காக உழைக்க நேர்ந்தது. இந்த 'சப்மிஷன்' அந்த 'ப்ராஜெக்ட்' என்று இரவு பகலாக அயராத உழைப்பு!

அதிலும் ஒரு புரொஃபசர், சபாபதி என்று பெயர். மாணவர்களை விரட்டி, விரட்டி வேலை செய்ய வைத்தார். மாணவர்களுக்கும் நல்லதுதான். என்றாலும், வந்தனாவுக்குப் படிப்பு தொடர்பான வேலையே, விழி பிதுங்கியது. பல நாட்கள், இரவு பன்னிரண்டு மணிக்கு முன், அவள் படுக்கச் செல்லவே முடியாது போயிற்று!

இந்த நாட்களில், சில சமயம் மனோகரி தானாகவே வந்து, ஏதாவது சமைத்து வைத்துவிட்டுப் போவாள்.

அப்போதெல்லாம் நண்பர்கள் சேர்ந்தாலும், அவர் களாகவே சத்தத்தைக் குறைத்துக் கொண்டனர். வந்தனா அறைக்குள்ளேயே பூட்டிக் கொண்டு கிடந்தாலும், அதைத் தவறாக யாரும் நினைக்கவுமில்லை.

ஒரு நாள் நந்தகுமாரன் செல்லில் பேசியபடி வீடு திரும்பியபோது, கிண்கிணியாக, வந்தனாவின் சிரிப்புச் சத்தம் வீட்டுக்குள்ளிருந்து கேட்டு, அவனைப் பிரமிக்க வைத்தது.

கூடச் சேர்ந்து சிரிக்க வேண்டும் போல, கலகல வென்று என்ன சந்தோஷமான நகையொலி! வந்தனா இப்படிச் சிரித்து, இதுவரை அவன் கேட்டதே இல்லை!

காரணம் என்னவாக இருக்கும் என்று யோசிக்கும் போதே, ''ஹலோ, ஹலோ!'' என்று பல அழைப்புகள், நந்தகுமாரின் காதைத் துளைக்கலாயின.

ஒரு கணம் திகைத்துவிட்டுப் பார்த்தால், அவனது செல்லில்தான் அழைப்புகள்! வேலை தொடர்பாக சக அலுவலருடன் பேசிக் கொண்டிருந்ததே மறந்து, வந்தனாவின் சிரிப்பொலியில் திகைத்து நின்றிருக் கிறான்!

எதிர்முனை நபரிடம் ஏதோ சொல்லி சமாளித்து விட்டு, கதவைத் திறந்து கொண்டு வீட்டினுள் சென் றான் நந்தகுமாரன்.

மலர்ந்த முகத்தை அவன் புறம் திரும்பிப் புன்முறுவல் செய்தாள் அவள்.

தானாக அரும்பிய புன்னகையோடு "என்ன சிரிப்பு?" என்று தன்னை மீறிக் கேட்டான் அவன்.

"பெரீய்ய விஷயம், நந்தகுமார்! இரண்டு நாட்கள் நிம்மதியாகத் தூங்கப் போகிறேன்" என்றாள் அவள் மகிழ்ச்சியோடு.

"தாராளமாகத் தூங்கலாம். வெகு நியாயமான ஓய்வு! பல நாட்களாக அவ்வளவு உழைத்திருக்கிறாய். ஆனால், ஒரு சின்ன சந்தேகம். சபாபதி சார், உயிரோடுதானே, இருக்கிறார்?" என்று விவரம் கேட்டான் நந்தகுமார்.

"ராமா ராமா!" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள் வந்தனா!

"ஹையோப்பா, மனிதர், மிகவும் நல்லவர்! வருகிற தலைமுறைக்காகக் கஷ்டப்பட்டுப் பாடம் எடுத்தால், அவரைச் சாகவா, சொல்லுகிறீர்கள்?" என்று கண்களை உருட்டிக் கோபம் காட்டி வினவினாள் வந்தனா.

"ஐயோ, பார்ப்பதற்கு பயமாக இருக்கிறதே! அம்மா, தாயே, நான் யாரையும் சாகச் சொல்லவில்லை. வந்ததில் இருந்து, வேலை வேலை என்று உங்களைப் பிய்த்துப் பிடுங்கிக் கொண்டிருந்தாரே, திடுமென ஓய்வெடுக்கப் போகிறேன், அதிலும் இரண்டு நாட்கள் என்றால், நான் என்ன எண்ணட்டும், நீதான் சொல்லேன்?" என்று அஞ்சியவன் போலக் கேட்டான் நந்தகுமாரன்.

"வெளியூருக்குப் போயிருப்பதாக எண்ணுவது! அவரது வீட்டில் விசேஷம் என்று நினைப்பது! ஏன், அவர் வீட்டில் வேறு யாருக்கேனும் உடம்பு சரியில்லாமல் கூட, இருக்கலாமே!" என்று வந்தனா பல்வேறு

விளக்கங்கள் கொடுக்க ''தப்பு, தப்பு'' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான் அவன்.

''ஓஹோ! அப்படியெல்லாம் வேறு இருக்கிறதா? சரி தான்ப்பா, நான் தப்பாக நினைத்தது. ரொம்பத் தப்பு தான், வந்தனா. ஆனால் நீ சொன்னதில் எந்தக் காரணம், உண்மைக் காரணம்?'' என்று விசாரித்தான் அவன்.

''ஒன்றுமே இல்லை!'' என்று கைகளை விரித்துக் கலீரென்று நகைத்தாள் வந்தனா.

''சபாபதி சார், ஒரு செமினாருக்காக, வெளியூர் போகி றார். அங்கே அவருக்குப் பாராட்டுப் பத்திரமும், வாசித்து அளிக்கப் போகிறார்களாம். அதைப் பற்றித்தான் கூடப் படிக்கிறவனிடம் பேசிக் கொண்டிருந்தேன். இரண்டு நாட்கள்! அங்கே அவரது ஆராய்ச்சி குறித்த வாதப் பிரதிவாதங்கள் நடக்குமாம். எங்கள் புரொஃபசர் பதில் விளக்கம் சொல்லிவிட்டுக் கிளம்பி வருவார்! இரண்டு முழு நாட்கள்ப்பா! நாற்பத்தியெட்டு மணி நேரம் இருக்கிறது. முகம் கழுவிவிட்டு வந்து, நன்றாகத் தூங்கப் போகிறேன். காலையில்கூட, என்னை எதற்காகவும் எழுப்பி விடாதீர்கள்!'' என்று கூறிவிட்டு, முகம் கழுவப் போனாள் வந்தனா.

வந்தனா போட்ட திட்டமெல்லாம் ரொம்பச் சரிதான். ஆனால் மின்வாரியமும், அப்படி நினைக்க வேண்டு மில்லையா?

வந்தனா அசந்து தூங்கிக் கொண்டிருக்கும்போது சுமார் பதினோரு மணியளவில், திடுமென மின்சாரம் தடைப்பட்டுப் போயிற்று.

சும்மாவே அன்று புழுக்கமாக இருந்தது.

வீட்டு ஏசி அறையை ஒரு தரம் ஏக்கத்துடன் நினைத்து விட்டு, அந்த நினைவை அகற்றுதற்காக, செல்லில் ஒரு திரைப்படத்தைப் பார்க்கத் தொடங்கினான் நந்த குமார்.

பத்தரை மணி வரை விழித்திருந்து, திரைப்படத்தைப் பார்த்து முடித்துவிட்டு, பல்துலக்கி, உடம்பு கழுவி, அவன் அப்போதுதான் தூங்கத் தொடங்கியிருந்தான்.

ஆழ்ந்த தூக்கம் வருமுன்பே மின்விசிறி சுழல்வது நின்றுவிட, வியர்க்கத் தொடங்கியதுமே, அவனுக்கு விழிப்பு வந்துவிட்டது.

சற்று நேரம், அப்படியே அசையாமல் படுத்திருந்து பார்த்தான். படுத்திருந்த இடமெல்லாம் விரிப்பு நனைவது போலத் தோன்றவும், எழுந்து உட்கார்ந்தான். இது தாண்டி, திவான் மெத்தையிலும் வியர்வை இறங் குமே!

உடம்பு வியர்க்க வியர்க்க, பாவம் என்று, அவனுக்கு வந்தனாவின் நினைவு வந்தது.

எத்தனையோ நாட்கள் நள்ளிரவுக்கு மேலும், அவள் லாப்டாப்பில் வேலை செய்து கொண்டிருக்கும் அரவம் தெரியும். இன்று ஆசையாகத் தூங்க விரும்பினால், இந்த மின்சாரம், இப்படிச் சதி செய்து விட்டதே என்று பரி தாபப்பட்டான்.

நந்தகுமார் இரக்கப்பட்டு நினைக்கும்போதே, அவன் செல்லுக்கு ஓர் எஸ்எம்எஸ் வந்தது.

பார்த்தால், வந்தனாதான். ரொம்ப வியர்த்தால், மின் சாரம் வரும்வரை, மொட்டை மாடிக்குப் போய் உட் கார்ந்திருக்கலாமா என்று கேட்டிருந்தாள்.

சம்மதம் தெரிவித்துவிட்டு, நந்தகுமார் அவசரமாக பர்முடாவிலிருந்த பேண்ட்டுக்கு மாறினான்.

கதவைத் தட்டிவிட்டு வந்தவள் சுடிதாரில் இருந்தாள்.

வந்தனாவை நைட்டி போன்ற உடைகளில் பார்த்ததே இல்லை என்பது, சட்டென நந்தகுமாருக்கு நினைவு வந்தது. குளித்துவிட்டு வரும்போது கூட, சுடிதான்!

ஓர் ஆணுடன் தனியே ஒரு வீட்டில் இருப்பது பற்றி, அவளும் நிறைய யோசித்திருப்பாள் என்று அவனுக்குத் தோன்றியது.

கூடவே, தானும் லுங்கி, ஷார்ட்ஸ் போன்றவற்றை குளியலறை உள்ளேயே மாற்றிவிட்டு வெளியே வருவது நினைவு வந்தது.

இருவரும் பொறுப்புணர்வில் ஒரே மாதிரி என்று எண்ணுகையில், பெருமை மாதிரி ஓர் உணர்வு உண் டாயிற்று.

மொட்டை மாடியில், அவர்களைப் போலவே வேறு சிலரும் எரிச்சல் பட்டபடி, அமர்ந்திருந்தனர்.

அவர்களை விட்டு ஒதுங்கி, ஓர் ஓரமாகப் போய் அமருகையில் ''ஒரு நாள் நிம்மதியாகத் தூங்க நினைத் தாய், முடியவில்லையே!'' என்று அவளுக்காக வருத்தப் பட்டான் நந்தகுமாரன்.

ஆனால், அவள் வேறு சொன்னாள் ''உங்களுக்குத் தான் ரொம்ப கஷ்டம். நாளைக்கு அலுவலகம் வேறு போக வேண்டும்'' என்று காரணம் சொன்னாள்.

உண்மைதான். இந்த படிப்புக்கு, அவளுக்கு கட்டாய நேரங்கள் கிடையாது. ஆனால், அவன் அப்படியல்ல. பத்து மணிக்கு அலுவலகம் சென்று, ஒழுங்காக வேலையையும் பார்த்தாக வேண்டும்!

தானே எண்ணிப் பாராததை, தனக்காக வந்தனா யோசித்துச் சொன்னது, அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது.

அடைத்து வந்த மேகம் சற்று விலகி, நிலவு தலையை நீட்ட, வெண்ணிலவின் தண்ணொளியில், வந்தனா மிகவும் அழகாக இருப்பதாக நந்தனுக்குத் தோன்றியது.

எவ்வளவு அழகாக இருக்கிறாள் என்று எண்ணும் போதே, இந்த ஒப்பந்தத் திருமணம் பற்றிப் பேசும்போது பசுபதி சொன்னது... எச்சரித்தது, அவனுக்கு நினைவு வந்தது.

என்ன பெரிய எச்சரிக்கை? அவன் ஒன்றும், அப்படி ஒரு பெண்ணை அருகிலிருந்து பார்த்ததுமே, வழிகிற வன் இல்லை, பள்ளிப் படிப்பின் போதே, இவள் அழகு, ஆனால் கொஞ்சம் திமிர் என்று, எல்லோருமே சேர்ந்து பேசுவதுதானே?

என்னமோ, இன்றுதான் வந்தனா அழகாக இருப்ப தாகக் கண்டு பிடித்தானா, என்ன?

ஒவ்வொருவராக மற்ற குடியிருப்புக்காரர்களும் கிட்டத் தட்ட எல்லோரும் மேலே, மொட்டை மாடிக்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

ஆயினும், நந்தகுமாரன், வந்தனா அருகே வந்து யாரும் அமரவில்லை. அப்படியே வந்த ஒரு சிலரும்

அவர்களை இனம் கண்டதும் ''புது ஜோடியில்லை? தொல்லை பண்ணக்கூடாது'' என்று விலகிப் போனார் கள்.

இரண்டு குடும்பங்கள் அப்படி ஒதுங்கிச் சென்றதும், வந்தனா யோசனையோடு நந்தகுமாரனைப் பார்த் தாள்.

''எனக்கு... வந்து, ஒரு பிரச்சினை எழக்கூடுமோ என்று, எனக்கு ஒரு சந்தேகம், நந்தகுமார்'' என்றாள்.

''என்ன பிரச்சினை? படிப்புக்கு ஏதும் பணம் கட்ட வேண்டுமா? இப்போது ஓர் ஊதிய உயர்வு கிடைத் திருப்பதால், பணம் பற்றிக் கவலைப்பட வேண்டாம்'' என்றான் அவன்.

''ஊகூம் அதல்ல. பணம் இப்போது தேவையு மில்லை. இது, மனோகரி இங்கே வந்து போவது பற்றி, அவளுடைய பெற்றோர் ஏதேனும் பிரச்சினை கிளப்பு வார்களோ என்று எனக்கு ஒரு யோசனை?'' என்றாள் வந்தனா.

''ஏன்? ஏன் அப்படி நினைக்கிறாய்?''

அவன் புரியாமல் வினவ, அவள் பதில் தந்தாள். ''கிட்டத்தட்ட பேசி முடிவாகிறபோது, அவளை மணக்க மறுப்பதாகக் காட்ட என்னை... அதாவது, வேறு ஒரு மணம் செய்தவர் நீங்கள். முகத்திலேயே ஓங்கி அறைந்த மாதிரிதானே, அவர்களுக்கு இருந்திருக்கும்? உங்கள் வீட்டுக்கு அவள் வரப் போக இருப்பது என்றால்? இது வரை, இது உங்கள் வீடு என்று அவளுடைய பெற் றோருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், அவள்

அடிக்கடி இங்கே வந்தால், என்ன, ஏது, யார் வீடு என்று பார்ப்பார்கள்தானே?'' என்று கேட்டாள்.

''ஓகோ... இதை யோசிக்கவே இல்லையே! அவர்கள் இருவரும் சேர்ந்து பேசி, துணிந்து ஒரு திடமான முடிவெடுக்கட்டும் என்று நினைத்தேன். ஆனால், அவளுடைய பெற்றோர் மனதில்... அவர்களுக்குக் குழப்பம், கோபம் இருப்பது இயற்கையே. மனோகரி வருவது நம் வீட்டுக்கு என்று, இதுவரை அங்கே தெரியாது என்றுதான் எனக்கும் தோன்றுகிறது. ஆனால், எப்போதும் தெரியாமலே போய் விடாதே! இதை எப்படிச் சமாளிப்பது, வந்தனா?'' என்று அவளிடமே ஆலோசனை கேட்டான் நந்தகுமாரன்.

''இதற்கு நான் ஒரு கதை உருவாக்கி வைத்திருக்கிறேன், நந்தகுமார். ஒத்து வருமா என்று பாருங்கள். ஒரு காலத்தில் ஒரு பள்ளியில் சேர்ந்து படித்தோம்தானே? நானும், மனோகரியும் ஒரே வகுப்பு வேறு! உங்கள் திருமணப் பேச்சு அவளோடு என்பது எனக்குத் தெரியாதது போல, சமையல் தெரியாது. கொஞ்சம் சாதாரண சமையல் வகை கற்றுத்தர முடியுமா அவளுக்கே நான் போன் செய்து கேட்பது போலவும், அவள் இளகிப் போய் அவளுடைய அம்மாவிடம் கேட்டு, அவர்கள் அனுமதித்தால் வருவது போல ஒரு குட்டி நாடகம் போட்டு விட்டால்?'' என்று வழி கண்டு பிடித்த உற்சாகத்தோடு கேட்டாள் வந்தனா.

''நல்ல ஐடியாதான். ஆனால், எங்கே, யார் வீட்டுக்கு என்று அவள் அம்மா விவரம் கேட்கும்போது, குட்டு வெளிப்பட்டு விடுமே! அதன் பிறகு அவளை

வர விடுவார்களா?'' என்று ஓர் ஐயத்தை எழுப்பினான் நந்தன்.

''ம்ம்ம்...'' என்று யோசித்துவிட்டு, ''சொல்லாமல வந்து, அவர்கள் கண்டு பிடிப்பதை விட, சொல்லிவிட்டு வருவதில் ஒரு நேர்மை தெரியும். அதனால், வர விடு வார்கள் என்றுதான் நினைக்கிறேன், நந்தகுமார், அதற்குத் தோதாக, உங்கள் தந்தை வேறு, ஒரு சந்தேகத்தைக் கிளப்பி விட்டிருக்கிறார் அல்லவா? அது பற்றி, மனோகரி மூலம் வீட்டுக்குள்ளேயே, நேரடியாக வேவு பார்க்கலாமே! சுந்தர் சொன்னதை வைத்துப் பார்த்தால், உங்களை மருமகனாக்கிக் கொள்ளும் ஆசையை, அவர்கள் அடி யோடு விட்ட மாதிரித் தெரியவில்லை. ஆனாலும்...'' என்று அவனை ஆராய்வது போலப் பார்த்தாள் வந்தனா.

''என்ன விஷயம்?''

''ஒ... ஒன்றுமில்லை.''

''ம், சொல்லு'' என்று அவன் ஊக்கவும், ''வேறு ஒருத்தியைப் பதிவுத் திருமணமே செய்திருக்கிறீர்கள். ஆனாலும், மருமகனாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறார் களே! எப்படி என்று யோ... யோசித்தேன்'' என்று அவ னையே பார்த்தபடி, அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, பளிச்சென்று ஒளி விளக்குகள் எரியத் தொடங்கின.

சட்டென வந்தனா முகத்தைத் திருப்பிக் கொள்ள, அவளது ஒரு புறக் கன்னம் மட்டுமே, அவனது பார்வை யில் பட்டது, அந்தக் கன்னத்தில் ஏறியிருந்த சிவப்பு நந்தகுமாரனுக்கு ஆச்சரியத்தை அளித்தது!



# 7

வந்தனாவின் ஊகம் சரியே போல, இப்போது வீட்டினர் அனுமதியுடனேயே, மனோகரி அந்த வீட்டுக்கு வந்து போகலானாள்.

கூடவே, வந்தனா எப்படிப்பட்டவள், கணவன் மனைவி எப்படிப் பழகுகிறார்கள் என்றெல்லாம், ரொம்பவும் தூண்டித் துருவாமல், சும்மாப் பேச்சு வாக்கில் போலக் கேட்டதாகவும் தெரிவித்தாள்.

இது வந்தனாவின் சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாகவே இருக்கவே, எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''நீ என்ன பதில் சொன்னாய்?'' என்று வந்தனா கவலையுடன் கேட்டாள்.

என்ன சொன்னாலும் பிரச்சினைதானே? காதல் ஜோடி என்று சொன்னால், பிற்பாடு வந்தனாவுக்குக் கஷ்டம். அப்படிக் கொஞ்சமும் இல்லை என்று கூறினால் இந்த நாடகத்தின் அடிப்படையே அடிபட்டுப் போகும்.

இது மனோகரிக்கும் தெரிந்ததுதான்.

எனவே ''அந்த அண்ணன் வீட்டில் இருக்கும்போது, நான் அதிகம் போனதில்லையம்மா. பள்ளிப் படிப்பின் போதே, வந்தனா என் தோழி. கல்லூரி முடித்து, அவள்

எம்பிஏ போகவும், தொடர்பே விட்டுப் போயிற்று. இடையில் அவள் அப்பா இறந்து போய், அவள் படிப்பை அவளுடைய அண்ணன்கள் நிறுத்தி அவள் வேலைக்குப் போய்க் கஷ்டப்பட்டது பொறுக்காமல், திருமணம் செய்து வீட்டுக்குக் கூட்டிப்போக நினைத்தால், இந்த அண்ணனுடைய அப்பா வீட்டை விட்டு வெளியே போகச் சொல்லிவிட்டாராம். இரண்டு பேருக்கும் ரோஷம் வந்து விட்டதாம். இந்த எம்பிஏ முடித்தால் வந்தனாவுக்கு நிறைய சம்பளம் வருமாமே! ஐடி மாதிரி! நந்தகுமார் அண்ணனும் நன்றாகத்தான் சம்பாதிக்கிறார். இந்த ஒரு வருஷம், வந்தனா படித்து முடித்து விட்டால் இரண்டு பேர் வருமானத்தில் ஓகோ என்று வாழலாமே! அதற்காக அந்த அண்ணன், மனைவியைப் படிக்க வைக்க, வந்தனாவும் விழுந்து விழுந்து படிக்கிறாள். சீக்கிரமே, லட்சக்கணக்கில் சம்பாதித்து, பெரிய நிலைக்கு வந்து, அமோகமாக வாழப் போவதாக, வந்தனா சொன்னாள். இந்தப் பக்கம்தான் குடி வந்திருக்கிறார்கள். ஒரு நாள் வழியில் பார்த்தபோது எல்லாம் தெரிவித்தாள் என்று பெரிதாகக் கதை விட்டு விட்டேன்'' என்றாள் மனோகரி.

''ரொம்பப் பிரமாதமாய் சமாளித்திருக்கிறாயே!'' என்று பாராட்டினான் நந்தகுமார்.

''இதை நானும் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். ஏடாகூடமாய் ஆன்டியைச் சந்திக்க நேர்ந்தால், இதையே நானும் சொல்ல வேண்டுமே!'' என்றாள் வந்தனா.

''நந்தாவுக்கு, எத்தனை அண்ணன் போட்டிருக்கிறாள், பாருங்கப்பா'' என்று பெருமைப்பட்டான் சுந்தர்.

''அது மட்டுமா? ஐடியில் துரை நிறைய சம்பாதிப்ப தற்கு, மறைமுகமாக ஒரு தங்கக் கிரீடத்தையும், தங்கச்சி வைத்துவிட்டாளே! மச்சி கால் தரையிலிருந்து அரை மீட்டர் உயரத்தில் அல்லவா நிற்கிறது!'' என்று நந்தகுமார் கிண்டல் செய்ய, ''அட ஆமாம்பா, நாமெல்லாம் மச் சானை அண்ணாந்து அல்லவா, பார்க்க வேண்டியிருக் கிறது!'' என்று பசுபதியும் சேர்ந்து நகைத்தான்.

''ஏய், ஏய், சும்மா கலாய்க்காதீர்கள்ப்பா! நீ தங்கச்சி என்கிறாய், மனோ அண்ணன் என்கிறாள். ஒரு நல்ல உறவைக் கெடுக்கப் பார்க்கிறார்களே என்றால்... உன் அம்மா சொன்னதையும் சேர்த்துச் சொல்லிவிடு, மனோ. அப்போதுதான் மச்சான்களுக்கு மனதில் உறைக்கும்!'' என்றான் சுந்தர், சிறு கோபமும் வருத்தமுமாக.

''ஏனம்மா, ஏதாவது பூதமா?'' என்று மற்ற இருவரும் அவள் முகத்தைப் பார்க்க, ''ஆமாம் அண்ணா. நந்த குமாரன் என்ன, உன் கூடப் பிறந்தவரா, அண்ணன், அண்ணன் என்கிறாயே! இனி அப்படிக் குறிப்பிடாதே, என்றார்கள்'' என்றாள் அவள் சோகமாக.

''அதற்கு ஏனம்மா வருத்தம்? அவர்கள் அப்படித்தான் சொல்லுவார்கள். நாம் எல்லோரும் இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்தால், போயிற்று. தைரியமாக இரு. நீயும் சுந்தரும்தான் ஜோடி சேரப் போகிறீர்கள். யாராலும் அதைத் தடுக்க முடியாது!'' என்று உறுதி சொன்னான் நந்தகுமாரன்.

''கடவுள் சத்யம்ப்பா!'' என்று ஒத்து ஊதினான் பசுபதி.

தீவிரமான படிப்பினூடே, இதுபோலக் கலகலப்பு வந்தனாவுக்கும் தேவைப்பட்டது.

கூடவே "சபாபதி சார், வெளியூர் சென்றிருந்த இரண்டு நாட்களுக்கும் சேர்த்து, நிறைய வேலை கொடுத் திருக்கிறார். இப்போது உட்கார்ந்தால்கூட, இரவு பன் னிரண்டு மணிக்கு முன், முடிப்பது கடினம்" என்று அவள் அதிகப்படி வேலையும் செய்ய வேண்டியிருந்தது.

ஆனால், அது போன்ற தருணங்களில் அவள் ஒதுங்கிக் கொள்வதை இப்போது யாரும் தவறாகக் கருதுவதே கிடையாது.

கல்வி ஆண்டின் கடைசிப் பகுதி நெருங்கவும், ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்குமே, மாணவ மணிகள் தங்கள் பாடத்தை மட்டுமே படிக்க வேண்டும் என்று விருப்பப் பட்டவர்களைப் போல, இதைச் செய், அதை உடனே முடித்துக் கொடு என்று மாணவர்களை விரட்டி, விரட்டி வேலை வாங்கினர். லைப்ரரி, நெட் பிரௌசிங் என்று வந்தனா அலைய வேண்டியிருந்தது.

ஆண்டு முதலில் பெரிய பணம் கட்டி, வீட்டுச் செல வோடு, நெட்டுக்காக, போக்குவரத்துக்காக என்று நந்த குமாரனிடம் பணம் கேட்டுக் கொண்டே இருக்க, அவளுக்கு உள்ளூர மனம் கூசியது.

அதையே அவனிடம் "என்னால் உங்களுக்கு நிறைய செலவு. மொத்தமாகக் கட்டியது ஒரு பெரிய தொகை என்றால், அதற்கு வட்டி கட்டுவது போல, மாதாமாதம் இப்படி வேறு செலவு செய்ய வேண்டியிருக்கிறது" என்றாள் சங்கடத்துடன்.

ஆனால், இந்தச் செலவுகளை நந்தகுமார் பார்த்த விதம் வேறாக இருந்தது. "வட்டியா? என்ன பேச்சு இது,

வந்தனா? ஒரு திருமணம் என்றால், திட்டமிட்டதை விட முப்பது சதவீதம் வரை அதிகச் செலவாகிவிடும் என்று என் அம்மா சொல்வார்கள். எல்லாமே, சுந்தர் மனோகரி காதல் திருமணத்துக்கான மொத்தச் செலவாக நினை'' என்றான் அவன்.

எவ்வளவு ஆழமான நட்பு என்று உள்ளூர வியப்பாக இருந்தது அவளுக்கு.

ஆனால், சம்பாதிக்கும்போதே, இதையெல்லாம் எப்படியாவது திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று மனதிற்குள் உறுதி செய்து கொண்டாள் வந்தனா.

ஒப்பந்தத்தில் அவன் பங்கு என்று, முன்போல விட்டேற்றியாக நினைக்க, இப்போது அவனால் முடியவில்லை.

சொல்லப் போனால், அவளது நிம்மதி, சுகம் எதுவும் ஒப்பந்தத்தில் சேர்த்தி கிடையாதே! எவ்வளவோ பார்க்கிறார்களே! அவளையும் எல்லோரும் நட்பு மனதோடு தானே நடத்துகிறார்கள்?

இடையே விருந்து உண்டு கொண்டாடும் அளவுக்கு, அவர்களிடையே இரண்டு விஷயங்கள் நடந்தன.

சுந்தருடைய தங்கைக்கு காம்பஸ் செலக்ஷனில் நல்ல வேலையாக கிடைத்ததாக, அவன் ஏதேதோ வாங்கி வந்து, எல்லோருக்கும் விருந்து கொடுத்தான்.

மனோகரின் பூரிப்பு வெளிப்படையாகவே தெரிந்தது.

சுந்தருடைய தங்கைக்கு ஓரளவு நல்ல வேலையே எனும்போது, அவனது பொறுப்பு கிட்டத்தட்ட தீர்ந்தது என்கிற நிலைதானே? பிள்ளைகளின் படிப்புக்காக என்று

வீட்டின் மீது வாங்கிய கடன் இன்னமும் இருந்தபோதும், சுந்தர் முயற்சி செய்யும் பெரிய வெளிநாட்டு வேலையும் கிடைத்து விட்டால், மீதிக் கடனை அடைப்பது சுமையே ஆகாது. எனவே, தைரியமாக வந்து, பெண் கேட்க முடியும் அல்லவா?

அதைச் சொல்லிச் சொல்லி அவர்கள் இருவரையும் மற்றவர்கள் வெகுவாகக் கேலி செய்தார்கள்.

அடுத்த கொண்டாட்டமாக, சூப்பர் மார்க்கெட் மாதிரி கடையை அமைக்க, தன் தந்தை சம்மதித்து விட்டதாக, பசுபதி ஒரு விருந்து வைத்தான்.

அவனும் உணவை வாங்கி வந்துவிட, நந்தகுமார் வந்தனா வீட்டில் வைத்துதான் எல்லோருமாகச் சாப்பிட்டார்கள்.

சேர்ந்து வெளியே போய், ஏதாவது பெரிய ஹோட்டலில் சாப்பிட, அவர்களுக்கு ஆசைதான். ஆனால், அவர்களது முக்கிய நோக்கமான சுந்தர், மனோகரி விஷயம் சாதகமாக முடிவாகும்வரை, எச்சரிக்கை தேவை என்று அனைவருமே கருதியதால், வீட்டிலேயே, சந்தோஷமாகச் சாப்பிட்டனர்.

சாப்பிடும்போதே, இதை எப்படி சாதித்தான் என்பது பற்றி, சுந்தர் கேட்டான்.

''இந்த கடை வருமானத்தை வைத்துதான், உங்களை வளர்த்தேன். உன் இரண்டு தங்கைகளுக்குத் திருமணம் செய்து வைத்தேன் என்று சொல்லி, அதே பிடிவாதத்தில் உன் தந்தை இருப்பதாகச் சொல்வாயே! எப்படிடா சாதித்தாய்?'' என்று விசாரித்தான்.

நடந்ததைப் பசுபதி விவரித்தான்.

வீட்டில் அவனது திருமணப் பேச்சு எழுந்திருக்கிறது. பசுபதி எதிர்பார்த்துக் கொண்டே இருந்த தருணமும்

அதுவேதான்! கிடைத்த வாய்ப்பை, அப்படியே இறுகப் பிடித்துக் கொண்டான்.

''இந்த சாதாரண கடையை வைத்துக் கொண்டு திருமணம் செய்ய முடியாது. சற்றுப் பெரிய அளவில், எல்லா மளிகைச் சாமான்களையும் பாக்கெட் போட்டு, வரிசையாக அடுக்கி, பந்தாவாக இருந்தால்தானே, வருகிற மனைவி என்னை மதிப்பாள்? அதுவரை திருமணம் வேண்டாம் என்று பிடிவாதமாகக் கூறவும், தந்தை பணிந்து விட்டார்'' என்றான் அவன், சந்தோஷமாக.

''ஆக, ஒரு வழியாக 'பந்தா பரமசிவம்' ஆகி விட்டாய் என்று சொல்லு!'' என்று நந்தன் சிரித்தான்.

எல்லோருமே சிரிப்பில் இணைய, கூடச் சேர்ந்து நகைத்துவிட்டு, ''பந்தா என்பதற்கு இல்லை மச்சி, பழைய காலம் மாதிரி கொடுக்கிற சம்பளத்துக்கு உண்மையாக உழைப்பதெல்லாம் இப்போது, பெரும்பாலும் கிடையாது. எடை போட்டுப் பொருட்களை கொடுக்கும் போதே, முதலில் நேரம் வீணாகும். வாடிக்கையாளர்களும், கொசுறாக அதிகம் போடச் சொல்வார்கள். வேலையாட்களும், வேண்டியவர்களுக்கு அதிகம் கொடுத்து விடுவார்கள், முந்திரி, பாதாம் பருப்புகள் அவ்வப்போது குறைந்து போகும். பாக்கெட் பண்ணி, விலை ஒட்டி வைத்து விட்டால், இந்த மாதிரி வீணாவது, அடியோடு நின்று போகுமே! படித்த பெண்ணை மணந்து கல்லாவிலும் உட்கார வைத்தால்... ஆனால், இதற்கு என் அப்பா சம்மதிக்க, நாளாகும்'' என்றான் பசுபதி.

''ஆக, பந்தா பசுபதி இல்லை, பிசினஸ் பசுபதி என்கிறாய். வாழ்க மகனே!'' என்று நந்தகுமாரன் வாழ்த்த, அங்கே மீண்டும் ஒரு சிரிப்பலை பரவியது.

கூடவே ''கடையை மாற்றுகிற வேலை தொடங்கியதும் சொல்லு மச்சான். சனி, ஞாயிறுகளில், நானும் உதவிக்கு வருகிறேன்'' என்றான் அவன்.

ஏதோ, இன்னமும் தெளிவாகப் புரிந்தது போல வந்தனா உணர்ந்தாள்.

நண்பர்களுக்காக, நந்தா உயிரையும் கொடுப்பான் போல! சொல்லப் போனால், அவர்களது திருமணமே அப்படி நடந்ததுதானே என்று எண்ணினாள் அவள்.

தொழில் முறை உடன்பாடு என்றானே! அதன்பின்னே, எவ்வளவு அன்பு மறைந்திருக்கிறது!

எல்லோரும் வந்து சென்ற ஓரிரு நாட்களில் காலை காபி அருந்திவாறு பேசிக் கொண்டிருக்கையில் திடுமென ''உன் கல்லூரியிலும் காம்பஸ் செலக்ஷன் உண்டு தானே, வந்தனா? நீ உன் 'ரெசுயூம்' தயார் பண்ணி வைத்து விட்டாயா? செலக்ஷன் எப்போது நடக்குமாம்?'' என்று நந்தகுமார் விசாரித்தான்.

''ம் ம். நடந்து கொண்டுதான் இருக்கிறது. என்னைக் கூட, இரண்டு நிறுவனங்களில் கூப்பிட்டார்கள். ஆனால் சபாபதி சார்தான், 'நீ கெட்டிக்காரி' உன் திறமைக்கு இன்னும் பெரிய பெரிய நிறுவனங்களில், நல்ல வேலை கிடைக்கும். அவசரப்பட்டுச் சாதாரண வேலையில் சேர வேண்டாம்' என்று தடுத்து விட்டார். 'பறப்பதற்கு ஆசைப் பட்டு, இருப்பதை விட்ட' கதைபோல ஆகிவிடக் கூடாதே என்று, எனக்கு அவ்வப்போது மனதில் கலக்க மாக இருக்கிறது'' என்று தன் கவலையை அவனிடம் வந்தனா தெரிவித்தாள்.

''அவசியமற்ற கலக்கம்'' என்றான் நந்தன் நம்பிக்கை யூட்டும் குரலில், ''உன்னை விட உன் தகுதியும்,

தகுதியின் மதிப்பும் உன் பேராசிரியருக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவோ வேலை கொடுத்துச் செய்ய வைத்து, அவர் அதை அறிந்து வைத்திருக்கிறார்! எனவே, அவர் சொன்னால் சரியாக இருக்கும். கவலையை விடு! ஆனால் பாரேன், நிறைய வேலை கொடுக்கிறார் என்று சலித்துக் கொள்வாயே! உன் வளர்ச்சிக்காகத்தானே செய் திருக்கிறார்'' என்று அவன் வியந்து பாராட்ட, அவளும் தலையாட்டினாள்.

''எப்படியோ படிப்பு முடிந்ததுமே நல்ல வேலை கிடைத்து விட்டால், எனக்கு நிம்மதியாக இருக்கும்'' என்றவளை ஒரு மாதிரிப் பார்த்தான், நந்தகுமாரன்.

''அப்படியென்றால், நீ இப்போது நிம்மதியில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறாய் என்று அர்த்தமா?'' என்று அவனது குரல் கடுமையாகக் கேட்கவும், காலி கப்பை கீழே வைத்துக் கொண்டிருந்த வந்தனா, திடுக்கிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் முகத்தில் சற்று முன் இருந்த புன்னகை மறைந் திருந்தது.

என்...ன என்று அவசரமாக யோசித்து ''ஐயோ அப்படி யில்லை. நந்தகுமார், எனக்காக நீங்கள் எவ்வளவு பணம் செலவு செய்திருக்கிறீர்கள்! இன்னமும் செய்து கொண்டே இருக்கிறீர்கள்? ஒரு நல்ல வேலை கிடைத்தால்தானே, அதையெல்லாம் நான் திருப்பித் தர முடியும்? அதைத் தான் சொன்னேன். மற்றபடி, என் நிம்மதிக்கு என்ன குறை இருக்க முடியும்? அதுவும், நான் முன்பு இருந்த நிலைமைக்கு!'' என்று தன் பேச்சுக்கு விளக்கம் கூறி னாள், அவள்.

ஆனால் அவள் சும்மாவே இருந்திருக்கலாம்.

இன்னமும் முகம் கடுக்க ''அந்தப் பணத்தை நான் திருப்பிக் கேட்டேனா? அதென்ன, கடனாகவா தந்தேன். திருப்பித் தருவதற்கு? ஆனால்... முன்புகூட, ஒரு தரம் வட்டி, அது இது என்றாயில்லையா? எங்கள் நட்பு வட்டத்தில் நீயும் ஒருத்தியாகச் சேர்ந்து விட்டாய் என்று எண்ணினேன்! ஆனால் நீ வேறு மாதிரி, வேற்றுமை யாகவேதான், எப்போதுமே நினைத்து வந்திருக்கிறாய். அப்படிப் பார்த்தாலும், நம் ஒப்பந்தத்தின் என் பங்கு இந்தப் பணம் என்று, இதே இடத்தில் இருந்து நீயே சொன்னது மறந்து விட்டதா?'' என்று சினம் காட்டினான் அவன்.

இந்தக் கோபம் அவள் கண்டது இல்லை! கூடவே, அவனது சீற்றம் தன்னை இவ்வளவு பாதிக்கும் என்று அவள் எண்ணியது இல்லை.

அவரவர் கப்பை, அவரவரே கழுவி வைப்பது பழக் கம்தான். அவசரமாகக் கிளம்பிச் செல்ல வேண்டியவர் பயன்படுத்தியதை, அடுத்தவரே சேர்த்து சுத்தம் செய் வதும், நடப்பதுதான்.

ஆனால், அவனது கப்பை மட்டும் எடுத்துக் கொண்டு நந்தகுமாரன் எழவும், தாங்க மாட்டாமல், ''நந்தன் ப்ளீஸ்...'' என்று சட்டென அவனது கையைப் பற்றி நிறுத்தினாள் வந்தனா.

அவன் சுளித்த முகத்துடன் பேசாமல் நிற்கவும், ஒரு கணம் யோசித்துவிட்டு, அவள் மடமடவென்று பேச லானாள். ''நந்தகுமார், உங்களது முந்தைய வாழ்வு பற்றி, மனோகரி நிறையச் சொல்லியிருக்கிறாள். தேவை என்று

எதுவுமே இல்லாத நிலை என்பாள். பல தலைமுறை களாக அப்படியாமே? செல்வத்தோடு, அன்பான பெற் றோரும், நீங்கள் சொன்னால் நடக்குமாமே! அப்படி யானால், உங்கள் வீட்டில் உங்கள் அறை எப்படி இருக் கும்? இன்றைக்குப் பாருங்கள்! இந்த திவானில் சுருட்டி மடக்கிக் கொண்டு, அப்படியும் திவானிலிருந்து வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் கால்களை வைப்பதற்கு, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு, தூங்கு கிறீர்கள். அதேபோல, உணவு! அன்றைக்கு வந்த சப் பாத்திக்கு வந்த கூட்டைச் சாப்பிட முடியாமல், ஊறு காயைத் தொட்டுக் கொண்டு விழுங்கினீர்கள். வசதி யற்ற படுக்கை, சாப்பிடப் பிடிக்காத உணவு பற்றி எனக்கும் தெரியும். இதை விடவும் மிக மோசமாகவே. ஆனால், அதை நீங்கள்தான் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தீர்கள்.

''இங்கேயும் பாருங்கள். உங்களுக்கு இல்லாத தனி அறை, எனக்கு. படிப்புக்குக் குந்தகம் வராமல் பார்ப்ப தோடு, அதற்கான எல்லாச் செலவும் செய்கிறீர்கள். இந்தப் படிப்பு முடிந்து வேலை கிடைத்தபின், எனக்கு இறங்கு முகமே கிடையாது.

''ஆனால் நீங்கள்? இதற்கு என்ன, எப்போது முடிவு என்று ஒன்றுமே தெரியவில்லையே! உங்கள் தந்தையோ, நீங்களோ அவரவர் நிலையில் இருந்து, விட்டுக் கொடுக் கிற மாதிரியாகக் கொஞ்சமும் இல்லை. எனக்காக நீங்கள் செலவு செய்த, இன்னும் செய்யும் பணமும், கொஞ்ச நஞ்சமில்லை. அதைத் திருப்பிக் கொடுத்தால், ஒரு வேளை இன்னும் கொஞ்சம் வசதியாக வாழ்வீர்களோ, என்று ஓர் ஆசை!

''எனக்கு இவ்வளவு செய்கிறவர், நன்றாக இருக்க வேண்டும் என்று எனக்கு நினைக்கத் தோன்றாதா? தோன்றினால் தப்பா நானும் மனிதப் பிறவிதானே?'' என்று கேட்டு பேச்சை முடித்தாள், அவள்.

சற்று நேரம் அங்கே மௌனம் நிலவியது.

இன்னும் என்ன சொல்லி இவனைச் சமாதானப்படுத்துவது என்று புரியாமல், கண் கலங்க அவன் முகத்தைப் பார்த்தாள் வந்தனா.

அவன் பார்வை தாழ்ந்து, அவனைப் பற்றியிருந்த அவளது கரத்தின் மீது இருந்தது.

அவனைப் பிடித்து நிறுத்திய கை, இன்னமும் அங்கேயே இருக்கிறது!

அவசரமாகத் தன் பிடியை அகற்றிக் கொள்ள வந்தனா எண்ணியபோது, மறு கரத்தால் அவளது அந்தக் கையையே பற்றி ''உட்கார்'' என்று, அவளை உட்கார வைத்தான், நந்தகுமார்.

எதிர்ப்புறமாக நாற்காலியில் அமர்ந்து ''கவனி வந்தனா'' என்று, அவன் பேசத் தொடங்கினான். ''இப்போது நீ சொன்ன வளம், வசதி எல்லாம் உண்மையே. ஆனால் அது மட்டும்தான் எனக்கு பழக்கம் என்று கிடையாது. படிக்கும்போது, என்சிசியில் ட்ரெக்கிங் போவதில் என் பெயர் கட்டாயம் இருக்கும். அது ஒன்றும் சொகுசான விளையாட்டு வேலையல்ல. என்சிசி பயிற்சியும் அப்படித்தான். விளையாட்டுப் போட்டிகளுக்காகச் செல்லும் போது, இதைவிட மோசமான சூழ்நிலைகளில் பல நாட்களைக் கழித்திருக்கிறேன். கிரிக்கெட், டென்னிஸ் மாதிரி, மற்ற விளையாட்டுகளுக்கு யாரும் செலவு

செய்ய மாட்டார்கள். மற்றவர்களை விட்டுவிட்டு, நான் மட்டும், என் செலவில் தனியாக தங்கவும் முடியாது. ஆனால், நான் அவைகளைக் கஷ்டமாகக் கருதியது இல்லை. அந்த விளையாட்டோடு சேர்ந்த வேறு வித மான அனுபவமாகவே எடுத்துக் கொள்வேன். இப்போதும் அப்படித்தான். என்றேனும், நான் தூங்காமல் கிடந்து பார்த்திருக்கிறாயா? காய்க் கூட்டு பிடிக்கவில்லை என் றால், ஊறுகாய் ருசியும் எனக்குச் சம்மதமே! அதுவும் இன்னொரு சுவைதானே? பட்டினியா கிடந்தேன்? மனது ஒப்பி ஒன்றைச் செய்யும்போது, அது கஷ்டமாக எப்படி இருக்கும்?

''அதனால், இது போன்ற அசட்டுப் பிசட்டு எண்ணங் களை விட்டு விட்டு, நீ உன் படிப்பில் கவனமாக இரு. உன்னளவில், இப்போது அது போதும்'' என்று இயல் பான குரலில் முடித்தான் நந்தகுமாரன்.

அவனுடைய பெற்றோரின் அன்பு பற்றி சொன்னாளே, அதற்கு, நந்தன் எதுவும் கூறவில்லை. ஒருவேளை பெற்றோர் ஏக்கத்தில் அவர்களைப் பற்றிப் பேசவே, வாய் வரவில்லையோ?

இருக்கத்தானே செய்யும்? எப்படியும் அது ரொம்பப் பாவம்தான்.

ஒன்றும் செய்ய முடியாத, விதி பறித்த அப்பாவுக் காகவே, அவள் எவ்வளவு ஏங்கினாள்!

அதே ஊரில், பெற்றவர்களை வைத்துக் கொண்டு, அவர்களோடு பேசக்கூட முடியாமல் இருப்பது என்றால், ரொம்பவே பாவம்தான்!

தொடர்ந்த சில தினங்கள், நல்லபடியாக கழிந்தன. ஓரளவு சந்தோஷமாக என்று கூடக் கூறலாம்.

அன்றைய உரசல், இருவரின் மனங்களிலும் இருந்த பல தடைகளை அடித்துச் சென்று விட்டதைப் போல, நந்தகுமாரும், வந்தனாவும் மிகவும் சகஜமாகப் பேசிப் பழகலாயினர்.

வேலை இடத்தில் நந்தகுமாரனுக்குப் பாராட்டுகள் பெருகின. உழைப்புக்கும் திறமைக்குமான மதிப்பெண்கள் பெருகின.

அந்த நிறுவனத்தில், ஊதிய உயர்வு, பதவி உயர்வுகள் இந்த மதிப்பெண்களின் அடிப்படையிலேயே கிடைக்கும். அந்த வகையில் நந்தகுமாரனுக்கு ஏற்கனவே ஓர் ஊதிய உயர்வு கிடைத்திருந்தது. இப்போது, பதவி உயர்வும் பக்கத்தில் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

எனவே, அடுத்த விருந்து அவன்தான் தர வேண்டும் என்று, நண்பர்கள் நந்தகுமாரனை விரட்டிக் கொண்டிருந்தனர்.

மொத்தத்தில் வாழ்க்கை இலகுவாக, சற்று சுகமாகவே செல்லலாயிற்று.

இந்த நிலையில், அதைக் கெடுக்கும் விதமாக இன்னொன்று நேர்ந்தது.



# 8

அன்று பொதுவாகவே வானிலை இறுக்கமாக இருந்தது. கல்லூரியிலிருந்து வாசகசாலை சென்று மேலும் பல

குறிப்புகளைச் சேகரித்துக் கொண்டு திரும்பியபோது, வேர்த்து வடிந்த வந்தனா குளிக்கப் போனாள்.

செல் 'ரீசார்ஜ்' செய்ய வெளியே செல்ல நினைத்து, அவளிடம் உரக்கச் சொல்லிவிட்டுக் கதவைத் திறந்த நந்தகுமாருக்கு அப்படியே கொஞ்சம் பழங்கள் வாங்கி வரலாமே என்று தோன்றியது.

ஆனால், பைக்குள் இருந்த பணம், பழம் வாங்கப் போதாது.

வாயிலுக்கு எதிரே வெளியிலிருந்து பார்க்கக் கூடிய விதமாக இருந்தது, ஹாலில் இருந்த அலமாரி, அதிலிருந்து பணத்தை எடுப்பது வெளியே தெரிய வேண்டாம் என்று, கதவை மூடிவிட்டு மறுபடியும் உள்ளே வந்து, பணத்தை எடுத்தான், நந்தகுமாரன்.

பணத்தை எடுத்துக் கொண்டு, அலமாரிக் கதவை மூடிவிட்டுத் திரும்பினால், அவன் சற்றும் எதிர்பாராத விதமாக குளியலறையிலிருந்து, வந்தனா ஹாலுக்குள் வந்து நின்றாள். ஆனால், எப்போதும் குளித்துவிட்டு வருவது போல அல்ல!

வாயில் கதவு திறந்து மூடும் சத்தம் கேட்டு, அவன் வெளியே போய்விட்டான் என்று வந்தனா நினைத்திருப்பாள் போலும்.

எப்போதுமே, குளியலறை ஈரத்தில் சுடிதார் பாட்டத்தைச் சிரமம் என்றாலும் அணிந்து கொண்டே வெளிவருவது, அவளது வழக்கம். இன்று அவன்தான் வெளியே போய்விட்டானே, அறையில் உலர்ந்த தரையில் நின்று மாட்டிக் கொள்ளலாம் என்று டாப்பை மட்டும் அணிந்திருந்தவள், பாட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு, குளியலறையிலிருந்து வந்துவிட்டாள்.

எதிர்பாராமல் ஒருவரை ஒருவர் பார்த்த இருவருமே அதிர்ந்து போயினர்.

ஒரு வினாடிதான். அவள் மடமடவென்று அறைக்குப் போய்விட, அவனும் அதே வேகத்துடன் வீட்டிலிருந்து வெளியே போய்விட்டான்.

ஆனால், அவள் என்ன நினைப்பாள் என்று அவன் மனம் கலங்கிப் போயிற்று.

சுமார் எட்டு மாதங்களாக, அதே வீட்டில் இருந்தபோதும், இது போன்ற நிலைமை, அவர்களிடையே ஏற்பட்டதே இல்லை!

ஆனால் இன்று!

நடந்தது என்ன என்று, அவனுக்குப் புரிந்து போயிற்று! ஆனால், அவன் வேண்டுமென்று செய்தது இல்லை என்று, அவள் புரிந்து கொள்வாளா?

முதல் வேலையாக, அதைத் தெளிவுபடுத்திவிட வேண்டும். அல்லது, இனி இந்த வீட்டில் சேர்ந்து வசிப்பது இயலாதது ஆகிவிடும்.

உடனே போய், அவளிடம் நடந்ததைச் சொல்ல வேண்டும் என்று தவிப்புடன் திரும்பியவனுக்கு, வெறும் கையுடன் திரும்பிச் செல்வதும் தவறாகத் தோன்றியது 'ரீசார்ஜ்' பண்ணிவிட்டு, பழங்களையும் வாங்கிக் கொண்டு, அவன் வேகமாகத் திரும்பி வந்தால், வந்தனா ஹாலில்தான் அமர்ந்திருந்தாள்.

கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்த நந்தகுமார், அவளைப் பார்த்ததும், ''வந்து...'' என்று தொடங்கி, மடமடவென்று, நடந்ததைச் சொல்லி முடித்தான்.

கடைசியாக ''நான் வேண்டும் என்று கதவைச் சாத்திவிட்டு உள்ளே இருக்கவில்லை. வந்தனா, பணம் எடுப்பது வெளியே தெரிய வேண்டாம் என்றுதான், கதவைச் சாத்தினேன். இதை நம்ப வேண்டும்'' என்றான்.

''நிச்சயமாக!'' என்றாள் அவள், ''இத்தனை மாதங்கள் ஒரே வீட்டில் இருந்துவிட்டு, உங்களைப் பற்றி, இவ்வளவு தெரியாதா, நந்தகுமார்? அ... அதேபோல, நானும், இன்று ஈரம் படாமல் அணியலாம் என்றுதான்... நீ... நீங்களும் வேறுபாடாக எண்ணக்கூடாது'' என்றாள் குரல் இறங்கிவிட.

''அப்போதே புரிந்தது. இந்தச் சின்னக் குளியலறையில், நனைந்து போகாமல் பேண்ட் அணிய, நானும் திணறியிருக்கிறேன்'' என்றான் அவன்.

''அப்படியானால், இது பற்றிய விளக்கங்கள் இனித் தேவை இல்லை!'' என்றாள் வந்தனா முந்திக்கொண்டு.

''விளக்கமா? நினைக்க வேண்டாமே!'' என்று அவன் முடிக்க, இருவரும் சிரித்துக் கொண்டனர்.

ஒரு பிரச்சினை, நல்லபடியாகத் தீர்ந்ததில், இருவருக்குமே மிகவும் நிம்மதியாக இருந்தது.

ஆனால், நந்தகுமாரின் நிம்மதிதான் சீக்கிரமே வலுவிழந்து, அழிந்து போயிற்று.

காய்ந்த துணிகளை மடித்து வைத்துக் கொண்டிருந்த வந்தனாவுக்கு ஓர் எஸ்எம்எஸ் வந்தது.

செல்லில் வந்த செய்தியைப் பார்த்தவளுக்கு முகம் கடுக்கவும், என்னவென்று, நந்தகுமார் விசாரித்தான்.

''சொன்னேனே, காம்பஸ் செலக்ஷனில் வேலை கிடைத்து விட்டதாக, அவள்தான். வேலை கிடைத்து

விட்டதால், இனியும் படிப்புக்காகக் கஷ்டப்பட, அவளுக்குப் பிடிக்கவில்லை. நான் தேடி அலைந்து தயார் பண்ணினதை, அவளுக்கு அனுப்ப வேண்டுமாம். சபாபதி சார் கூட, இதைத்தான் சொன்னார். வேலைதான் கிடைத்து விட்டதே என்று, படிப்பில் அலட்சியம் வரும். இடம் கொடுக்கக்கூடாது என்றார். ஆனால், என்ன தைரியமாகக் கேட்கிறாள்!'' என்று எரிச்சலோடு கூறி விட்டு அசையாமல் உட்கார்ந்திருந்தாள் அவள்.

''இப்போது என்ன செய்யப் போகிறாய்?''

''என்ன செய்வது? அனுப்பித்தான் தொலைக்க வேண் டும். ஆனால் என் முழு உழைப்பையும் கொடுக்க மாட் டேன். கொஞ்சம் கொஞ்சம் நிறுத்தி வைத்துக் கொண்டு, மிச்சத்தை அனுப்புவேன்'' என்று லாப்டாப்பை எடுத்து வர எழுந்தாள்.

அதுவரை எல்லாம் சரியாகத்தான், வழக்கம் போலத் தான் இருந்தது.

அடர் சிவப்பு சுடிதார் டாப். அவனைத் தாண்டி, வந் தனா அறையை நோக்கிச் சென்றபோது, முன்பு போலவே பக்கவாட்டில் அந்தச் சுடி டாப் விலகி, வெளியே தெரிந்த கீழ் உடை சட்டென மறைந்து, பதிலாக அவளது வெற்றுத்தொடை, அவன் மனதில் வந்து, அப்படியே நின்றது.

அவளது முகத்துக்கும், மெல்லிய நீண்ட கரங்களுக்கும் ஏற்ற அழகான தொடை!

மென்பட்டால் செய்ததுபோல, பளபளப்பான தோற்றம், தொட்டால், வழுவழுவென்று இருக்குமோ?

முகம் வியர்க்கச் சட்டென எழுந்து விட்டான் நந்த குமாரன்.

என்ன பைத்தியக்காரத்தனமான எண்ணங்கள்! இது போலெல்லாம் நினைக்கக் கூடியவன், அவனில்லையே!

''என்ன நந்தகுமார் எழுந்து விட்டீர்கள்? மறுபடியும் வெளியே செல்லப் போகிறீர்களா?'' என்று லாப்டாப் புடன் வந்த வந்தனா கேட்டாள்.

நல்ல சாக்குதான்.

''ஆமாம், வந்தனா. இன்று அலுவல் முடியும்போது சமோசா வந்தது. அப்போது பசிக்கிற மாதிரி இருக்கவே, இரண்டு சாப்பிட்டேனா? வயிறு கொஞ்சம் டொம்மென்று இருக்கிறது. நடந்து விட்டு வந்தால் சரியாகிவிடும்'' என்று அவள் பக்கம் பாராமலே சென்று அவன் செருப்பை மாட்ட ''அதை ஏன் சாப்பிட்டீர்கள்? நான்தான் பெரும் பாலும், வீட்டிலேயே செய்கிறேனே'' என்றாள் அவள்.

''இன்று ரொம்பப் பசித்தது'' என்று முணுமுணுத்து விட்டு, வேகமாக வெளியே சென்றான் அவன்.

கால் போன போக்கில் நடந்த நந்தகுமாரனுக்கு, புயல், பூகம்பம், சூறாவளி எல்லாம் ஒன்றாக நிகழ்ந்தது. அதற் குள் தான் மாட்டிக் கொண்டிருப்பது போன்ற உணர்வு!

அதற்குள்ளும், மாடர்ன் ஆர்ட் போல, அங்கங்கே ஒவ் வொரு கோணங்களில் அவன் பார்த்த, அவளது தொடைப் பகுதியின் தோற்றமே!

தொட்டுப் பார்ப்பது பற்றி நினைத்ததுதான் அவனைப் பெரிதும் அதிர வைத்தது எனலாம்.

அதுவும் பசுபதி எச்சரித்தபோது, அதை அலட்சியப் படுத்தியவன்!

இப்போது கண்ணுக்குள் அதுவேதானே நிற்கிறது!

அப்படியென்ன, அவன் பெண்களின் தொடையைப் பார்த்ததே இல்லையா? விளையாட்டுப் போட்டிகளுக்குச் செல்லும்போது, பல போட்டிகளில் பெண்களின் உடையே, கிட்டத்தட்ட உள்ளாடை அளவுதானே? கண்ணில் படும்போது, சிறு சலனம்கூட, அவனுக்கு ஏற்பட்டதே இல்லையே!

இங்கேயும்கூட, எட்டு மாதங்களாக, எந்த மாறுதலும் ஏற்பட்டது இல்லை. அதாவது, மா...றுதல் என்றால், இந்த மாறுதல். மற்றபடி, அவளிடம் அன்பு, பாசம் கூடியிருப்பது உண்மையே.

அவளும் பழக்கத்தின் காரணமாக, அவளது பண்பு புரிந்து உண்டானது.

அவளும், ஒப்பந்த விதி என்று அதிலேயே நில்லாமல், பல விதங்களிலும், எல்லோருடனும் அனுசரித்துப் போவதால் ஏற்பட்ட மாற்றம்.

ஆனால் இது... இது வேறு!

பசுபதி சொன்ன ஒரே இடத்து ஆண் பெண்ணின் இயற்கைத் தத்துவமாக இருக்குமோ என்று தோன்றவும், நந்தகுமார் மிகவும் கலங்கிப் போனான்.

இந்த மாதிரி ஒரு மாறுதலை மனதில் வைத்துக் கொண்டு, வந்தனாவோடு எப்படி இயல்பாகப் பழகுவது? எப்போதேனும், தன்னை மீறி, அவனது மனதில் உள்ளது வெளிப்பட்டு விட்டால், அப்புறம் வந்தனா, அவனை நம்புவாளா?

போதும்டா சாமி என்று, இத்தோடு எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடவும் முடியாது. இந்த நாடகத்தைத் தொடங்கிய நோக்கம், இன்னமும் முற்றுப் பெறவில்லை!

அதுவும் கிட்டத்தட்ட முக்கால் கிணறு தாண்டிவிட்ட இந்த நிலையில், அது முன்னிலும் மோசமாக, மகாப் பாதகமாக முடியும்!

இருக்கும் ஒரே வழி, அவன் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு நாடகத்தைத் தொடர்வதுதான்.

ஒருவேளை, வந்தனாவைப் பார்த்துக் கொண்டே இருப்பதற்காகத் தன் மூளையே தவறான முடிவை எடுக் கிறதோ என்று ஒரு சந்தேகம் கூட, அவனுக்கு வந்தது.

மீண்டும் ஒரு தரம் சாதக பாதகங்களை ஆராய்ந்த போதும், இதே முடிவுக்குத்தான் அவன் வர நேர்ந்தது. அத் தோடு, அவன் அப்படிப்பட்ட சுயநலக்காரனும் அல்வே!

தன் மீது உள்ள நம்பிக்கையோடு வீட்டுக்குத் திரும்பிப் போனவன், முடிந்தவரை, வீட்டில் தங்காதிருக்க ஒரு வழியையும் கண்டுபிடித்தான்.

ஓய்வு நேரம் கிடைக்கும்போது பசுபதிக்கு உதவி செய்வதாக, ஏற்கனவே அவன் சொல்லியிருந்ததுதான். இப்போது முழுமூச்சுடன் அதில் ஈடுபட்டான்.

மூன்று நண்பர்களுமே, மற்றவருடைய குடும்பத் தோடும் கலகலப்பாகப் பழகுகிறவர்கள்தான். எனவே, பசுபதியுடைய தாயார் நந்தகுமாரிடம் உரிமையாகவே, ''என்னப்பா எப்போது எங்களைத் தாத்தா பாட்டி ஆக்கப் போகிறாய்?'' என்று கேட்டாள்.

முதலிலேயே திட்டமிட்டிருந்த பதில் என்பதால் ''அவள் படிப்பு முடிய வேண்டும் ஆன்ட்டி! அதுவரை,

இந்த பேச்சே கிடையாது என்று முடிவு செய்திருக் கிறோம்'' என்று தயக்கமின்றிக் காரணம் சொன்னான் நந்தகுமாரன்.

''ஆனாலும், காலையிலே, சாயங்காலம், லீவுநாள் என்று கிடைக்கிற நேரம் முச்சூடும், இங்கேயே கிடக் கிறியேப்பா? மருமகள் எங்களையெல்லாம், அடியோடு வெறுத்துவிடப் போகிறாள்!'' என்று அந்தத் தாய் கவலைப் பட்டபோது, அவனால் சட்டென்று பதில் சொல்ல முடியாது போயிற்று.

பசுபதிதான் ''தங்கச்சிக்கு படிப்பு முடிகிற நேரம், அம்மா. அவன் அங்கே இருந்து, தண்ணீரைக் கொண்டு வா, சாப்பாட்டை வை என்று தொல்லை செய்யாமல் இங்கே கிடப்பதே, அவளுக்குப் பெரிய உதவி!'' என்று ஏதோ சொல்லி சமாளித்தான்.

ஆனால், உள்ளூர சந்தேகப்பட்டு ''என்னடா, ஏதேனும் பிரச்சினையா?'' என்று தனிமையில் பசுபதி கேட்டபோது, அதை எதிர்பார்த்திருந்ததால், ''இதைத்தான் நல்லதுக்கு காலமில்லை என்பது! ஏன் மச்சி, சுந்தருக்குச் செய்கிற உதவி, உனக்குச் செய்ய மாட்டேனா? அத்தோடு முன்னைப் போல இல்லாமல், வந்தனாவும் சமையல் என்று ஏதாவது செய்கிறாள். நான் உன்னோடு இங்கே சாப்பிட்டு விட்டால், நீ அம்மாவிடம் சொன்னது போல எனக்கு செய்வதில் நேரம் வீணாகாது. இட்டிலியோ, சப்பாத்தியோ, கொண்டு வருகிறதைச் சாப்பிட்டுவிட்டுப் படிப்பைப் பார்ப்பாள்'' என்று நந்தகுமாரால் இயல்பாகவே பதில் சொல்ல முடிந்தது.

அதிக நேரம் வீட்டில் இருக்க நேராமல் வெளியே சென்றுவிட நந்தகுமாரனுக்குக் கிடைத்த காரணத்தை, வந்தனாவும் இயல்பாகவே ஏற்றுக் கொண்டிருந்தாள்.

ஒரு நண்பனுக்காகப் பொய்யான ஒரு திருமணத்தையே செய்து, வீட்டை விட்டு வெளியேறவும் செய்தவன்! அடுத்தவனுக்காக, இவ்வளவு செய்ய மாட்டானா?

அவன் பசுபதிக்காகச் செலவு செய்த நேரத்தை, அவள் சற்றும் தவறாகக் கருதவே இல்லை.

ஆனால், இரவில் வந்து உறங்கி, காலையில் எழுந்து செல்லும் சிறிது நேரமாவது, வீட்டில் இருந்துதானே தீர வேண்டும்.

அந்தச் சிறு பொழுதில், அவளது பக்கம் கூடப் பாராமல், நந்தகுமார் நடந்து கொண்ட விதம், முதலில் அவளைக் குழப்பியது. பிறகு வருத்தியது.

காரணத்தை அவள் தேட வேண்டியிருக்கவில்லை. 'நான், என்ன வேண்டும் என்றா, அப்படி வந்தேன்? அவன் இருப்பது தெரியாமல்தானே? அவளுக்கே எப்படிக் கூசிப் போயிற்று! அவள் ஏதோ பத்துக் கட்டளைகளை மீறிவிட்ட மாதிரி, என்ன மூஞ்சி திருப்பல்?' என்று உள்ளூர எரிச்சல் மண்டியது, அவளுக்கு.

ஆனால் இதைப் பெரிதாக எடுத்து, அவனோடு பேசவும், அவளுக்கு மனமில்லை.

அலட்சியப்படுத்தி மறக்க வேண்டிய ஒரு சிறு சம்பவத்தை, மறுபடியும் நினைவுபடுத்திப் பெரிதுபடுத்துவது போலவும், அது ஆகக் கூடும். மேலும், அந்த மாதிரி நேரம், அப்படி வீட்டுக்குள் இருந்தோமே என்று, அவனே கூச்சப்பட்டு, அதன் காரணமாகவேதான் இப்படி ஒதுங்குகிறானோ என்னவோ?

இதைப் பற்றி மேலும் மேலும் பேசாமல், சும்மா இருந்தால், தானாகவே பிரச்சனை சரியாகி விடக்கூடும்

என்ற நம்பிக்கையும் இருக்கவே, அவளும் ஒதுங்கியே போனாள்.

ஆனால், அவனது ஒதுக்கம், அவளது மனதைப் பாதித்தது உண்மை. காலையிலும் மாலையிலும் இருவருமாகப் பேசிக் கொண்டிருந்த, அந்த சிறு பொழுது அவளுக்கு எப்படித் தேவையாக இருந்தது என்பதும், இப்போது வந்தனாவுக்குப் புரிந்தது.

ஆனால், அவள் இந்த வீட்டில் இருப்பதன் காரணமே, அவளது படிப்பை முடிப்பதற்காகத்தான். அதை மறந்து, எதையெதையோ நினைத்து நேரத்தை வீணாக்குவது மடத்தனம் இல்லையா?

தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டு, வந்தனா படிப்பதில் மூழ்கினாள்.

ஏதோ வெப்பச் சலனத்தினால் பொய்த்ததாக வானிலை அறிக்கையில் காரணம் கூறப்பட்ட மழையில், ஒருநாள் நன்கு நனைந்து போனாள்.

ஆனால் வீடு வந்ததும், மொட்டை மாடியில் காயப் போட்டு, இப்போது ஈரமாகிவிட்ட துணிகளை எடுத்து வந்து, வீட்டினுள்ளேயே கொடி கட்டிக் காயப் போட்டவளுக்கு, நனைந்து போயிருந்த தன் உடையை மாற்றும் எண்ணமே வரவில்லை.

தானாகவே பாதி காய்ந்த நிலையாகி விட்டதால், அப்படியே உடம்பிலேயே காயட்டும் என்று விட்டுவிட்டாள்.

இது உடம்பைப் பாதித்ததோ, தொடர்ச்சியாக பல நாட்கள் சரியாகத் தூங்காததோ, இரண்டுமாகச் சேர்ந்ததோ, வந்தனாவுக்கு உடம்பு சரியில்லாமல் போயிற்று.

வழக்கம்போல முதல் ஆளாகக் காலையில் குளித்து விட்டு வரும்வரை, நந்தகுமாரன் ஒன்றும் பெரிதாக எண்ணவில்லை.

பாலைக் காய்ச்சி, காபிக் கூடப் போட்டுக் குடித்தான்.

ஆனால், அதற்குப் பிறகும், அவள் அறையிலிருந்து வெளி வராமல் இருக்கவும், மனதில் கலக்கம் தோன்ற, மெல்ல கதவைத் தட்டிக் கூப்பிட்டான்.

முதலில் பதிலில்லை.

சற்று அழுத்தமாகத் தட்டி, உரக்க அழைக்கவும், மெல்லியதான முனகலோடு வந்தனா எழும் அரவம் கேட்டது.

கதவைத் திறந்தவள், உடல் தள்ளாடவும், கதவு நிலையிலேயே சாய்ந்து நின்றுவிட்டாள்.

கண்கள் சிவந்து, முகம் வீங்கி, அவளிடமிருந்து, அனல் அடிப்பது போலத் தோன்றவும், சட்டென அவளது நெற்றியில் கை வைத்துப் பார்த்த நந்தகுமார், கடும் சூட்டை உணர்ந்து திடுக்கிட்டுப் போனான்.

''ஜுரம்! எப்போதிருந்து?'' என்று பரபரத்தவன், அவள் பதில் சொல்லுமுன்பே, ''முதலில் பல்லைத் துலக்கிவிட்டுவா. நான் காபி போட்டுத் தருகிறேன். அதைக் குடித்துவிட்டு, கொஞ்சம் நன்றான பிறகு பேசு'' என்றான்.

பல் துலக்கிக் கொண்டு வந்தவள், அவனது வற்புறுத்த லுக்காக இரண்டு வாய் காபியை அருந்தியதோடு சரி. தலையை அழுந்தப் பிடித்தவாறு, அப்படியே திவானில் சுருண்டுவிடவும், சற்று நேரம் நந்தகுமாரனுக்கு ஒன்றுமே ஓடவில்லை.

இரவில் அவனது படுக்கையாக இருக்கிறது என்பதற் காக என்பது, நந்தனின் ஊகம். பொதுவாக வந்தனா திவானில் உட்காருவது கூடக் கிடையாது. இப்போது படுத்தே விட்டாளே!

ஜுரம் எவ்வளவு இருக்கிறது என்று பார்க்கலாம் என்றால், வீட்டில் தெர்மாமீட்டர் கிடையாது.

அக்கம் பக்கம் யாரிடமாவது கேட்கலாம் என்றால், அவர்களது வாழ்க்கை விசித்திரம் பறைசாற்றப்பட்டு விடக்கூடாது என்பதற்காக, யாரிடமும் முகம் கொடுத்து நின்று பேசியதில்லை.

சுற்று வட்டாரத்தில் நல்ல மருத்துவர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்றால், அதையும் அறிந்து வைத்த தில்லை! அதைக் கேட்கவும் யாரிடமாவது போய்ப் பேசி யாக வேண்டும் அல்லவா?

எல்லாமே, இப்போது சுத்தப் பைத்தியக்காரத்தன மாகத் தோன்றியது!

செய்வது அறியாமல், மறுபடியும் அவள் அருகில் வந்து பார்த்தான்.

முன்பும் ஒருதரம் அவளது முகம் சிவந்து அவன் பார்த்திருக்கிறான். ஆனால், அந்தச் சிவப்பே வேறு! இது உள்ளே ஏதோ எரிகிற மாதிரி அல்லவா, இருக்கிறது!

அவளை அப்படியே விட்டுவிட்டு கடைத்தெருவரை சென்று, ஏதாவது மாத்திரை வாங்கி வரக் கூட, இப்போது அவனுக்குத் தைரியமில்லை.

மெல்ல அவளைத் தட்டி எழுப்பி, தன் உத்தேசத்தைச் சொன்னபோது, முதலில் மலங்க விழித்தவள், மெல்லப் புரிந்து, சிரமத்துடன் எழுந்து உட்கார்ந்தாள்.

''நந்தா...'' என்று அழைத்து ''என் லாப்டாப்பில் ஒரு பத்துப் பக்கம் ப்ராஜெக்ட் முடித்து வைத்திருக்கிறேன். அதை, சபாபதி ச...சாருக்கு ஃபார்வர்ட் பண்ணி விடு கிறீர்களா? அவர் மெயில் ஐடி, மேலேயே இருக்கிறது'' என்றாள் மெதுவாக.

''சரி செய்கிறேன். ஆனால் முதலில் உன் காய்ச் சலைப் பார்ப்போம். பைக்கில் உட்கார முடி... இல்லை. வேண்டாம். போய் ஓர் ஆட்டோ கொண்டு வருகிறேன். ஓட்டுகிறவரிடமே கேட்டு யாராவது டாக்டரை பார்த்து விட்டு வரலாமா?'' என்று கேட்கும்போதே, அவனது பார்வை அவனையுமறியாமல், கைக்கடிகாரத்தின் மீது படிந்து மீண்டது.

தீவிர உழைப்புக்காக, ஒரு வாரம் முன்புதான் கணிச மான ஊதிய உயர்வு கொடுத்தார்கள்! ஆனால், அதற்காக வந்தனாவை இப்படி விட்டுவிட்டு போக முடியுமா? நிச்சயம் முடியாது.

அவனது பார்வையை, வந்தனாவும் கவனித்தாள் போலும்.

''வேண்டாம், நந்தா'' என்று சிரமத்துடன் மறுத்தாள். ''மருத்துவரிடம் போய் வருவது என்றால், உங்களுக்கு, மிகவும் தாமதமாகிவிடும். பாராட்டி உயர்வு கொடுத்த வர்கள், தப்பாக நினைக்கும்படி விடக்கூடாது. சற்று நேரம் படுத்திருந்தாலே, எனக்குச் சரியாகிவிடும். என் பாடத்தை மட்டும் அனுப்பிவிட்டு நீங்கள் கிளம்புங்கள்'' என்றவள், ஆயாசத்துடன் மீண்டும் சரிந்தாள்.

ஊகூம், இவளை இப்படியே விட்டுப் போவது முடி யாது!

சற்று யோசித்துவிட்டு, சுந்தரோடு தொடர்பு கொண்டான்.

விஷயத்தைச் சொல்லி, ''வந்தனாவின் செல்லில் இருந்து, இப்படிக் காய்ச்சல் உதவியாக வர முடியுமா என்று செய்தி அனுப்பினால், அதை வீட்டில் காட்டி விட்டு, உன் ஆளால் இங்கே வந்து இருக்க முடியுமாடா? சாப்பாடு எல்லாம், எங்களுக்கு வருகிற இடத்திலேயே, தங்கச்சிக்கும் சேர்த்து அனுப்பச் சொல்லுகிறேன்'' என்று உதவி கேட்டான்.

''எங்களுக்காக எவ்வளவு செய்கிறாய். உனக்கு இல்லாததா, நந்தா?'' என்றான் சுந்தர், உணர்ச்சிகரமான குரலில்.

சற்று முன் ஜுர வேகத்தில் 'நந்தா' என்று, வந்தனா அழைத்தது, அவனுக்கு நினைவு வந்தது. அதற்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?

உயிரான நட்பு வட்டத்தில் சேர்ந்துவிட்டாளா? அல்லது, களைப்பிலும் சோர்விலும் வார்த்தை சுருங்கி விட்டதா? அல்லது, மனதில் அப்படி நினைத்துப் பார்த்துப் பார்த்து, காய்ச்சல் வேகத்தில் கட்டுப்பாடின்றி, வாயில் வந்துவிட்டதா?

வந்தனாவைப் பார்த்தால், மறுபடியும் கண் மூடிக் கிடந்தாள் அவள்.

சுந்தர் உடனே சொன்னான் போலும். வந்தனாவின் செல்லில் நந்தகுமார் எஸ்எம்எஸ் அனுப்பியதுமே, மனோகரி பறந்தோடி வந்துவிட்டாள்.

ஜுரத்துக்கான மாத்திரைகளுடன்.

''உணவு இடைவேளையின் போது, அவரும் வந்து பார்க்கிறாராம். தேவைப்பட்டால், அப்போது டாக்டரிடம் அழைத்துப் போவதாகச் சொல்லச் சொன்னார். நீங்கள் தைரியமாக வேலைக்குப் போவீர்களாம்'' என்று மனோகரி சொன்னதும், நந்தகுமாருக்கு மிகவும் நிம்மதியாக இருந்தது.

மனமார நன்றி சொன்னபோதும் கூடவே ''ஹூம், சைக்கிள் கேப்பில் இப்படி ஒரு தேவி தரிசனமா?'' என்று கிண்டலடித்தான்.

வந்தனா கேட்டது போல, அவளது ப்ராஜெக்டை சபா பதி சாருக்கு அனுப்பிவிட்டு, பெருமளவு நிம்மதியான மனதோடு, நந்தகுமாரன் வேலைக்குக் கிளம்பிச் சென்றான்.

அவன் சொன்ன சைக்கிள் கேப்பில் சுந்தர் வந்து பார்த்தபோது, மனோகரி கொடுத்த மாத்திரையின் விளைவாக, வந்தனா நன்றாகத் தூங்கிக் கொண்டு இருந்தாள்.

காய்ச்சலும் சற்றுத் தணிந்திருக்கவே, அவளை எழுப்ப வேண்டாம் என்று முடிவு செய்தார்கள். அதையே செல்லில் தொடர்பு கொண்டு, வந்தனாவைப் பற்றி விசாரித்த நந்தனிடமும் சொன்னார்கள்.

மாலையில் வீடு வந்த பிறகு, மனோகரி சொன்ன மருத்துவரைப் பார்க்க, வந்தனாவை தானே அழைத்துப் போவதாக நந்தகுமார் கூற, சற்று நேரம் மனோகரியுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு, சுந்தர் கிளம்பிச் சென்றான். மதியம் வேலை நேரம் தொடங்கும்போது, அவனும் அலுவலகத்தில் இருந்தாக வேண்டுமே!

தயங்கி நின்று தாமதிக்காமல், அவன் கிளம்பிவிட்டது நல்லதே போல, சற்று நேரத்தில், அந்த ஃப்ளாட்டின் அழைப்பு மணி அடித்தது.

எதையேனும் மறந்து வைத்துவிட்டு, சுந்தர்தான் திரும்பி வந்திருக்கிறானோ என்று, வாயில்புறத்து ஜன்னலை திறந்து எட்டிப் பார்த்த மனோகரி, ஒரு கணம் அதிர்ந்து போனாள்.

வெளியே நின்றது அவளுடைய தாயார்! அம்மா எதற்காக, இங்கே வந்தாள்?



# 9

மனோகரியின் அதிர்ச்சியும், குழப்பமும் மிகத் தேவையானதே.

அவளுடைய தாயார் சுகந்திக்கு மகள்மேல், சந்தேகம் இருந்தது.

ஓர் ஆண்டுக்கு முன்னதாக ஒரு பையனோடு உன் மகளைப் பார்த்தேன் என்று ஓரிருவர் சொன்னார்கள்.

அதிலும் ஒரு நண்பர் ''அந்தப் பையன் இருப்பது எங்கள் பக்கம்தான், படித்துவிட்டு ஓரளவு நல்ல வேலை பார்த்தாலும், பொறுப்புகள் நிறைய, சொத்து பத்து இல்லாத மிகவும் சாதாரணக் குடும்பம்'' என்று தெளிவாகவே கூறினார்.

மூத்த இரண்டு பெண்களுக்கும் நிறையச் சம்பாதிக்கிற வெளிநாட்டு மாப்பிள்ளை கிடைத்து, நல்லபடியாக

வாழ்கிறார்கள். இவளுக்கும் அதேபோலப் பார்த்து முடிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தால், ஏதேதோ பேச்சு வருகிறதே என்று, பெற்றவர்கள் மகளைக் கூப்பிட்டு கண்டித்தார்கள்.

சுந்தர் திடமாக எதுவும் சொல்லியிராத நிலையில், அதெல்லாம் ஒன்றும் கிடையாது என்றுவிட்டாள் பெண்.

அப்போதைக்கு திருப்தியே என்றாலும், மகளை முழுதாக நம்பாமல்தான், அவளும் கணவருமாக, மகளுக்கு அவசரமாக மாப்பிள்ளை பார்த்தது.

பிரகாசம் குடும்பத்துடன் சம்பந்தம் பேச முடிந்தது, அவர்களே எதிர்பாராது கிடைத்த வரம். மூன்று தலை முறையாக, செல்வமும் செல்வாக்குமாக, உயர்ந்த நிலை யில் இருப்பவர்கள்! பணம் பணத்தோடு என்று தேடா மல், வரும் மருமகளிடம் அழகு, குணத்தோடு, தப்பில் லாத நல்ல குடும்பம் என்பதையே எதிர்பார்த்தார்கள்.

ஒரு திருமண வீட்டில் மனோகரியைப் பார்த்ததில், நந்தகுமாரனுடைய பெற்றவர்களுக்குத் திருப்தியாக இருப்பதாகச் சொல்லவே, பணக்காரப் பெரிய இடத்து மாப்பிள்ளை, இந்த சம்பந்தம் கைவிட்டுப் போய்விடக் கூடாது என்று, கணவனும் மனைவியுமாக ஊரெல்லாம் தம்பட்டம் அடித்து விட்டார்கள்.

மணமகனாக இருக்க வேண்டிய நந்தகுமாரின் செய லால், அந்தப் பெரிய இடத்து சம்பந்தம் நின்றுவிட்ட தோடு, அவர்களது தம்பட்டத்தின் பலனாக, மனோகரி யின் திருமணப் பேச்சு, அப்போதைக்கு நின்றும் போயிற்று.

ஆனால், நந்தகுமாரனுடைய தந்தையின் சந்தேகப் பேச்சினால், அந்த சம்பந்தம் குறித்து, அவர்களுக்கும், இன்னமும் நம்பிக்கை அணையாமல், 'முணுக் முணுக்' கென்று சீமெண்ணைப் புட்டி விளக்காய் எரிந்து கொண்டு தான் இருந்தது.

கல்யாணப் பேச்சு நின்றதில், உள்ளம் துள்ளியதைக் காட்டிக் கொள்ளாமல், மனோகரி சாதாரணமாகவே, பெற்றோருக்கு ஏற்றபடி சற்று சோக முகமாகவே வீட்டில் இருக்கவும், மகள் மேல் பெற்றவர்களுக்குக் கொஞ்சம் நம்பிக்கை வந்தது. எனவே, தோழி பேரைச் சொல்லி, அவள் நந்தகுமாரின் வீட்டுக்குச் செல்வதை அவர்கள் தடுக்கவில்லை.

முக்கியமாக, அந்த வீட்டின் உள் விவகாரங்களை, அவர்கள் அறிய வேண்டியிருந்தது. வெளி விவரம் என்றார், ஒரு துப்பறியும் நிறுவனத்தை நாடினால் போதும். ஆனால் இது உள் வீட்டு மர்மம் அல்லவா?

ஆனால், அவர்கள் விரும்பியதுபோல, நந்தகுமாரும் வந்தனாவும் குடும்பம் நடத்தும் விதம் பற்றிய தகவல் களை, மனோகரி கொண்டு வந்து தரவில்லை.

ஆனால், வந்தனா அழைத்தால், நில்லாமல் அங்கே ஓடிப் போனாள்.

இந்த இடத்தில்தான், சுகந்திக்கு மறுபடியும் மகள் மேல் சந்தேகம் உண்டாயிற்று.

அந்தப் பெண் வந்தனாவுக்குத் தன் கணவனோடு மனோகரிக்கு நடந்த திருமண முயற்சி, இன்னமும் கூடத் தெரியாமலே இருக்கக்கூடும். ஆனால் அது பற்றிய விவரம், மனோகரிக்குத் தெரியும்தானே?

எட்டி உதைத்தவனின் அந்த வீட்டில், அவளுக்கு என்ன இருக்கிறது? அந்த அவமானத்தை விடவும், வந்தனாவின் நட்பு பெரிதா?

வேறு ஏதேனும் ஆசையோ என்று எண்ணவும் வழியின்றி, வாய்க்கு வாய் 'அந்த அண்ணன்' என்பது வேறு!

வெளிப்படையாகத் தெரியாத மர்மம் என்னவோ இருப்பதாக, சம்பந்தியாகி இருக்க வேண்டியவர் கூறியது போலவே, சுகந்திக்கும் இனம் புரியாத சந்தேகம் ஒன்று தோன்றி வளர்ந்தது.

அதன் காரணமாகவே, அந்த வந்தனாவின் வீட்டுக்கு, மனோகரி சென்றதை அவள் தடுக்கவில்லை.

மனோகரி, ஒரு மாதிரி அலப்பரட்டை அல்ல. கவர்ச்சி யாக உடையணிவதும் பொது இடங்களில் நின்று கத்திப் பேசுவதும், கபகபவென்று சிரிப்பதும், அவள் செய்ய மாட்டாள்.

அதுதான் பிரகாசம் தம்பதியைக் கவர்ந்தது கூட.

அதே போல, புது மணமக்கள் வசிக்கும் வீடு என்றால், இயல்பாக ஒதுங்கி விடக்கூடிய பெண்! என்னதான் சமையல் கற்றுக் கொடுக்க என்று சொன்னாலும், எப்படி மணிக்கணக்காக அங்கே போய் உட்கார்ந்திருப்பாள்?

அதிலும் பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமைகளில்!

ஆனால் ''செய்ததில் நம் வீட்டுக்கு வந்தனா எடுத்து வைத்துத் தந்தது'' என்று பாயசம், பஜ்ஜி என்று கொண்டு வருவாள். அதெல்லாம் மகள் செய்ததே என்பதில் சந் தேகம் இல்லை. ஆனாலும்...

அதிக தூரம் இல்லை. அக்கம் பக்கம் வீடுகளில் விசாரிக்கலாம் என்றாலும், அது, புதிதாக வந்த, பல அடுக்கு மாடி வீடுகளைக் கொண்டிருந்த காலனி. யாருக்கும், யாரையும் சரியாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதோடு, சுகந்திக்கும், அங்கே யாரையும் தெரியாது.

யார், எப்படிப்பட்டவர்கள் என்று தெரியாதவர்களிடம் சென்று, பெற்ற மகளைப் பற்றி விசாரிக்க, அவளுக்கு மனம் வரவில்லை.

இன்று, அந்தப் பெண்ணுக்குக் காய்ச்சல் என்று, காலையிலேயே சென்றுவிட்டாள்!

ஆனால் யோசித்துப் பார்க்கும்போது, இந்தக் காய்ச்சல் கதை, சுகந்திக்கும் ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து தரவே, மதியம் கணவர் வந்து உண்டுவிட்டுச் சென்றதும், அவளும் செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

தாயைக் கண்டதும், அச்சத்தை மீறி, மனோகரியின் பெரும் ஆறுதல், சுந்தர் சென்ற பிறகு, அவள் வந்ததே! அன்னை மட்டும், சற்று முன்னதாக வந்திருந்தால், என்ன நடந்திருக்குமோ!

சில ஆசுவாசப் பெருமூச்சுக்களை வெளியேற்றி விட்டு, பெற்றவளுக்குக் கதவைத் திறந்துவிட்டாள், மகள்.

தாயார் உள்ளே வரும்போதே "என்னம்மா, திடீரென்று. இங்கேயே... இந்த வந்தனா வீட்டுக்கே வந்து விட்டீர்கள்?" என்று அவள் வந்த விவரம் கேட்டாள்.

"அதுவா, செல்லம்? என்னமோ, சினேகிதிக்கு காய்ச்சல் என்றாயே, கஞ்சி, கஷாயம் வைப்பது பற்றி, உனக்கு

ஒன்றும் தெரியாதே, வேண்டியதைச் செய்து கொடுக்கலாம் என்று வந்தேன்டா!'' என்று சுகந்தி ஒரு போடு போட, மேலே பேச முடியாமல், மனோகரி வாயடங்கிப் போனாள்.

கஷாயம், கஞ்சி என்று உதவி செய்வதாக ஒரு காரணத்தோடு வந்தவளை, என்ன சொல்லி, எப்படி விரட்டுவது?

கூடவே குறுகுறுப்போடு தாயின் பார்வை, அறைகளைச் சுற்றியும் அலையவும், அவள் வந்த நோக்கம் புரிந்துவிட, நெஞ்சுக் கூட்டினுள் என்னவோ பிசைவது போல, மனோகரி உணர்ந்தாள்.

மகளை விட்டு அவளை மணந்தானே, அப்படி என்ன, அந்தப் பெண் மகளை விட, அழகு என்று சுகந்தியின் கண்கள் வந்தனாவைத் தேடின.

பெயருக்கேனும் அனுமதி கேட்கும் எண்ணம் கூட இல்லாமல், சாத்தியிருந்த படுக்கை அறைக் கதவைத் தள்ளி திறந்து, உள்ளே சென்று பார்த்த தாயைத் தடுக்க முடியாமல், மனோகரி தவித்தாள்.

கண்மூடிக் கிடந்த வந்தனாவை சந்தேகமாக நோக்கி, நெற்றியில் கை வைத்துத் தொட்டுப் பார்த்த பிறகே, வந்தனாவுக்கு மெய்யாகவே ஜூரம்தான் என்று சுகந்தியால் ஒத்துக் கொள்ள முடிந்தது.

''ஷ் வெளியே வாங்கம்மா. வந்தனா விழித்துவிடப் போகிறாள். மாத்திரையைப் போட்டுக் கொண்டு தூங்குகிறவள். இடையில் எழுப்பிவிடாதீர்கள். இன்னும் அதிகமாகக் காய்ச்சல் ஏறிவிடும்'' என்று மனோகரி, தன்

தாயை அந்த அறையிலிருந்து வெளியே கூட்டிப் போய்விட முயன்றாள்.

ஆனால், அறையை நன்கு ஆராயுமுன் அங்கிருந்து வெளியே செல்ல, சுகந்திக்கு மனமில்லை.

கதவு சாத்தியிருந்த ஓர் அலமாரி தவிர, அந்த அறையில் பெரிதாக பார்க்க ஒன்றுமில்லை. வந்தனாவின் அறையில், ஒரு சுவரில், அவளது உடைகள் சில தொங்கிய கோர்ட் ஸ்டாண்ட் இருந்தது.

மற்றபடி, ஒரு சின்ன மோடா, அவளது, லாப்டாப், மற்ற படிப்புக்குத் தேவையான பொருட்களுக்காக, ஒரு சிறு மேஜை.

இதில் என்னமோ விசித்திரம்! அது என்ன? யோசித்தபடியே நோயாளிக்குக் கஞ்சியையும், கஷாயத்தையும் தயார் செய்தாள், மனோகரியுடைய தாயார்.

மனோகரியுடைய அன்னை, நெற்றியை அழுத்தமாகத் தொட்டுப் பார்த்ததிலேயே, வந்தனாவின் ஆழ்ந்த தூக்கம் லேசாகக் கலையத் தொடங்கிவிட்டது. ஆனால், காய்ச்சல் சோர்வும், மாத்திரையின் வீரியமும், கண்ணைத் திறப்பது கூடக் கஷ்டமாக அசந்து கிடந்தாள், அவள்.

அதற்குள் மனோகரி 'அம்மா' என்று பேச்சினூடே அழைக்கவும், வந்தனா மிரண்டு போனாள்.

மகளான மனோகரியே சற்று மிரட்சியுடன் குறிப்பிடுகிற பெண்மணி! தந்தையை விடவும், தாயிடம், அவளுக்கு பயம் அதிகம். அப்படிப்பட்ட இவளிடம் எப்படி பேசி சமாளிப்பது? அதுவும் பலவீனமாக உணரும் இந்த வேளையில்!

எப்படியும் மனோகரியுடைய தாயிடம் பேசாமலே அனுப்புவது, நாகரீகம் இல்லை!

கஞ்சி தயாரிப்பில் சுகந்தி சமையல் அறையில் இருக்க, மெல்ல எழுந்து சென்று, முகத்தைக் கழுவிட்டு வந்து, ஹாலில் அமர்ந்தாள்.

மனோகரி அறிமுகம் செய்து வைத்து, தாயார் வந்த காரணம் சொல்ல, அவளது கண்ஜாடை புரிந்து, வந்தனாவும் பெரிதாக நன்றி தெரிவித்தாள்.

இந்த நன்றிக்கெல்லாம் மசியாமல், சுகந்தியின் பார்வை, சுற்றிச் சுற்றி, அலசி ஆராய்ந்து கொண்டேதான் இருந்தது. சில பல விஷயங்களைக் கண்டுபிடிக்கவும் செய்தது.

அறையினுள் ஆண் பொருட்கள் எதுவும் இல்லை. எல்லாம், ஹாலில் ஓர் ஓரமாகவே அடுக்கி வைக்கப் பட்டு இருந்தன.

பேண்ட், ஷர்ட் போன்றவை, வாயிற்கதவின் உட்புறமாக அடுக்கப்பட்டிருந்த கோட் ஷ்டாண்டில் தொங்கின.

இங்கே தொங்கியவை, நந்தகுமாரின் உடைகள் மட்டும்! அறையினுள் இருந்த கோட் ஸ்டாண்டில், வந்தனாவின் உடைகள் மட்டுமே தொங்கின!

ஏன் அப்படி?

தாயின் கவனம் சென்ற இடங்களைக் கவனித்த மனோகரி, கஷாயத்தை எடுத்து வர, இருவருமாகச் சமையலறைக்குச் சென்ற போது ''அம்மா...'' என்று தாயை மெதுவாக அழைத்தாள்.

''என்னடி?''என்று மகள் குரலிலேயே தானும் ரகசியம் பேசினாள் தாயார்.

''இங்கே, இப்போது வந்தனாவின் படிப்புதான் முக்கியம், அம்மா. அவள் படிப்பு முடித்துவிட்டால், உடனே பெரிய வேல கிடைக்குமாம். அவளுடைய பேராசிரியரே சொல்லி யிருக்கிறாராம். நன்றாகப் படித்தால், நல்ல வேலைக்கு அவரே உத்திரவாதம் தந்திருக்கிறாராம். அ.. அதனால், வந்து... வந்தனாவின் படிப்பு கெடக்கூடாது என்று, அந்த அண்ணன் ரொம்பத் தேவைப்பட்டால் தவிர, அந்த அறைக்குள் போகக் கூட மாட்டார்'' என்று தாயின் கேளாத சந்தேகத்துக்குச் சமாதானம் சொன்னாள்.

ஆனால், அவள் சும்மா இருந்திருந்தாலே, நன்றாக இருந்திருக்கும். தேடி வந்த கடன்காரனிடம் 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்று சொல்லாமல் சொல்லி, தந்தை ஒளிந்திருக்கும் இடத்தை மகன் காட்டிக் கொடுத்த கதை மாதிரி, மனோகரி கொடுத்த விளக்கமே, சுகந்தியின் சந்தேகத்தை உறுதி செய்தது.

அதை இன்னமும் தெளிவுபடுத்திக் கொள்பவளாக, கஷாயத்தை வடித்துக் கொண்டுபோய், கொடுத்து விட்டு ''எங்கள் மனோ எல்லாம் சொன்னாளம்மா. படிப்பு முக்கியம்தான். ஆனாலும் கல்யாணமாகி, இன்னும் ஒரு வருஷம் கூட ஆகவில்லையே! சின்...னப் பிள்ளைகள்! என்னனென்னவோ செய்கிறீர்கள்! ஏம்மா, தம்பி ராத்திரி யாவது வருவார்தானே?'' என்று கேட்டு, ஜுரத்தில் சிவந்திருந்த வந்தனாவின் முகம், இன்னமும் கன்றுவதைக் கவனித்துவிட்டு, அதன் பிறகே ''உடம்பைப் பார்த்துக் கொள்ளம்மா கண்ணு!'' என்று உருக்கமாகச் சொல்லி விடை பெற்றுப் போனாள்.

தாயை அனுப்பிவிட்டுக் கதவைச் சாத்திவிட்டு வந்த மனோகரி, வந்தனாவின் கையைப் பிடித்துக் கொண்டு அழுதுவிட்டாள்.

"அம்மா சந்தேகத்தோடு போகக் கூடாது என்று, படிப்பைக் காரணம் சொன்னேன் வந்தனா. ஆனால், இப்படிப் பேசுவார்கள், இப்படி எடுத்துக் கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்ல!" என்றாள் விசும்பல்களின் இடையே.

அயர்வுடன் அவள் கையைத் தட்டிக் கொடுத்தாள் வந்தனா. "விடு மனோ. இன்னமும் அவர்களுக்குச் சந் தேகம்தானே? முழு நிச்சயமாக கிடையாதே. அப்படியே இருக்கட்டும். என்ன நடக்கிறது என்று, பொறுத்திருந்து பார்ப்போம். விடு" என்றாள் பலவீனமான குரலில்.

வந்தனாவின் உடம்பு மட்டும் நலிவுற்று இருக்க வில்லை. என்ன நடந்தால் என்ன என்பது போல, அவள் மனதையும் பெரும் சோர்வு பாதித்திருந்தது.

சும்மாவே பாராமுகமாக இருக்கும் நந்தகுமார், அவளை விட்டு, முழுமையாக விலகி விடக்கூடும். இன்னும் கொஞ்சம் வேதனை, அவ்வளவுதானே என்றிருந்தது அவளுக்கு.

மழையில் நனைந்ததால் வந்தனாவுக்கு வந்தது, லேசான ஜூரம்தான். ஆனால், நந்தகுமார் தன்னை தவ றாக கருதி விலகுகிறானோ என்ற வேதனையும் சேர்ந்து, பாதித்ததில்தான், அவள் மிகவும் சோர்ந்து போயிருந் தாள்.

ஆனால், அன்று வந்த காய்ச்சல், இடையில் நேர்ந் திருந்த மன விகாரங்கள், விலகல்களை எல்லாம் அடித் துக் கொண்டு போய் விட்ட மாதிரி, நந்தகுமாரனும், வந்தனாவும் பழைய மாதிரி இலகுவான தோழமையோடு, மறுபடியும் பழகவும் வழி வகுத்தது எனலாம்.

வந்தனாவுக்குக் காய்ச்சல் வந்த மறுநாள், தாயாரோடு வெளியே செல்ல வேண்டி இருப்பதால், அங்கே வருவதற்கு இல்லை என்று மனோகரி தெரிவித்தாள். அவளுடைய தாயாரின் வேலை என்பது வந்தனாவின், ஏன் நந்தனின் ஊகமும்கூட.

ஆனால், நல்லவேளையாக அன்று ஒரு தேசிய விடுமுறை தினம். பசுபதியிடம் உதவிக்கு வருவதாகச் சொல்லியிருந்த நந்தகுமார், அவனிடம் விவரம் தெரிவித்துவிட்டு வீட்டிலேயே தங்கிவிட்டான்.

மனோகரி தந்தை மாத்திரையும், அவளுடைய தாயார் தயாரித்து கொடுத்த கஷாயமும் சேர்ந்து, வந்தனாவின் காய்ச்சல் உடனே குணமாகியிருந்தது.

ஆனால் அதை விடவும், அவன் தனக்காக அன்று வீட்டில் இருந்தே மிகுந்த ஆறுதலைத் தர, அன்றைக்கே அவள் எழுந்து நடமாடத் தொடங்கி விட்டாள்.

''உனக்கு உடம்பு சரியில்லை, பேசாமல் படுத்திரு'' என்று நந்தகுமார் அவளை வற்புறுத்தியும் கேட்கவில்லை.

தனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை என்று நிரூபிப்பதற்காக இரவு உணவுக்கு அவள் காய்கறி உப்புமா செய்ய, தக்காளி சாஸ் சேர்த்து, இருவரும் சேர்ந்து அதைக் காலி செய்தார்கள்.

இடையே பசுபதி இடத்தில் நடக்கும் வேலை பற்றி, அவன் சொன்னான்.

சட்டென நினைவு வர, மனோகரியுடைய தாயார் வந்ததையும் சுற்றிச் சுற்றி சந்தேகமாகப் பார்த்ததையும், அவள் தெரிவித்தாள்.

அவள் பேசியதை அப்படியே சொல்ல, வந்தனாவுக்கு மனம் வரவில்லை. நந்தன் மறுபடியும் கூட்டுக்குள் போய்விடுவானோ என்ற பயத்தில், சும்மா எல்லா இடத்தையும், நுணுக்கி, நுணுக்கிப் பார்த்ததாக மட்டும் சொன்னாள்.

ஆனால், நந்தகுமாரன் அதைப் பற்றி, அலட்டிக் கொள்ளவில்லை "மிஞ்சி, மிஞ்சி அவர்களால் என்ன செய்ய முடியும்? எதுவானாலும் நான் பார்த்துக் கொள் வேன். நீ எந்தக் கவலையும் இல்லாமல் படிப்பை மட்டும் பார்!" என்று திடமூட்டினான்.

என்னவோ, அவளுக்கும் அதற்குமேல் கவலைப்படத் தோன்றவில்லை. அவன்தான் பார்த்துக் கொள்வதாகச் சொல்லிவிட்டானே!

தொடர்ந்த இரு தினங்களுமே, நல்லபடியாகவே கழிந்தன.

தினமுமே, காலையிலேயே கிளம்பிச் சென்று, பசுபதிக்குக் கொஞ்சம் உதவி செய்துவிட்டே நந்தகுமார் அலுவலகம் சென்றபோதும், மாலையில் எதையாவது கொறித்தபடி, கணவன் மனைவி இருவரும் பேசிக் கொண் டிருப்பது, முன்பு போலவே தொடரலாயிற்று.

அதைக் கொறிப்பது என்று சொல்ல முடியாது. வேலை முடிந்து வரும்போது, நந்தகுமாரன் நல்ல பசியோடுதான் வருவான்.

மதிய உணவைச் சிற்றுண்டி மாதிரி, ஏதாவது கொஞ்ச மாக கொண்டு போய் உண்பதால், அவனைப் போலவே, அவளுக்கும் மாலையில் பசியாகத்தான் இருக்கும்.

எனவே, மாலையில் கொஞ்சம் கனமாக உண்டு விட்டு, இரவில் வெறும் பழங்கள், அல்லது மாலையில் மீந்து போனால், கொஞ்சமாக அதை உண்பது அவர் களது வழக்கமாயிருந்தது.

அதையும் இப்போது மீண்டும் தொடரலானார்கள்.

வந்தனாவுக்கு காய்ச்சல் வந்து மூன்று தினங்கள் கழித்து, உணவையும், கலகலப்பான உரையாடலையும் எதிர்பார்த்தபடி, பசியோடு வீடு திரும்பிய நந்தகுமார், அவளது அறையில் யாரோ விக்கி விசும்பி அழும் சத்தம் கேட்டு, அங்கே போனான்.

அச்சமும் கவலையுமாக அறையினுள் எட்டிப் பார்த் தால், அங்கே வந்தனாவின் மடியில் முகம் புதைத்து, மனோகரி விசும்பி அழுது கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

நிமிர்ந்து பார்த்த வந்தனாவிடம் ''என்ன?'' என்று பதட்டத்துடன் சைகையால் வினவினான்.

. பெரிதாக ஒன்றுமில்லை, வெளியே போய், அப்புற மாக வா என்பது போல வந்தனா பதிலுக்கு ஜாடையால் கூறினாள்.

பயப்படத் தேவையில்லை என்றதும் பசி நினைவு வர, வயிற்றைத் தொட்டுக் காட்டினான் அவன்.

மடியில் கிடப்பவளைக் காட்டி, வெளியே போய் ஏதாவது உண்ணுமாறு, அவள் சைகை செய்யத் தலை யாட்டிவிட்டுப் போனான்.

வெளியே போய் ஒரு வாழைப் பழத்தை வாங்கி உரித்துச் சாப்பிடத் தொடங்கினால், சுந்தர் அவனை செல்லில் கூப்பிட்டான்.

வீட்டில் அழுது கொண்டிருந்தவள் மனோகரி ஆயிற்றே!

கவலையுடன் கால் பட்டனை அழுத்திக் கேட்டால், அடுத்த பத்து நிமிஷங்களுக்கு, சுந்தர் புலம்பித் தள்ளி விட்டான்.

அவனுக்கு ஏற்றவாறு ஒரு பதிலைச் சொல்லிவிட்டுப் பார்த்தால், கையில் இருந்த பழத்தின்மேல், ஏதோ தூசி போலத் தெரிந்தது.

உரித்த பழத்தைக் கையில் வைத்துக் கொண்டு பத்து நிமிஷம் தெருவில் நின்றால், அப்படித்தான்.

வெறுப்புடன் பழத்தைக் குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு, வீட்டுக்குத் திரும்பிப் போனான்.

நல்லவேளையாக, மனோகரி கிளம்பிப் போயிருந்தாள்.

வந்தனாவும், அவர்களது குட்டிச் சமையல் அறையில் என்னவோ செய்து கொண்டிருந்தாள்.

அவளிடம் சென்று, ''அப்பா இவ்வளவு நேரம் சுந்த ரோடு பேசியதில், பழம் சாப்பிடக் கூட முடியவில்லை. பசி உயிர் போகிறது, வந்தனா. சீக்கிரமாக ஏதாவது செய்ய முடியுமா? அல்லது வாங்கிக் கொள்வோமா?'' என்று கேட்டான்.

''சப்பாத்திப்பா. மாவைக் கூடப் பிசைந்துவிட்டேன். குருமா மசாலா வாங்கி வந்தேனா? அது போட்டுப் பட்டாணிக் குருமாவும் செய்தாயிற்று. சப்பாத்தி உருட்ட நினைக்கும்போது மனோ வந்து ஒரே புலம்பல். என் னவோ ஏதோ என்று பயந்து போய்க் கேட்டால், சுந்தர் அண்ணனோடு ஏதோ சண்டை போல... அதை

அப்புறம் சாப்பிடுகிற போது சொல்கிறேன். இப்போது சப்பாத்தி வேலை முடியட்டும்'' என்று சப்பாத்தியை உருட்டுவதில் முனைந்தாள் அவள். ''இரு, இரு. நானும் உதவி செய்கிறேன். இதை, இந்த சப்பாத்திக் கல்லில் போட்டு வெந்ததும் எடுக்க வேண்டும், அவ்வளவுதானே?'' என்று அவள் உருட்ட உருட்ட, அவன் போட்டு எடுத்தான்.

ஒன்றிரண்டு லேசாகத் தீய்ந்தபோதும், ஒருவர் உருட்ட, ஒருவர் வேக வைத்து எடுக்க என்று, வேலை சீக்கிரமாக முடிந்தது.

உண்மையான குடும்ப அங்கத்தினர் போல, இருவருமாகச் செய்ததாலோ என்னவோ, அன்றைய உணவு, மிகவும் சுவையாக இருப்பது போல, நந்தகுமாருக்குத் தோன்றியது.

உணவு முடிந்ததும், மனோகரி சொன்ன விஷயங்களை, வந்தனா அவனிடம் கூறலானாள். சுந்தரின் புலம்பலை நந்தகுமாரன் தெரிவிக்க, இரண்டையும் சேர்த்து, நடந்ததை ஊகித்தார்கள்!



# 10

அன்று வீட்டுக்குச் செல்லும்போதே, தாய், தந்தையின் பேச்சை, அவர்கள் அறியாமல் ஒட்டுக் கேட்க வேண்டும் என்று மனோகரி முடிவு செய்திருந்தாள்.

எனவே, கணவரின் வருகைக்காக தாயார் துடித்துக் கொண்டிருப்பது, அவளுக்கு நன்றாகவே புரிந்தது.

தன்னுடன் பேசுவதற்காக, தன் மனைவி வீட்டில் துடித்துக் கொண்டிருப்பது தெரியாமல், அன்று நடந்த ஊர் சங்கக் கூட்டத்துக்குச் சென்று சொந்த ஊர் விவகாரம் எல்லாம் பேசி முடித்துவிட்டு, ராமலிங்கம் மிகவும் தாமதமாகத்தான் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

அதற்குள் வெளிநாட்டில் இருக்கும் இரு மகள் களுக்கும் போன் செய்து, இனி மனோகரியின் திருமணம் சீக்கிரமே கூடிவிடும் என்றும், ஓரிரு மாதங்களுக்குள் இந்தியாவுக்கு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளும்படியும், சுகந்தி சொல்லியாயிற்று.

தங்கையின் மனம் ஓரளவு தெரிந்தவர்கள் என்பதால், இருவருமே அதிக உற்சாகம் காட்டாமல், முயற்சி செய்வதாகச் சொல்லிப் பேச்சை முடித்து விட்டார்கள்.

தமக்கைகள் பிரியம் உள்ளவர்கள்தான். ஆனால், தாயை எதிர்க்கும் தைரியம் அந்த வீட்டில் யாருக்கும் கிடையாது! அத்தோடு ஆளுக்கு ஒரு திசையில், ஆயிரக் கணக்கான கிலோ மீட்டர் தொலைவில் இருந்து கொண்டு, அவர்களால் என்ன செய்ய முடியும்?

சொல்லப் போனால், இந்த வெளிநாட்டு மாப்பிள்ளை மோகமே, சுகந்தியுடையதுதான். மகள்கள் வெளிநாட்டில் இருந்தால், அவர்களைப் பார்க்கப் போகிற சாக்கில், அந்தந்த நாடுகளுக்குப் போய்ச் சுற்றலாம். அப்புறம் அதைப் பற்றி இங்கே பெருமையடித்துப் பேசலாம் என்கிற ஆசை அவளுக்கு.

மனோகரிக்கும் அப்படித்தான் தேடத் தொடங்கி னார்கள். ஆனால் நந்தகுமாரனின் வீட்டுப் பெருமை, ராமலிங்கத்துக்கு இன்னும் பெரிதாகத் தோன்றியது.

கூடவே, கீழ்த்திசை நாடுகளில் அவர்களுக்குத் தொழில் தொடர்பு உண்டு என்றதும், அதிகப்படி ஆர்வத்தை ஏற்படுத்திவிட்டது.

இப்போது என்ன ஆகுமோ என்று, கனத்த இதயத்தோடு, தந்தையின் வருகைக்காக, மனோகரி காத்திருந்தாள்.

அவரிடம் அன்னை என்ன சொல்லப் போகிறாளோ என்ற கவலையுடனும், அவள் அஞ்சியது தான் நடந்தது.

மிகவும் தாமதமாக ராமலிங்கம் வீட்டுக்குள் வந்ததுமே ''இருந்திருந்து, இன்றைக்கு போய், இவ்வளவு நேரம் ஆக்குவீர்களா?'' என்று கணவரிடம் சுகந்தி பாய்ந்தாள்.

மனைவியை ஆழப் பார்த்துவிட்டு ''நீ ஏதோ முக்கியமான விஷயம் வைத்திருக்கிறாய் போல! அதை முதலில் சொல்லு. எதுவானாலும் சாப்பிட்டுவிட்டுச் சொல்லு. இல்லையானால், பாதி நமுத்துப்போன பட்டாசு மாதிரி, இடையிடையே எதிர்பாராமல் வெடித்துக் கொண்டே இருப்பாய்'' என்றார் ராமலிங்கம்.

''எல்லாம் ஆயிற்று, உங்கள் சாப்பாடு ஊர் சங்கத்தில் என்பதால், நான் அப்போதே சாப்பாட்டை முடித்துவிட்டேன். முதலில் விஷயத்தைக் கேளுங்கள்'' என்று காய்ச்சல் சாக்கை வைத்துக் கொண்டு வந்தனாவைப் பார்க்கப் போனது பற்றிச் சொன்னாள்.

''சுற்றிச் சுற்றி, நான் நன்றாகப் பார்த்து விட்டேங்க. அந்த வீட்டிலே குடும்பமே நடக்கவில்லை. அப்பாரு செத்துவிட்டார். அண்ணன்கள் வீட்டை விட்டு வெளியே விரட்டி விட்டார்கள். அனாதையாக நிற்கிறேன். நீங்கள்

தான் கதி என்று, நந்தகுமார் தம்பிகிட்டே போய், அந்தப் பெண் வந்தனா அழுதிருக்கிறாள். தம்பி இளகவும், எப்படியோ கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணிவிட்டாள். ஆனால் என்ன பாருங்கள், அந்தப் பெண்ணுக்குத் தம்பியின் பணத்தை, மனதை விட, அவளது படிப்பில் தான் குறி, அந்தப் படிப்புக்கு நிறைய சம்பளம் வரு மாமே! தனக்கே பணம் வரும்போது, புருஷன் அவனைப் பெற்றவர்களுக்கு எதற்கு அடங்கி வாழ வேண்டும் என்று நினைப்பாள் போல! அதனாலே படிக்க வேண் டும் என்று, அவள் தனியாகவேதான் இருக்கிறாள். சம்பந்தி சந்தேகப்பட்டதும், இது போல எதையோ தானே? எல்லாவற்றையும் அவரிடம் சொல்லி, உடனே அவளை விரட்டிவிட்டு, அவர் மகன் நம் பெண்ணை மணக்க வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதை சீக்கிரமாகவும் செய்ய வேண்டும்'' என்றாள்.

''செய்யலாம், ஆனால், உன் பெண் அங்கே ஓடி ஓடிப் போனாளே, அது என்ன என்று விசாரித்தாயா? இடை வழியில், மனோ வேறு ஏதாவது குண்டுபோட்டுவிடப் போகிறாள்!'' என்றார் ராமலிங்கம்.

''சே, அது வெறும் அறியாப் பிள்ளைங்க! அந்தப் பெண் நல்ல அழகா இருக்கிறாளா? இது வாயைப் பிளந்துகொண்டு, ஊழியம் செய்கிறது! ஆனால் அந்த வந்தனா பொல்லாதவள்ப்பா. நந்தகுமார் தம்பியையே ஏமாற்றி, கல்யாணமும் செய்ய வைத்து, இப்படி தனி யாக ஒதுக்கியும் வைத்திருக்கிறாளே! கடைசி, கடைசி என்று செல்லம் கொடுத்து, இந்தக் கழுதை சரியான ஏமாளியாக இருக்கிறது. வந்தனா படிக்க வேண்டும்

என்பதற்காக அவள் அறைக்குள் அண்ணன் போவ தில்லையாம்! அசடு மாதிரி சொல்கிறது. பாருங்கள்! ஆனால் ஒரு வகையில் இதெல்லாம் கூட, இந்தக் கல்யாணம் உட்பட, நமக்கு நல்லதுதாங்க'' என்றாள் சுகந்தி.

''என்னது? என்ன உளறுகிறாய்?'' என்று வியந்து கேட்டார் ராமலிங்கம்.

''ஆமாங்க. முன்னே கல்யாணம் பேசினபோதே, எத் தனையோ போட்டி இருந்ததால் தானே, எல்லோரிடமும் முடிவானது போலச் சொல்லித் திரிய நேர்ந்தது. கடைசி வரை, அது நடந்திருக்குமோ, என்னவோ? இப்போது பதிவுத் திருமணமே நடந்திருக்கிறது என்பதால், மற்ற எல்லோரும் ஒதுங்கி விடுவார்கள். உள்ளே நடப்பது தெரியும் என்பதால், நாமும் தைரியமாகப் பெண்ணைக் கொடுக்கலாம் என்ன சொல்லுகிறீர்கள்?''

''கில்லாடி டீ நீ! என்னமாகக் கணக்குப் போடுகிறாய்! அதுவும் ரொம்பச் சரியாக!'' என்று பாராட்டினார் கணவர்.

''அப்படியானால், உடனே சம்பந்தி வீட்டுக்குப் போங்கள். எல்லாவற்றையும் விலாவாரியாகச் சொல்லுங் கள். அந்த மாதிரியான பொய்யான திருமணம் என்றால், ரத்து பண்ணுவது எளிதாமே! அதை உடனே செய்து விட்டு, நம் பெண்ணை அவர்களுக்கு மருமகளாகச் சீக்கிர மாக ஏற்பாடு செய்யுங்கள்!'' என்று சுகந்தி முடிக்கவும், மறைந்திருந்து எல்லாவற்றையும் கேட்டுக் கொண் டிருந்த மனோகரி ஒரேடியாக மிரண்டு போனாள்.

தாயார் இப்படி விரட்டுகிறாளே! சுந்தர் மற்ற நண்பர் களோடு கலந்து பேசக்கூட, அவகாசம் இராது போலத்

தோன்றுகிறதே என்று அவள் கலங்கும்போதே, ராமலிங்கம் இன்னொரு விவரம் தெரிவித்தார்.

"அப்படி அவசரப்பட முடியாது சுகந்தி, சம்பந்தி, வெளிநாடு போயிருக்கிறார். பத்திரிகையில் பார்த்தேன். தொழில் தொடர்பான ஏதோ பயணமாகும். வருவதற்கு பத்து நாட்கள் ஆகும். பயணத்தை முடித்துக் கொண்டு, மனிதர் வரட்டும் வந்ததுமே, மனோ விஷயம் பேசி விடலாம்" என்றார் அவர்.

பத்து நாட்கள்! பத்தே நாட்கள்! இந்த அவகாசத்தில் தாயின் இந்த முயற்சியை முறியடிக்க வேண்டும்! அவள் இப்போது என்ன செய்யலாம்?

ஊகூம்! இப்போது சுந்தர் தான் துணிந்து முன்வர வேண்டும். அவனும் எவ்வளவு காலம் தான், நண்பனின் பின்னே ஒளிந்து கொண்டிருக்க முடியும்?

உண்மையைக் கையில் வைத்துக்கொண்டு, நந்தகுமாருடைய தந்தையே, இரண்டு அதட்டல் போட்டால், அந்த மகனாலும் தான் எப்படி மீற முடியும்?

அதைவிட, சுந்தர் நேரே வந்து பெண்ணைக் கட்டிக் கொடு என்று, அவளுடைய பெற்றோரைக் கேட்பது தான் நல்லது!

அவர்கள் முடியாது என்றுதான் சொல்லுவார்கள். கொஞ்சம் கேவலமாகவும் பேசலாம். அதிலும் அவளுடைய தாயார் மோசமாகப் பேசத் தொடங்கினால், காது கொடுத்துக் கேட்க முடியாமல்தான் இருக்கும்!

ஆனால், காதல் என்றால் சும்மாவா? தங்கத் தட்டில் வைத்துக் கையிலும் வாயிலுமா அள்ளிக் கொடுப் பார்கள்? கஷ்டப்பட்டுத்தான் ஆக வேண்டும்.

ஆனால், இப்போது அவளும் துணிந்துவிட்டாள். அவனுடன் கூடச் சேர்ந்து, ஆமாம். அப்படித்தான், எங்களுக்குள் காதல்தான் என்று அவள் உறுதியாக நின்றால், அப்புறம் பெற்றோரால் வேறு என்ன செய்ய முடியும்?

என்ன? பிடித்து இழுத்து நாலு அடி அடிக்கலாம். பட்டினி போடலாம். ஆனால், கையைக் கட்டிக் காலைக் கட்டியா கல்யாணம் செய்ய முடியும்?

எதற்கும் மசியாமல், ஒரே பிடியாக நின்றால், மகளுக்கு விட்டுக் கொடுத்துதானே, ஆக வேண்டும்?

அவள், இப்போது அதற்குத் தயார்! என்ன வதை என்றாலும் சரிதான்!

அவளும் சுந்தரும் உறுதியோடு இருக்கையில், அவர்களது கூட்டுறவுக்கு வேறு தடங்கல் எதுவும் நேர்வதற்கில்லை என்று மனோகரி நிச்சயமாக நம்பினாள்.

இந்த நம்பிக்கையோடுதான், எப்போது, எப்படி என்பது பற்றிப் பேசி முடிவு செய்வதற்காக, மனோகரி, தன் அன்பனை பேச வரச் சொன்னாள்.

தங்கைக்குக் கிடைப்பதாக இருந்த வேலை விஷயமாக, அவளோடு பங்களூருவுக்குச் சென்றிருந்த சுந்தர் திரும்பி வந்து, இங்கே நேரம் பார்த்து, மனோகரியைச் சந்திப்பதற்கே, அவளுக்குப் பொன் போன்று தோன்றிய இரண்டு தினங்கள் கடந்து விட்டன. அந்த இரண்டு நாட்களும் அவள் பட்ட பாடு! பைத்தியம் பிடிக்காத குறைதான்!

ஆனால், அவள் சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டு முடித்த சுந்தர், நிலைமையின் பயங்கரம்

புரியாமல், அவள் அனாவசியமாகப் பயப்படுவதாக கூறவே, சும்மாவே தவித்துக் கொண்டிருந்த அவளுக்குக் கோபம் வந்துவிட்டது!

வந்த ஆத்திரத்தில் ''என்ன உளறுகிறீர்கள்? நான் அனாவசியமாகப் பயப்படுகிறேனா? அன்றைக்கே விஷயம் எவ்வளவு தூரத்துக்குப் போய்விட்டது என்று புரிந்து, நந்தண்ணன் ஒரு பதிவு மணத்தையே பண்ணி வைத்திருக்கிறார். அது உண்மைபோலத் தெரிவதற்கு, பதியண்ணன் ஒரு வீட்டையே ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறார். சரியாகச் சொல்வதானால், விஷயம் எவ்வளவு ஆபத்தான நிலைக்குப்போயிருக்கிறது என்று புரிந்து கொள்ளாத ஒரே ஆள் நீங்கள் தான். நீங்கள் மட்டும்தான்'' என்று படபடவென்று கடுகாய் பொரிந்து தீர்த்து விட்டாள்.

புரிந்து கொள்ளாமலா, எவனெவன் காலையெல்லாமோ பிடித்து, இல்லாத வேலையெல்லாம் செய்து கொண்டிருக்கிறான்.

அதற்கு மேல் வீட்டில் வேறு 'பெண் எடுத்துப் பெண் கொடுத்தால் செலவிராது' என்று புதிதாகக் கிளம்பியிருக்கும் பூதத்தை தங்கையின் வேலைக்கான டெப்பாசிட்டுக்குப் பணம் ஏற்பாடு செய்து கொடுத்து ''முதலில் தங்கையும் சம்பாதித்துப் பார்க்கட்டும்ப்பா!'' என்று சொல்லி அடக்கி வைத்திருக்கிறான்.

தங்கையின் நல்வாழ்வைத் தட்டிக் கழிக்கிறோமோ என்கிற குற்ற உணர்வு வேறு!

இன்னும் எத்தனையோ மனவேதனைகள்!

தான் படும் வேதனை புரியாமல், தன்னையே குறை சொல்கிறாளே என்பது சுந்தருக்கு ''எல்லாம் அவரவர் நிலையில் இருந்து பார்த்தால் தான் அவரவர் படும் கஷ்டம் புரியும்! இப்போது நான் என்னதான் செய்ய வேண்டும் என்கிறாய்?'' என்று எரிச்சலை அடக்கிக் கொண்டு கேட்டான் அவன்.

''முதலில் என் வீட்டுக்கு வந்து அப்பாவிடம் நம் திரு மணம் பற்றிப் பேசுங்கள்'' என்றாள் அவள் தீர்மானமாக.

துள்ளி எழுந்து ''என்ன விளையாடுகிறாயா? இப் போதைக்கு நம் திருமணம் பற்றி, என்னால் நினைத்துப் பார்க்கக் கூட முடியாது!'' என்றான் அவன் அவளை விடவும் உறுதியான குரலில்.

அவனது வீடு இருக்கும் நிலையில், அங்கே இப் போது வாயைத் திறக்கவேனும் முடியுமா? அதனாலேயே, முடியாது என்றான் சுந்தர்.

தன் காதுகளையே நம்ப முடியாமல், அவனை வெறித்துப் பார்த்தாள் மனோகரி!

வெளிப்படையாகப் பேசி, ஒருவருக்கு ஒருவர் என்று முடிவெடுத்து, சுமார் எட்டு மாதங்களே ஆன போதும், மனோகரிக்கு அந்த உணர்வு மனதில் தோன்றி ஓர் ஆண்டுக்கும் மேலே ஆகிறது. தனக்கும் அப்படித்தான் என்று, சுந்தரும் அவளிடம் தெரிவித்திருந்தான்.

இப்போது திருமணம் செய்தாக வேண்டும் என்கிற நெருக்கடியான நிலைமை வந்த பிறகு, இப்போது அது பற்றி நினைத்துப் பார்க்கக்கூட முடியாது என்றால், என்ன அர்த்தம்?

இப்போது மட்டும்தானா? எப்போதுமேவா? இப்போது விட்டால், எப்போதுமே அப்படித்தான் என்று ஆகிவிடும் என்று, இவனுக்கு ஏன் புரிய்வில்லை?

தவிப்புடன் தானும் எழுந்து ''என்ன சொல்லுகிறீர்கள் சுந்தர்? உங்களுக்கு நான் வேண்டாமா? வேண்டவே வேண்டாமா?'' என்று கண்ணீருடன் கேட்டாள் அவள்.

மறுபடியும் என்ன உளறல் என்பதோடு, அவள் கண்ணீரும் சிந்தவே, சுந்தரின் எரிச்சல் மிகுதியாயிற்று.

அவனுடைய மனோ கஷ்டப்படுகிறாள் என்றால், அவனுக்கு மட்டும் இது ஆனந்தமாகவா இருக்கும்? ஆனால், இந்த நேரத்தில் போய், வீட்டில் தன் காதலைச் சொன்னால், அது எப்படிப்பட்ட சுயநலமாகத் தோன்றும்?

''என் நிலைமையைக் கொஞ்சமும் யோசியாமல், முட்டாள்தனமாக உளறாதே, மனோ. இப்போது கலா வோடு பங்களூரு போய் வந்தேனே. என்ன ஆயிற்று என்று கேட்டாயா? இரண்டு லட்சம் ரூபாய் டெப்பாசிட் கட்ட வேண்டுமாம். வேலையைக் காட்டி பாங்க்கில் தான் கடன் வாங்க வேண்டும். அப்புறம் அதற்கு வட்டி? இருக்கிற நிலை உனக்குத் தெரியும்! உன் அப்பா பெண் தருவது, தராததை, விடு! என் பெற்றோரிடம் இது பற்றி எப்படிப் பேசுவேன்? இதையெல்லாம் யோசிக்காமல், வாய்க்கு வந்தபடி, என்னென்னமோ பேசுகிறாயே. இது போல ஒரு வார்த்தை சொல்லுமுன். யோசிக்க வேண்டாமா?'' என்று கண்டனக் குரலில் பேசினான் அவன்.

''உங்கள் நிலைமை மட்டும்தான், உங்களுக்கு முக்கியம். நான் இருந்தாலும் செத்தாலும், உங்களுக்கு

ஒன்றுமில்லை அவ்வளவுதானே? விட்டுவிடுங்கள்'' என்று சீறி விழுந்தவள், அவன் கூப்பிடக் கூப்பிட நில்லாமல், அங்கிருந்து வேகமாகக் கிளம்பி, கால் போன போக்கில் நடந்தாள். வீட்டுக்குச் செல்ல அடியோடு மனமில்லை.

முகத்தை மாற்றி, ஒன்றுமில்லாதது போலப் பெற்றோர் முன் நடிப்பதற்கு, இப்போது அவளால் முடியாது.

அதனால், தன் நிலைமை புரிந்த வந்தனாவிடமே வந்து சேர்ந்தாள்! தன் சுமையை, அவளிடம் இறக்கி வைத்தாள்.

''அதே போல சுந்தரும், அவனைப் பற்றி முழுதும் அறிந்த என்னிடம், அவனது நிலைமை எடுத்துச் சொல்லி, வறுத்து எடுத்தானாக்கும்!'' என்றான் நந்தகுமாரன், ''ஆனாலும் என்ன அசட்டுத்தனம், பார்! மனோகரி பெற்றோரை எதிர்த்து நின்றால், விருப்பத்துக்கு விரோதமாக, அவளை நடக்க வைக்க முடியாதாம்! நான் மட்டும் என் அப்பா வந்து சொன்னால், உத்தம புத்திரனாய், உடனே உன்னை விரட்டிவிட்டு அவள் கழுத்தில் தாலி கட்டி விடுவேனாமா? அதிலும், ஏற்கனவே அவரை எதிர்த்துக் காட்டியவன்! இவ்வளவு யோசிக்க மாட்டாளா? அதே போல, சுந்தரும் தான் என்ன? அவன் வீட்டுப் பிரச்சினை தான் அப்போது முக்கியமா? அவளது கலக்கம் புரிந்து, ஆறுதலாகப் பேச வேண்டாம்? அவளுக்கு முட்டாள் பட்டம் கட்ட, அதுவா நேரம்? இந்த அழகில் அவள்தான் யோசிக்காமல் பேசுகிறாளாம்! யப்பா... இதுகளை என்ன தான் செய்வது?'' என்று தோளை உலுக்கிக் கைகளை உதறினான் அவன்.

''ஆமாம்ப்பா! இரண்டு பேர் பேச்சுமே, சுத்த்...தப் பைத்தியக்காரத்தனம்! அந்த இரண்டு பேர் தலைகளை யும் பிடித்து ணங்கென்று ஒரு முட்டு முட்டித்தான் தெளிய வைக்க வேண்டும்!''

சட்டென விழி மலர, அவளைக் கூர்ந்து பார்த்து விட்டு கடகடவென்று நகைத்தான் நந்தகுமார்.

''என்ன? எதற்குச் சிரிக்கிறீர்கள்?'' என்று வியப்புடன் வினவினாள் வந்தனா.

''அதில்லை... என் அம்மா சாது மருமகள் வேண்டும் என்று கேட்பார்கள். ஆனாலும் 'ணங்' கென்று இரண்டு தலைகளை முட்டுவதா? எப்படிப்பட்ட சா... து மருமகள் கிடைத்திருக்கிறாள் என்று நினைத்தேனா? சிரிப்பு வந்துவிட்டது!'' என்றான் அவன் புன்னகையுடனேயே.

தானும் முறுவலித்து ''நல்லவேளை, இது நிஜ மில்லை!'' என்றாள் வந்தனா.

துணியால் துடைத்தாற்போல, அவள் முகத்தில் சிரிப்பு சட்டென மறைந்தது.

வருத்தத்தை மறைக்கும் முயற்சி போல, ஓர் உணர்ச்சி துடைத்த பாவனை தெரியவும், அம்மா ஏக்கமோ என்று வந்தனாவுக்கு தோன்றியது.

தன் தந்தையின் ஞாபகம் வர, ''அம்மாவைப் பார்க்க முடியாதிருப்பது கஷ்டமாக இருக்கும்'' என்றாள் மெதுவான குரலில்.

ஆனால் ''முடியாமல் என்ன?'' என்றான் அவன் எடுப் பாக, ''நான் எப்போது விரும்பினாலும், அங்கே போவ தையோ, அம்மாவுடன் பேசுவதையோ, யாரும் தடுக்க

முடியாது. தடுக்கவும் மாட்டார்கள். ஆனால் ஒரு நல்ல நிலைக்கு வந்து அப்பாவுக்குக் காட்டிய பிறகே போக வேண்டும் என்று வைத்திருக்கிறேன். அவ்வளவு தான். இப்போது கூட அங்கே இங்கே செல்லும் போது கண் ணில் படாமலா இருக்கிறார்கள்? அப்போது நின்று பார்க் கத்தானே, செய்கிறேன்?'' என்று சற்று விட்டேற்றியான, இதென்ன பெரிய விஷயம் என்பது போன்ற குரலில் கூறினான் அவன்.

அவளுக்காக வரவழைத்த குரல் என்று வந்தனாவுக்குப் புரிந்தது.

அங்கே, இங்கே நின்று, இவர்களைப் பார்த்ததை. அவன் மறுக்கவில்லையே! அதன் காரணம் தெரிய, பிஹெச்டியா பண்ண வேண்டும்?

நெஞ்சு நிறையப் பாசம் இருக்கத்தான் செய்யும்! ஒரே பிள்ளை என்பது வேறு. பெற்றோர் அன்பு என்பதும், தனிதானே?

சுந்தர் மனோகரி திருமணம் நடந்த பிறகு, ஒரு நாள் எல்லா உண்மையும் சொல்லிப் பெற்றோருடன் சேர்ந்து விடுவான். கட்டாயம் சேரத்தான் வேண்டும்.

ஆனால், அப்போது அவள்தான் தனி மரமாக நிற்கப் போகிறாள்! ஏனெனில், அவள் சென்று சேர்ந்து கொள்ள முடியாத இடத்துக்கல்லவா, அவளுடைய தந்தை சென்றுவிட்டார்! ஒரு கணம் அவளுக்குத் தொண்டையை அடைத்தது.

ஏதோ? அவனுக்காவது அப்படி இல்லை! கடவுள் புண்ணியத்தில், நந்தனுடைய பெற்றோர் வெகுகாலம்

வாழட்டும்! நந்தனும் சென்று அவர்களோடு சேர்ந்து சந்தோஷமாக இருக்கட்டும்.!

மனதில் நினைத்தது தன்னையறியாமல் வாயில் வந்தது.

''நீங்களும், உங்கள் பெற்றோரும் சேர்ந்து வெகு காலம் சந்தோஷமாக இருக்க வேண்டும், நந்தா.''

வந்தனாவின் கண்களில் தெரிந்த ஈரப்பளபளப்பு நந்தகுமாரையும் யோசிக்க வைத்தது.

அவளுக்கும் தந்தை நினைவு வந்திருக்கும் என்று அவனுக்கு நிச்சயமே.

அவளது இந்த யாருமற்ற வேதனை, ஒரு போதும் தவிர்க்க முடியாதது என்று எண்ணும்போதே, ஏன் முடியாது என்று ஒரு கேள்வி அவனுள் ஒரு பரபரப்புடன் எழுந்தது.

அவளை அருகில் இழுத்து, ஆறுதலாக அணைத்து, சுளித்த புருவங்களில் முத்தமிட்டு, அன்போடு வருடிக் கொடுத்தால், அப்புறம் இந்த வலி, படிப்படியாகக் குறைந்து மறைந்துவிடாதா?

நினைத்ததைச் செய்யப் பரபரத்த கைகளை அடக்கிக் கொண்டு, ஒரு வினாடி யோசித்தான்.

விளையாட்டு வீரனாக இருந்ததாலோ என்னவோ, நந்தகுமாரன் பெரிய பெரிய முடிவுகளை அந்தந்த வினாடியிலேயே எடுத்துவிடுவான். சாதக பாதகங்களை யும் உடனே யோசித்து முடித்து, சட்டென்று செயல் பட்டும் விடுவான். வழவழ கொழகொழ என்று தள்ளிப் போடுவது கிடையாது.

கூடவே அவளது 'நந்தா!'

அவளை விசித்திரமான முறுவலுடன் பார்த்துவிட்டு ''எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்றுகிறது'' என்றான் அவன்.

''நல்ல யோசனையா? என்ன விஷயமாய், நந்த குமார்!''

அதற்குள் 'நந்தகுமாரா'? ஹூம்!

''எல்லாவற்றையும் பற்றித்தான். நிறைய பிரச் சினைகள் வருகின்றனவே, எல்லாவற்றுக்கும் தீர்வாக...'' என்று நிறுத்தி, அவளை நேராகப் பார்த்தான் அவன்.

''தீர்வாக?''

''எப்போதுமே நாம் இப்படியே இருப்போமா?'' என்று அவளது கை மேல் கையை வைத்து கேட்டான் நந்த குமார்.

சில கணங்கள் அங்கே பேரமைதி நிலவியது.



# 11

நந்தகுமாரிடமிருந்து, இப்படி ஒரு கேள்வியை, வந்தனா சற்றும் எதிர்பார்த்திராததால், சற்று நேரம் அவளால் பேசவே முடியவில்லை.

சிரமப்பட்டுத் தன்னைச் சமாளித்து, மெல்லக் கையை உருவிக்கொண்டு, அதன் பிறகே ''ஏன்?'' என்று ஒற்றை வார்த்தையில் ஒரு கேள்வி கேட்டாள்.

அவனிடம் பதில் தயாராக இருந்தது ''யோசித்துப் பார், வந்தனா. இன்னும் சிறிது காலத்துக்குள் எப்படியும் எனக்கு ஒரு மனைவியும், உனக்கு ஒரு கணவனும் வேண்டும். அது நாமாகவே ஏன் இருக்கக்கூடாது? ஒருவருக்கொருவர் அன்பு, மதிப்பு, ஒத்த எண்ணங்கள் எல்லாமே இருக்கின்றன. அனுசரித்து போக முடிகிறது. திருமணத்துக்கு இவையெல்லாம் முக்கியம் இல்லையா? அத்தோடு நாம் என்னதான் எடுத்துச் சொன்னாலும் இப்போது நாம் வாழும் விதத்தை யார் நம்புவார்கள்?'

இதில், நாகரீகம் கருதி நந்தன் சொல்லாமல் விட்டதும் இருந்தது. அவன் பணக்காரன், ஆண்மகன், எப்படியும் ஒரு மனைவி இலகுவாகக் கிடைத்து விடுவாள். ஆனால், அவள் பெண் என்பதோடு, இன்றைய அவளது நிதி நிலைமையும் சரியில்லை. எனவே, தனியாக நின்று போவாளே என்று பரிதாபபட்டுக் கேட்கிறான்!

தன்னைப் பார்த்து யாரும் பரிதாபப்படுவது, வந்தனாவுக்கு எப்போதுமே பிடிக்காது. அதற்காக ஒரு திருமணம் என்றால், தலை தாழ்ந்து நிற்பது போல, அவளுக்கு வெறுப்பாக இருந்தது.

கூடவே வந்தனாவுக்கு இன்னொன்றும் தோன்றியது.

சுந்தர் அவனுடைய உயிர் நண்பன்! கூடவே நண்பன் வாழ்வில், நந்தகுமார் தனியன் ஆவதால் ஏற்படக் கூடிய பிரச்சினையும் தானாக விலகுமே.

ஆனால், உள்ளூர நேசம் இல்லாமல், அந்த நேரத்தில் தோன்றிய இரக்கத்தில் நடக்கும் திருமணம் எப்படி நிலைக்கும்?

நிலைக்கலாம். இந்த எட்டு மாதங்களைப்போலவே, இன்னமும் வாழ்க்கை தொடரலாம்! அவளது ரோஷம் தவிரப் பெரிதாக பிரச்சினை எழ வழியில்லை!

சொல்லப் போனால், தன்மானத்தை விழுங்கிக் கொண்டால், அவளுக்கு இது ஒரு வரமே என்று கூடக் கூறலாம்!

ஆனால், நந்தனுக்கு அப்படி இராது! அவனுடைய பெற்றோர் வெறுப்பு நிரந்தரம் ஆகிவிடும். எத்தனையோ விஷயங்களில் மகனுக்கு விட்டுக் கொடுத்த அவனுடைய தந்தை இந்த முறை எதற்காக அவனை வீட்டை விட்டு வெளியேறச் சொன்னார்? அவளை மணந்ததற்காக மட்டும்தானே?

விதி வசத்தால், அவளுக்குத்தான் அந்த கொடுப்பினை இல்லை. அவனுக்கேனும் பெற்றோரின் அன்பும் அருகாமையும் கிடைப்பதற்காகவேனும், அவள் விலகிச் சென்றே ஆக வேண்டும்.

முடிவை எடுத்துவிட்ட வந்தனாவுக்கு, நந்தகுமாரின் முகத்தைப் பார்த்து, அதைச் சொல்லும் திடம் இருக்கவில்லை!

மடியில் கோர்த்திருந்த விரல்களைப் பார்த்தபடி, அவனுக்குப் பதில் சொன்னாள். ''இப்போதைக்கு எனக்குப் படிப்பும், வேலையும் அதில் பெரிய ஆளாக வருவதும் தான் முக்கியமாகத் தெரிகிறது. நந்தகுமார், தயவு பண்ணி நம் ஒப்பந்தத்தை மீறி, எதையேனும் பேசி, அதை மறுக்க வேண்டிய கட்டாயத்தை, எனக்கு ஏற்படுத்தாதீர்கள்!'' என்றாள் மெல்லிய குரலில், தெளிவாக.

சற்றுத் திகைத்தாற்போல பார்த்துவிட்டு ''உன்னிஷ்டம்'' என்று விட்டுக் கொடுத்தான் நந்தகுமாரன். நான்

யாரையும் எதிலும் கட்டாயப்படுத்தியது கிடையாது வந்தனா. ஆனால், நீ அமைதியாக இருந்து, யோசித்துப் பார். இது நல்லது என்று உனக்கே புரியும்! முடிவை மாற்றினால், சொல்லத் தயங்க வேண்டாம்'' என்ற தோடு, இந்தப் பேச்சை அவன் நிறுத்திக் கொண்டான்.

இப்படி ஒரு பேச்சு அவர்களிடையே வரவே இல்லை போலக் காட்டிக்கொண்டு, சாதாரணமாகப் பழகத்தான் இருவருமே ஆசைப்பட்டனர்.

இருவருமே உலகமறியாத சின்னப் பிள்ளைகள் அல்ல. இளமைப் பருவத்தினரே என்றாலும் ஒவ்வொரு வகையில் அனுபவ முதிர்ச்சி உடையவர்களே.

எனவே, இதை ஒதுக்கிவிட்டு இயல்பாக வாழ முடியும் என்று நம்பினார்கள்.

ஆனால், குரங்கை நினைக்காமல் மருந்து சாப்பிட்டவனின் கதை போல, இருவரும் அதற்கு மிகவும் சிரமப் பட நேர்ந்தது. முன்போல் இயல்பாகப் பேசிக் கொண்டிருக்க முடியாமல், அடிக்கடி பேச்சு நின்று போயிற்று!

மௌனம் நீடிக்கவே, பசுபதிக்கு ஏதாவது உதவி தேவைப் படும் என்று, நந்தகுமார், நண்பனை நாடிச் சென்றான். முன்னிரவானால் 'வாக்' போனான்.

பாடம் அதிகம் என்று, வந்தனா பெரும்பாலும் அறைக்குள் புகுந்துகொண்டாள்.

கண் சிவந்து குரல் 'ஞஙணநமன' போட்டதற்கு, இரவு முழுதும் விழித்திருந்து பாடத்தை படித்ததன் விளைவு என்று தானாகவே காரணம் சொன்னாள்.

உடம்பு முழுதாகக் குணமடையாதபோதே, ''ஓய்வின்றிப் படித்து, சளி திரும்பப் பிடித்துவிட்டது'' என்றாள்.

''டாக்டரிடம் போகலாமா?'' என்று அவன் கேட்டதற்கு, ''இரவு தூங்கி ஓய்வெடுத்தாலே சரியாகிவிடும்'' என்று மறுத்தாள்.

''உன் விருப்பம்'' என்று தலையாட்டிவிட்டுப் போனான் அவன்.

வெளிநாட்டுப் பயணம் முடிந்து, பிரகாசம் வீடு திரும்பி விட்டதால், அவரைச் சந்திக்க தன் தந்தை செல்லப் போவதாக, மனோகரி ஓர் அவசரச் செய்தி அனுப்பினாள்.

''என்னை மீறி என்ன மச்சி நடக்க முடியும்? சும்மா பயப்படக் கூடாது என்று தங்கச்சியிடம் சொல்லு'' என்று செல் செய்தியைத் தாக்கி வந்த நண்பனிடம் நந்தகுமாரன் கூறினான்.

அதுவே சரியாக ''ஏழெட்டு மாதங்களாக, அதே வீட்டில் அமைதியாகக் குடும்பம் நடத்துகிறார்கள். பிரச்சினை என்று, வெளியே வந்தால், அப்போது பார்க்கலாம், மகனே என்றாலும், நாமாக அவன் குடும்பத்தில் மூக்கை நீட்டுவது நாகரீகம் இல்லை'' என்று அவனுடைய தந்தை சொல்லிவிட்டதாகத் தெரிய வந்தது.

சே, இந்த மனிதர் பேச்சை நம்பி, என்னென்னவோ கோட்டை கட்டினேனே என்று சுகந்தி கொதித்தாளாம்!

ஆனால், மனோகரியும், சுந்தரும் ஆறுதலாக மூச்சு விடும் முன்னரே, வேறு மாப்பிள்ளை பார்ப்பதில் பெற்றோர் தீவிரமாக முனைந்திருப்பதாக, மனோகரி அடுத்த செய்தியை அனுப்பி, எல்லோரையும் கவலைப்பட வைத்தாள்.

குழப்பமும், எரிச்சலுமான இந்த நேரத்தில் ‘விடியக் கறுக்கலில் விடிவெள்ளி முளைத்தது’ என்பார்களே. அதுபோல, சுந்தர் முயன்று கொண்டிருந்த வெளிநாட்டு வேலை அவனுக்குக் கிடைத்தது. மாதச் சம்பளமே, லட்சங்களில்!

அப்புறம் தடையென்ன? கிடுகிடுவென்று எல்லாமே வேகவேகமாக நடந்தன.

பெற்றோரிடம் சுந்தர் மனம் திறந்து பேசி, அவர்கள் சம்மதத்துடன், மனோகரி வீட்டில் தெரிவிக்க, மனோகரி யுடைய தமக்கைகள் வெளிநாட்டிலிருந்து, தங்கையின் காதல் பற்றிப் பெற்றோரிடம் கூற, கூடவே லண்டன் மாப்பிள்ளை என்றதும், அங்கேயும் சம்மதம் கிடைத்தது.

தள்ளிப் போட்டு, மறுபடியும் ஏதாவது தகராறு ஆகி விடக் கூடாது என்று, மனோகரியுடைய பெற்றோர், சீக்கிரமே திருமணத்துக்கு நாள் குறித்தார்கள்.

இந்த உலகத்தில்தான் இருக்கிறோமா என்பது போன்ற மயக்கம், மனோகரிக்கு!

சுந்தருக்கும் அப்படித்தான்.

நண்பர்கள் இருவரும், வந்தனாவும் கூட, மணமக் களை ஒரேடியாகக் கேலி செய்து நகைத்தார்கள்.

இவ்வளவு கோலாகலத்துக்கும் நடுவில், மாப்பிள் ளையே கிடைத்துவிட்ட போதும், மனோகரியுடைய அன்பை சுகந்திக்கு மட்டும், இரண்டு பேரிடம் உள்ளூர வன்மம் இருந்தது. அவர்களை வருத்தப்படுத்தாமல் எப்படி விடுவது?

அழகான தன் பெண்ணை மறுதலித்து மணக்கும் அள வுக்கு, அந்தப் பெண் என்ன உயர்த்தி என்பது, வந்தனா விடம்.

திருமணத்துக்கு அழைக்கவென்று வந்து ''புருஷன் பொண்டாட்டி சந்தோஷமாக சேர்ந்து வாழ வேண்டும் என்று, எங்கள் மனோவுக்கும் பாஸ்போர்ட் விசா எல்லாம் எடுத்துவிட்டோம். கல்யாணம் ஆகிவிட்டால் அதது ஒழுங்காக நடந்து குழந்தை குட்டி என்று பிறந்தால் தானே, அது கல்யாணம் போல நன்றாக இருக்கும்?'' என்று கூறி, வந்தனாவின் முகக் கன்றலைப் பார்த்து ரசித்துவிட்டுப் போனாள்.

அதே போல பிரகாசம் தம்பதியிடமும் அவளுக்கு ஆத்திரம் இருந்தது.

மகள் ஆசைப்பட்ட பையன் வேறு மனிதன். அவனும் மற்ற மருமகன்களுக்குக் குறைந்தவன் அல்ல என்பதெல்லாம் அவளுக்குத் திருப்திதான்.

ஆனாலும் பெண்ணைப் பிடித்தால் சட்டு புட்டுன்னு மகனைக் கூப்பிட்டு, அதட்டி, உருட்டித் திருமணத்தை முடிக்காமல், அவனைக் கை நழுவ விட்டது ஒரு தப்பு என்றால், அவனது வாழ்க்கை சரியில்லை என்று, அந்த வந்தனாவுக்குக் கஷாயம் கஞ்சியெல்லாம் வைத்துக் கொடுத்துக் கண்டுபிடித்துச் சொன்ன பிறகாவது, அதைச் செய்திருக்க வேண்டாமா? அப்போதும், நாகரீகம் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதா?

அங்கேயும் ஒரு குத்துக் குத்த வேண்டாமா? அங்கே வீட்டுக்குள் போவதற்குத்தான், திருமணத்துக்கு அழைக்கும் சாக்கு இருக்கிறதே!

கணவனும், மனைவியுமாக ராமலிங்கம் தம்பதியை அன்பாகவே வரவேற்றார்கள்.

''அழகான குணவதி. சந்தோஷமாக வாழ வேண்டும்'' என்ற மனமார ஆசீர்வதித்தார் பிரகாசம்.

இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை! அந்த அழகான குணவதி எங்கோ போய் சந்தோஷமாக வாழ, இவர் என்ன சொல்வது?

''என் மகள் நன்றாகத் தானுங்க இருப்பாள். அந்த லண்டன் ஊரிலே வெய்யில் சூடே இருக்காதாமே! இன்னும் வெள்ளையாகி வருவாள்'' என்றாள் சுகந்தி பெருமையுடன்.

அத்தோடு நில்லாமல் ''நல்ல மனதோடு சொல்றீங்க. பதிலுக்கு நானும் ஏதாவது செய்ய வேண்டாமா? உங்களைக் கொஞ்சம்... கொஞ்சமென்ன, ரொம்பவே எச்சரிக்கை செய்ய வேண்டியிருக்கிறது. அங்கே, உங்கள் பையன் வீட்டிலே, என்னமோ பெரிய்ய தப்புங்க. அந்தப் பொண்ணு படிக்க வேணும் என்று சொல்லிச் சொல்லி, எந்த வித சந்தோஷமும் இல்லாமல் தம்பியை ஏமாற்றிக் கொண்டு இருக்கிறது போலத் தெரியுது. எட்டு மாசம் ஆகுதே. ஒரு புழுபூச்சி உண்டானதாகத் தகவல் உண்டா? அக்கம் பக்கம் கேட்டாலும், ஒரு மாதிரிதான் சொல்லுகிறார்கள். படிப்பு படிப்பு என்று பிள்ளையைக் காத்திருக்க வைத்துவிட்டுப் படிப்பு முடிந்ததும், நம்ம பிள்ளையை அம்போ என்று விட்டுவிட்டு, வேலை கிடைக்கிற இடத்துக்கு, அவள் தனியாகப் பறக்கப் போகிறாள். கறிவேப்பிலைக் கன்று போலப் பாவம். உங்களுக்கும் ஒரே பிள்ளை! நொந்து நூலாகி, தேவதாஸ் போல, தண்ணியில் முழுகி வீணாகிவிடாமல், இப்போதே போய்க் காப்பாற்றுங்கள். நமக்கு ரொம்பவும்

வேண்டியவர்கள் என்பதால் சொன்னேன். இல்லா விட்டால், அடுத்த வீட்டு விவகாரத்தில் நான் வாயே திறக்க மாட்டேங்க!'' என்று மிகுந்த கரிசனம் காட்டி, ஆலோசனை கூறினாள்.

இருவரையும் குறைந்தது தாயார்க்காரியையாவது பயமுறுத்தி விட்டோம் என்று தோன்றியதும், ''நேர மாயிற்று, இன்னும் நிறையப் பேரை, அழைக்கப் போக வேண்டும். வரட்டுமா?'' என்று கிளம்பினாள்.

திரும்பிச் செல்லும் போது ''அழைக்கப் போனோமா, வந்தோமா என்று இல்லாமல் உனக்கு எதற்கு, அந்தப் பையன் பேச்சு?'' என்று லேசாகக் கண்டிப்பது போல, ராமலிங்கம் கேட்டார்.

''அதில்லைங்க. இவர்கள் பாட்டிலே நாகரீகம் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தால், ஒரு நல்ல பையனின் வாழ் வல்லவா, வீணாகிப்போகும்? அதனால்தான் சொன்னேன்'' என்றாள் சுகந்தி சாதுபோல.

உள்ளூர அவளுக்கு ஒரே எக்களிப்பு!

இனி, இவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். எப்படி யாவது, அவர்களுடைய மகனை, வந்தனாவிடம் இருந்து பிரித்துக் கூட்டி வந்து விடுவார்கள், வந்தனா, தனி மரமாகிவிடுவாள். மனோகரியை ஒதுக்கி, அவள் இடத் துக்கு வந்ததற்குச் சரியான தண்டனை!

ஓரளவு சுகந்தி சொன்னது சரியாக, நந்தகுமாருடைய பெற்றோருக்கு மகனது வாழ்வு பற்றிய யோசனை வந்தது.

ஆனால், சுகந்தி சொன்ன மாதிரியாக அல்ல. தேவ தாஸ் போல மகன் 'தண்ணி' கேஸ் ஆகிவிடுவான் என்று

அவர்கள் அஞ்சவில்லை. அந்த வகையில் மகனின் மன உறுதியில் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது.

வேறு ஏதோ காரணத்தினால் இப்படித் திருமணம் செய்திருக்கிறான் என்பது, ஏற்கனவே அவர்கள் இருவருமாக கலந்து ஆலோசித்ததின் முடிவும் தான்.

ஆனால், பக்க விளைவு ஏதும் ஏற்பட்டிருக்குமோ என்று ஒரு கலக்கம் அவர்களுக்கு இப்போது தோன்றியது.

''பார் வசு. உன் பையனிடம் பாதிப்பு நிச்சயமாக இருக்கிறது. இதுவரை, அது நல்ல விதமான பாதிப்பு தான். உடல் வணங்கி, மனம் வணங்கி, இத்தனை மாதங் களாகப் பொறுப்பாக ஒரு வேலையைத் தொடர்ந்து செய்கிறான். அதையும் நன்றாகச் செய்து, ஊக்க நடவடிக்கையாக ஊதிய உயர்வும் பெற்றிருக்கிறான் என்று கேள்விப்பட்டேன். அவனிடம் நாம் ஆசைப்பட்ட பொறுப்பு, மாற்றம்! அந்த வகையில் அந்தப் பெண் நல்லதுதான் செய்திருக்கிறாள். ஆனால் நாம் ஆசைப் பட்ட பேரன் பேத்தி? அவளுக்கு அந்த எண்ணமே இல்லை என்றல்லவா, தெரிகிறது!

''அந்த அம்மா சொன்னது போல, நந்து தேவதாசாகி விடமாட்டான். ஆனால் அவளைத் தவிர, வேறு ஒருத் தியை மணக்க மறுத்துவிடலாம். அதனால், அவன் ஒரே யடியாக அவளிடம் மயங்கித் தொலைக்குமுன், நாம் விரைந்து நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இனியும் அவனாக வரட்டும் என்று ஒதுங்கியிருப்பது தவறு'' என்றார் பிரகாசம்.

சொன்னபடி, அவர் விரைந்து நடவடிக்கை எடுத்ததன் விளைவாக. இரண்டே நாட்களில், செல்லுமிடம்

சொல்லாமல், வந்தனா அந்த வீட்டில் இருந்து வெளி யேறிப் போனாள்.

அவன் வரும்போது வந்தனா வீட்டில் இல்லாததை, நந்தகுமாரன் பெரிதாக நினைக்கவில்லை. அவளது வகுப்புகளே, அவற்றை நடத்தும் பேராசிரியர்கள் வரும் நேரத்தைப் பொறுத்தது. அத்தோடு, இன்டர்நெட், வாசகசாலை வேலைகளும், அவளது கல்வியுள் அடக்கம்.

எனவே அவள் இல்லாததை, அவன் பெரிதாக எடுத்துக் கொள்ள வழியில்லை.

ஆனால் அப்படி அவன் சாதாரணமாக நினைத்து விடக் கூடாது என்பதற்காக ஹாலின் சிறு மேஜை மீது, ஒழுங்காக மடிக்கப்பட்டிருந்த இரு காகிதங்களை, வந்தனா வைத்துவிட்டுப் போயிருந்தாள்.

சிறு புருவச் சுளிப்புடன் அந்தக் காகிதங்களைப் பார்த்தான் நந்தகுமாரன்.

ஒன்று என்றால், ஏதோ காரணமாக எங்கோ சென்றிருப் பதை, அல்லது ஏதாவது தேவையைத் தெரிவிக்கக் கூடும். ஆனால் இரண்டு?

உள்ளூர உறுத்தலுடன் அவைகளை எடுத்துப் பார்த்தான். அவனது உறுத்தல் நியாயப் படுத்தப்பட் டிருந்தது.

ஒன்று கடிதம்.

அதில், அன்றுவரை, அவளுக்காக நந்தகுமாரன் செய்த உதவிகளுக்காகவும், செலவு செய்த தொகைக்கும் நெஞ்சார்ந்த நன்றியை, வந்தனா முதலில் தெரிவித்திருந் தாள். தொடர்ந்து மனோகரி, சுந்தர் திருமணத்தின்

மூலம், அவர்களது திருமண ஒப்பந்தத்தின் நோக்கம் நிறைவேறிவிட்டதால், ஒப்பந்தம் முடிவுக்கு வருவதாகக் குறிப்பிட்டாள். எனவே, அதற்கு மேல் அவனுக்குப் பாரமாக இருக்க விருப்பம் இல்லாமல், வீட்டை விட்டு வெளியேறுவதாக எழுதி, மீண்டும் நன்றி தெரிவித்துக் கடிதத்தை முடித்திருந்தாள்.

முகம் இறுக, அடுத்ததைப் பிரித்தான், அவன்.

கிட்டத்தட்ட அவன் எதிர்பார்த்த வரிகளே! ஆனால் சில சட்டப்பூர்வமான வார்த்தைகளுடன் அவர்களது திருமணத்தை ரத்து செய்வதற்கு முழுச் சம்மதம் என்று எழுதிக் கையெழுத்திட்டிருந்தாள்.

இவள் சம்மதித்துவிட்டால்?

சீறிச் சினந்து நின்ற நந்தகுமாரனின் முகத்தில் சற்று நேரம் கொலைவெறி தாண்டவமாடியது. அப்போது அவள் அங்கே இருந்திருந்தால், வார்த்தைகளாலேயே கூறு கிழித்திருப்பான்! ஒருவேளை, கையைக் கூட நீட்டியிருப்பானோ, என்னவோ!

எதுவானாலும், நேருக்கு நேர் நின்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கலாமே!

என்னவோ, மர்மக் கதையில் வருகிற மாயக் கன்னி மாதிரி, அதென்ன, சொல்லாமல் கொள்ளாமல் போவது?

அவள் அப்படிப் போனால், அவனால் கண்டுபிடிக்க முடியாதாமா? விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறியிருக் கிறது? அவளது செல், லாப்டாப்! சபாபதி சாரிடம், அவளது ஈமெயில் ஐடி இருக்குமே! எத்தனை விதத்தில் அவளைக் கண்டுபிடிக்கலாம்!

கடிதம் எழுதுகிறாளாம், கடிதம்!

ஒன்று தோன்ற, அவனது செல்லில் அன்று வந்த 'மெஸேஜ்' களை எடுத்துப் பார்த்தாள்.

அவனது உள்ளுணர்வு சோடை போகவில்லை.

அவற்றுள் ஒன்று மனோகரி அனுப்பியது.

அவனுடைய தந்தை வீட்டுக்கு அழைப்பிதழ் கொடுக்கப் போய்விட்டு வந்து, தாயார், அவளுடைய தோழியிடம் பெருமை பேசியது பற்றி, மனோகரி செய்தி அனுப்பியிருந்தாள். ''உங்கள் பெற்றோர் மூலமாகவே, உங்களையும் வந்தனாவையும் பிரிக்க ஏற்பாடு செய்து விட்டதாகப் பேச்சு. கவனமாக இருங்கள். ஏனெனில் எங்களுக்கெல்லாம் வேறு ஆசை!'' என்றிருந்தாள்.

பெரிய ஆசைதான் என்று, உள்ளூர எரிச்சல் மண்டியது.

ஆனால், எந்தத் திசையில் போவது என்று யோசித்தவனுக்குத் தந்தையின் பெயர் வழிகாட்டியது, கூடவே, வந்தனாவின் சட்டப்பூர்வமான வார்த்தைகளும்!

அவனுடைய தகப்பனார் நியாயம் தெரியாதவர் அல்ல. மனிதாபிமானமும் உண்டு. எக்கேடும் கெட்டுப்போ என்று வந்தனாவை விரட்டியிருக்க மாட்டார். இன்னொரு நல்ல இடம் பார்த்துக் கொடுத்துதான், அவளை இந்த வீட்டிலிருந்து அகற்றியிருப்பார்.

உடனேயே தந்தையுடைய பிஏவை செல்லில் பிடித்தான்.

''தாஸ் அங்கிள், நான் நந்தகுமார் பேசுகிறேன்...'' என்று தொடங்கினாள்.

அவன் பேசியதைக் கேட்டுவிட்டு ''ஐயா, இதெல்லாம் எனக்கென்னப்பா, தெரியும்? நான், கொடுக்கிற

சம்பளத்துக்கு ஊழியம் செய்கிறவன். குடும்ப விஷயம் என்றால், நீ உன் அப்பாவைத்தானே கேட்க வேண்டும்?'' என்றார் தாஸ்.

''கேட்பேன் அங்கிள். தேவைப்பட்டால், என் அப்பாவிடமே கேட்பேன். ஆனால், அதன்பிறகு நாங்கள் ஒருவருக்கொருவர் முகம் பார்த்துப் பேச முடியாமல் போய்விடும். பரவாயில்லை என்றால் சொல்லுங்கள். நான், அவரிடமே கேட்டுக் கொள்கிறேன். ஆனால் தெரியாது என்று மட்டும் சொல்ல வேண்டாம். ஏனென்றால் முப்பது ஆண்டுகளாக அப்பாவின் வலது கை நீங்கள். நீங்கள் அறியாமல் எதுவும் நடந்திருக்காது என்று எனக்குத் தெரியும்!'' என்றான் சின்னவன்.

தாஸ் யோசித்தார்.

நந்தகுமாரன் பிடிவாதக்காரன், பிரகாசமும் ஒரேடியாக அழுத்திச் சொல்லவில்லை! சும்மா கேட்டவுடன் எளிதாகச் சொல்லிவிட வேண்டாம் என்று தான் கூறியிருந்தார். ஒருவேளை, அவரது இந்த நடவடிக்கையின் நோக்கமே வேறாக இருக்குமோ?

யோசித்து முடித்துவிட்டு அவர் சொன்ன விவரங்களை, அவன் குறித்துக் கொண்டான்.



# 12

விசாலமான பெரிய அறை! ஏசியின் இதக் குளிர்' அட்டாச்டு பாத்ரூம்'' டீவிகூட இருந்தது.

நந்தகுமாரனுடைய தந்தை ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிற அறை. மிகவும் வசதியாகத்தான் இருந்தது.

ஆனால், இத்தனை வசதிகள் இருந்தும், வந்தனாவால் நிம்மதியாக ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. அங்கே, நந்தனோடு பேசிக் கொண்டே கூட, எல்லா வேலையும், தங்கு தடையின்றி நடக்கும்.

லாப்டாப்பை வைத்துக் கொண்டு சற்று நேரம் போராடிப் பார்த்துவிட்டு எடுத்து வைத்துவிட்டாள்.

நந்தகுமாருடைய தந்தை, அவளைப் பற்றி எல்லாம் விசாரித்து விட்டுத்தான். அவளை தேடி வந்திருந்தார். பரிவாகத்தான் பேசினார்.

''உனக்கு என்னம்மா வேண்டும்? இந்தப் படிப்பை முடித்து, நீ உன் காலில் நிற்க வேண்டும் என்பதுதானே? அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். தயவு பண்ணி விலகிவிடு. என் மகனது நல்ல வாழ்வை. முக்கியமாகக் குடும்ப வாழ்வைக் கெடுக்காதே. எங்களுக்குக் குலம் தழைக்க வேண்டும்'' என்றார் அவர்.

'எப்போதும் இப்படியே இருப்போமா' என்று நந்தன் கேட்டது. அவளுக்கு நினைவு வந்தது.

ஆனால், அது அவள் மேல் இருந்த இரக்கத்தில் சொன்னது. நண்பனின் வாழ்வுக்காகவும், சுந்தரின் பிரச்சினை தீர்ந்துவிட்ட இப்போதும், அதே எண்ணம் இருக்குமா என்பது சந்தேகமே.

அத்தோடு வெறும் இரக்கம். ஒரு திருமண வாழ்வுக்கு அடிப்படையாக இருக்கக் கூடாது! எனவே, அது பற்றி, இவரிடம் சொல்வது கூடத் தவறு!

வந்தனா பேசாதிருக்க, அவள் முகத்தில் யோசனையைக் கண்ட, பிரகாசம் மேலும் பேசினார்.

''உனக்கு வேறே பணம் ஏதும் வேண்டுமென்றால்...'' என்று தொடங்கியவர். அவள் முகம் மாறிய விதத்தைப் பார்த்துவிட்டு பேச்சை நிறுத்தினார்.

ஒரு சிறு அமைதியின் பின் ''எனக்கு வேறு பணம் வேண்டாம், அங்கிள். ஆனால், இந்தப் படிப்பு முடிந்து, வேலை கிடைத்துச் சம்பளம் வருகிறவரை, எனக்காக செலவுக்கு, உங்கள் பணம் எனக்குக் கட்டாயம் தேவைப் படும். ஏனெனில், அப்பா சொத்து எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை'' என்று காரணம் கூறினாள் அவள்.

''கட்டாயம் தருகிறேனம்மா'' என்றார் பிரகாசம். ''கூடவே உன் தந்தையுடைய சொத்தில் உன் பங்கு கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்கிறேன்'' என்றபோது, அவளுக்குத் தந்தையின் இழப்பு பன்மடங்காகத் தாக்கியது.

அவருடைய மகளே இல்லை போல, அவளை விரட்டினார்களே! சொத்து மதிப்புக்காக இல்லை என்றாலும், அவளுடைய தந்தையின் நினைவுக்காக...

''அது முடியுமா அங்கிள்? அப்பா இறந்த போது, அந்த கலக்கத்தில் அண்ணன்கள் கேட்ட எதெதிலோ கையெழுத்துப் போட்டு கொடுத்தேனே. என்னவென்று கூடத் தெரியாதே!'' என்றாள் அவள்.

''என்ன செய்திருந்தாலும், ஒன்றுமே கிடையாது என்று மறுக்க, யாராலும் முடியாது. அதையெல்லாம் நம் வக்கீல் பார்த்துக் கொள்வார். அதுவரை, உன் செலவை,

நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார் நந்தகுமார னுடைய தந்தை.

அதன்படி, இந்தப் பெண்கள் விடுதியில் இடம் எடுத்து, அவள் பெயரில் ஒரு, பெரிய தொகை பாங் கிலும் போட்டுக் கொடுத்தார்.

''இவ்வளவு வேண்டாம். எனக்குத் தேவைப்படாது'' என்று அவள் மறுத்ததற்கு ''நீ முதல் மாதச் சம்பளம் வாங்கிய மறுநாள் மீதம் இருப்பதை திருப்பிக் கொடும்மா. வாங்கிக் கொள்கிறேன். அதுவரை இப்படியே இருக் கட்டும்'' என்று முடித்துவிட்டார்.

பிரதியாக, அவருடைய மகன் வாழ்வில் இருந்து விலகி விடுவதாகச் சொல்லி, அவளும் கிளம்பிவிட்டாள்.

சரியாகச் சொல்வதானால், எல்லாம் அவளது முடிவு தான். எதற்கும், யாரும் கட்டாயப்படுத்தவில்லை. அத னால், அவள் வருத்தப்படவும் எதுவும் இல்லை! மேலும் தந்தையின் சொத்து கூட, அனேகமாகக் கிடைக்கக் கூடும் என்று, மகிழ்ச்சிதான் அடைய வேண்டும்.

அவனுக்கும் ஏற்றவளாக ஒரு பெண்ணை மண முடித்து... அவனும் ஏதோ நல்லபடியாக வாழப் போகி றான். சரியாகப் பார்த்தால், அதற்கும் சந்தோஷம்தான் பட வேண்டும்!

ஆனால், அவளால் முடியவில்லை! இதயத்தின் மீது, ஒரு பாராங்கல்லைத் தூக்கி வைத்தது போல, மனம் கசங்கிக் கண்ணீர் தான் வந்தது.

கடந்த பல நாட்களாகவே அப்படித்தான் 'இம்' எனு முன் அழுகைதான் வந்தது. இன்று இன்னும் அதிகமாக!

அழக்கூடாது, அழுதால் உள்ள மனபலமும் போய் விடும் என்று, சற்று நேரம் கண்ணீரை அடக்க, வந்தனா வெகுவாக முயன்றாள்.

ஒரு கட்டத்தில் இந்த முயற்சி தோற்று, தன்னை மீறிப் பொங்கி வடித்த கண்ணீரைத் துடைக்கக் கூட இல்லாமல், அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

எவ்வளவு நேரம் அழுதாளோ? அறையின் கதவு தட்டப்படும் ஒலியில், ஒரு கணம் ஒன்றும் புரியாமல் திகைத்துப் போனாள்.

சுற்றுப்புறம் புரிந்ததும், யாராக இருக்கும், இப்படி அழுதுகொண்டு இருப்பதைப் பார்த்தால் என்ன நினைப் பார்கள். என்பதெல்லாம் தோன்றியது.

''அம்மா!'' என்ற அழைப்புடன் மறுபடியும் கதவு தட்டப்பட்டது. குரல். அவளது பொருட்களை, அறை யில் கொண்டு வந்து வைத்த, அட்டெண்டர் பொண் ணுடையது.

''இ... இதோ வருகிறேன்'' என்று குரல் கொடுத்து விட்டு, குளியலறைக்கு ஓடிப்போய் முகத்தில் கொஞ்சம் தண்ணீரை அடித்துக் கழுவித் துடைத்தவாறே வந்து கதவைத் திறந்தாள்.

''ஏம்மா, இவ்வளவு நேரம்? தூங்கிட்டு இருந்தியா? வா, உன்னை ஆபீசுக்குக் கூட்டி வரச் சொன்னாங்க'' என்றாள் அவள்.

எதற்காக என்று கேட்கும் ஆவலோ, ஆர்வமோ இல் லாமல், அட்டெண்டரைப் பின்தொடர்ந்து போனால், அங்கே அவளுக்காகக் காத்திருந்தவன் நந்தகுமாரன்.

நந்தகுமாரனா என்ற திகைப்பும் அப்பாடி நந்தகுமாரன் என்ற ஆறுதலுமாக, அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள் அவள்.

சற்றே கடுத்த முகத்துடன் ''என்னம்மா, மணமாகா தவள், செல்வி வந்தனா என்று விடுதியில் சேர்ந்திருக் கிறாய். இவரானால், பதிவுத் திருமணப் பத்திரத்தின் நகலையே காட்டுகிறாரே! உங்கள் குடும்பச் சண்டையில் கோபித்துக் கொண்டு வந்து தங்குவதற்கு இதுவா, இடம்? இங்கே திருமணமானவர்களுக்கு இடம் கிடையாது, கிளம்பு'' என்றாள் விடுதிப் பொறுப்பாளராக இருந்த பெண்மணி.

கொண்டு வந்த பொருட்களை எடுத்துக்கொண்டு வீடு வந்து சேரும்வரை, நந்தகுமாரோ, வந்தனாவோ, எதுவும் பேசவில்லை.

அவளைப் பொறுத்தவரையில் அவன் அருகாமையே போதும்போல, வேறு எதையும் நினைக்கக்கூட அவ ளுக்கு மனமில்லை.

அவனுக்குக் கோபமோ, தாபமோ எதுவானாலும் தாங்கிக் கொள்ளலாம். இப்போதைக்கு அவன் பக்கத் தில் இருந்தால் போதும்! அதை இழந்துவிட்டு, இவ் வளவு நேரம் பட்ட துன்பமும் போதும்!

ஆனால், இப்படி அவனோடு வந்துவிட்டாளே! அவ னுடைய தந்தை என்ன நினைப்பார்! அவரிடம் என்ன சொல்வது?

அதற்குமுன், இவனிடம் என்னவென்று சொல்வது?

டாக்சிக்கு பணம் கொடுத்து அனுப்பிவிட்டு, அவளது இரண்டு பைகளையும் உள்ளே கொணர்ந்து வைத்துச் சாத்திய பிறகே நந்தகுமாரன், அவளிடம் பேசினான்.

''நாம் இருவரும் சட்டப்படியாக கணவன் மனைவி. ஆனால் நீ மனைவியாக இருந்திருந்தால், நான் அப்படி நடத்தியிருந்தால், உன்னால் இப்படி போக முடிந்திராது அல்லவா? நல்லது, இனிமேல் போக முடிகிறதா என்று பார்ப்போம்'' என்று அவளைத் தன்புறம் இழுத்து இறுக அணைத்தான்.

திட்டப் போகிறான், கத்தப் போகிறான், தந்தை மகன் உறவைப் பாதிக்காமல் இவனிடம் என்ன சொல்வது என்று யோசித்துக் கொண்டிருந்த வந்தனா, எதிர்பாராத இந்த அணைப்பில் முதலில் உணர்ந்தது, அதிர்ச்சியே!

சில கண நேரத் திகைப்புக்குப் பின், அவளும் நெகிழத் தொடங்கிபோது, தலை நிமிர்த்தி, ''பிடிக்க வில்லையா?'' என்று கம்மிய குரலில் கேட்டான் அவன்.

அதைவிடத் தாழ்ந்த குரலில் ''பிடித்திருக்கிறது'' என்று சொல்லி, அவனது தோள் வளைவில் முகம் பதித்து, இம்முறை அவனைத் தழுவிக் கொண்டது அவள்.

அப்புறம் பிரியும் எண்ணமே இல்லாமல் இருவருமே ஒட்டிக் கொண்டனர்!

மெல்ல நேரம், காலம், மதியத்திலிருந்து எதையும் உண்ணாத பசி எல்லாம் நினைவு வர, சாப்பிட என்ன இருக்கிறது என்று தேடினார்கள்.

''ஒருதரம் சுந்தர் அண்ணன் கொண்டு வந்த முறுக்கு ஒரு டப்பாவில் கொஞ்சம் இருக்கும். ஆனால், யானைப் பசிக்குச் சோளப்பொரி மாதிரிதான் இருக்கப் போகிறது. வெளியே போய், ஏதாவது வாங்கி வருவோமா?'' என்று கேட்டாள் அவள்.

அவனுக்கு மனமில்லை ''போக வர எவ்வளவு நேரம் வீணாகும்!'' என்று மறுத்து, அவளது கையைப் பற்றி, அருகே இழுத்தான்.

''வீ....ண்? ஏ, போங்கப்பா. அப்புறம் இரவில் பசிக்குமே! நடு ராத்திரியில் என்ன கிடைக்கும்? பதி அண்ணனுக்கு உதவி செய்யவேனும் போயிருக்கலாமே! ஏதாவது சாப்பாடு தந்து அனுப்பியிருப்பார்கள்'' என்று அவள் சொல்லும்போதே, நந்தன் துள்ளி எழுந்தான்.

''போனேனே! அவன் அம்மா ஏதோ தந்தார்களே, வடை கறி... தோசை... என்றார்களே! இங்கே தான் எங்கேயோ போட்டேன். நீதான் எல்லாவற்றையும் மறக்கடித்து விட்டாயே. முதலில் ஒரு மாதிரி என்றால், இப்போது இன்னொரு மாதிரி'' என்று அவன் செல்ல குறை சொல்ல, ''போங்கள்!'' என்று முகம் சிவந்தபடியே தேடினால், திவானுக்கும், நாற்காலிக்கும் இடையே, சாதுவாகக் கிடந்தது சாப்பாட்டுப் பை!

நல்லவேளையாக, பாத்திரங்களின் மூடி எதுவும் திறக்கவில்லை.

அப்பாடி என்று இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

எப்போதுமே, பசுபதியுடைய தாயார் கொடுத்தனுப்புவது அளவு சற்று அதிகமாக இருந்து, கொஞ்சம் மீந்தும் போகும். ஆனால் அன்று மூக்கு பிடிக்க, ஒரு துணுக்கு மீறாமல், அவ்வளவையும் சாப்பிட்டு முடித்தார்கள்.

இடையே சிரிப்பு, சீண்டல், ஒருவரை ஒருவர் கண்டு கொள்ளும் ஆர்வம் என்று பொழுது பறந்தது.

இடையில் ஒரு சமயம் மட்டும் ''அங்கிள், உங்கள் அப்பா என்னைத் தப்பாக நினைப்பாரோ, நந்தா? அவரிடம் எல்லாவற்றுக்கும் தலையாட்டிவிட்டு, மறு படியும் உங்களிடமே வந்துவிட்டேனே! பேச்சுமாறிய தாக என் மேல் கோப்படுவாரோ?'' என்று வந்தனா கவலைப்பட்டாள்.

''கோபமா? என் அப்பாவா? இப்போது வீட்டிற்குப் போனால், அம்மாவை ஆலம் கரைக்கச் சொல்லுவார், பார்! குட்டையைக் குழப்பி மீன் பிடிக்கிறவர்! அவர் அனுமதி இல்லாமல், தாஸ் அங்கிள், உன் இருப்பிடத்தை எனக்குச் சொல்லி இருப்பாராக்கும்! அதனால் அவரைப் பற்றிய கவலையை விடு!'' என்றான் அவன்.

உடனேயே அவளைக் கைக்குள் இழுத்து ''இந்தத் தூண்டுதல், சீண்டி விடுதலுக்கெல்லாம் இடமே தேவை யில்லாமல், அன்றைக்கே உன்னை இப்படி அணைத் திருக்க வேண்டும்!'' என்றான் நந்தகுமாரன்.

''என்றைக்குப்பா?'' என்று கொஞ்சுதலாக வினவி னாள் வந்தனா.

''அதுதான், குளியலறையில் இருந்து, என்னைப் பார், என் அழகைப் பார் என்று வந்தாயே...'' என்று அவன் ராகம் இழுக்க, அவள் விலுக்கென நிமிர்ந்தாள்.

''ஏய்... அப்படிச் சொல்லக்கூடாது. நான் ஒன்றும் நீங்கள் இருப்பது தெரிந்து, வேண்டும் என்று வர வில்லை. அப்படிப் பார்த்தால், உங்களையும் தானே வேண்டும் என்று உள்ளே இருந்ததாக...'' என்று பதி லுக்கு அவள் தொடங்க, அவன் அவசரமாகக் குறுக்

கிட்டு "சரிசரி போகட்டும். அந்தப் பாயிண்டை விட்டு விடுவோம்" என்று ஒத்துக்கொண்டான்.

மீண்டும் அவளைக் கைக்குள் கொணர்ந்து, "சும்மா ஒரு பேச்சுக்கு சொல்கிறேன். அன்றே அணைத் திருந்தால்..." என்று அவன் தொடங்க, மறுபடியும் குறுக்கிட்டு, "கன்னம் பழுத்திருக்கும்?" என்றாள் அவள்.

"என்ன, என்ன? கன்னம் பழுத்திருக்குமா? ஓகோ, மேடம் என்னை அப்படி பலமாக அடித்திருப்பீர் களாக்கும்! சும்மா கதை விடாதேம்மா! அன்று மின் விளக்கு இல்லை என்று தைரியத்தில், நிலா வெளிச் சத்தில் என்னைப் பார்வையாலே முழுங்கிவிட்டு, முகம் சிவந்தாயே! அவ்வப்போது உணர்ச்சி வசப்படும் போது 'நந்தா' என்பது வேறு! இதை எல்லாம் அப்போதே யோசித்திருக்க வேண்டும்! ஒரு 'நந்தா'வில் திருமணத் துக்கே கேட்டேன்தான். என்றாலும், இப்போது, நீ பிரிந்து போன பிறகு தான் இதையெல்லாம் முழுசாகக் கண்டு பிடித்தேன்டா" என்றான் கை வளைவு இறுக.

"ஓஹோ! அப்படியானால் நான்தான் முதல்! புரிந்து கொள்ளுங்கள். எப்போதுமே, பெண்புத்தி, முன்புத் திப்பா!" என்று சொல்லி வந்தனா நகைத்தாள்.

ரசனையாக பார்த்துவிட்டு அவன் மறுத்தான் "அதெல்லாமில்லை, மேடம்! என் பாதிப்பு டிப்பார்ட் மென்டல் ஸ்டோரிலேயே தொடங்கி விட்டதாக்கும். அங்கே நீ தவிப்பை அடக்கிக் கொண்டு நின்றது சகிக் காமலும் தான்... உன்னை மணந்து, இங்கே கொண்டு வந்ததே! தெரிந்துகொள்!"

‘‘அப்போதே, எனக்கும் இருந்திருக்கும், நந்தா, மற்றபடி, எவளாவது சட்டப்படியான மனைவி என்ற பெயரில், இப்படி ஒரு முரடனுடன் ஒரே வீட்டில் வசிக்கச் சம்மதித்திருப்பாளா?’’ என்று சீண்டினாள்.

‘‘முரடா? எப்படியான முரடும்மா? ஆனால், இந்த முரடின் முரட்டுத்தனம் பிடிக்காமல் தான் இப்படி ஒட்டிக்கொண்டு கிடக்கிறீர்களாக்கும்?’’ என்று அவன் பதிலுக்கு கிண்டலாகக் கேட்க சிரித்தபடியே, இன்னமும் வாகாக, அவனோடு ஒட்டிக் கொண்டாள் அவள்.

# இருவரல்ல ஒருவர் என்று தெரியுமா!



ரமணிசந்திரன்